சிலப்பதிகாரம்

சொர்ணம்மாள் நினைவுச் சொற்பொழிவுகள்

பொ. திருகூடசுந்தரம், எம். ஏ., பி. எல்.

அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்
1969


முதற்பதிப்பு : 1967
இரண்டாம்பதிப்பு : டிசம்பர் 1969

சொர்ணம்மாள் சொற்பொழிவு — வரிசை 4

அண்ணாமலைப் பல்கலைக்கழக வெளியீடு

அண்ணாமலைப் பல்கலைக்கழகம்,
அண்ணாமலைநகர்.

சிவகாமி அச்சகம்,
அண்ணாமலைநகர்.



அண்ணாமலைப் பல்கலைக்கழக இணைவேந்தர்

ராஜா ஸர். மு. அ. முத்தையா செட்டியார் அவர்களுக்கு

இந்நூல் என் அன்புக்காணிக்கை.

— ஆசிரியர்

பொருளடக்கம்

முகவுரை

1962 ஆம் ஆண்டின் இறுதியில் அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தராயிருந்த உயர்திரு வி. சுப்பிரமணியம் அவர்கள், நான் அடுத்த ஆண்டில் அங்குவந்து சொர்ணம்மாள் நினைவுச் சொற்பொழிவுகளை நிகழ்த்தவேண்டுமென்று அழைத் தார்கள். அவ்வண்ணமே நான் 1963 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் சிலப்பதிகாரம் பற்றி மூன்று சொற்பொழிவுகள் செய் தேன். இந்தச் சொற்பொழிவுகளுக்குப் பல்கலைக் கழகத்தார் இப்போது இந்த நூல் உருவம் தந்துள்ளனர்.

அப்பொழுது அங்குப் பேராசிரியராய் இருந்தவரும் இப் பொழுது மதுரைப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தராயிருப்ப வருமான உயர்திரு தெ. பொ. மீனுட்சிசுந்தரனுர் அவர்கள் முதல் நாளிலும், பேராசிரியர் லெ. ப. கரு. இராமநாதன் செட்டியார் அவர்கள் இரண்டாம் நாளிலும், பேராசிரியர் கோ. சுப்பிரமணிய பிள்ளை அவர்கள் மூன்றும் நாளிலும் தலைமை தாங்கினுர்கள்.

பேராசிரியர் கோ. சுப்பிரமணிய பிள்ளை அவர்கள் தமது முடிவுரையில்,

"பாரதியார் 'நெஞ்சை அள்ளும் சிலப்திகாரம்' என்று பாடினுர். ஆனல் இவர்கள் மூன்று நாட்களும் பேசியதைக் கேட்ட பிறகு, நெஞ்சைக் கிள்ளும் சிலப்பதிகாரம் என்று கூறலாமோ எனத் தோன்றுகிறது. இவர்கள் கூறிய கருத்துக்க ளெல்லாம் புரட்சிகரமானவை. இதுவரை யாரும் சிலப்பதி காரத்தில் குற்றங் குறைகள் இருப்பதாக எண்ணியதில்லை. எண்ணினுலும் வெளியில் சொல்லத் துணிந்ததில்லை. இவர்கள் தமக்கு எது உண்மை என்று தோன்றுகிறதோ அதை அஞ்சாமல் கூறும் இயல்பினர். இவர்கள் கருத்துக்களை நாம் ஏற்றுக் கொண்டாலும், ஏற்றுக்கொள்ளாவிட்டாலும், அவை ஆராயத்

தக்கன. இவர்கள் நம்மிடம் வேண்டுவதும் அதுவே'' என்று கூறினார்கள்.

1960-ஆம் ஆண்டில் நான் மதுரையில் நடக்கும் ''தமிழ் நாடு'' என்னும் பத்திரிகையில் ''கண்ணகி செய்த தவறு'' என்னும் தலைப்பில் ஒரு கட்டுரை எழுதினேன்; அதை மறுத்துப் பேராசிரியர் அ. மு. பரமசிவானந்தம் அவர்கள் 'கண்ணகி செய்தது தவறு'? என்று எழுதினார்கள். நான் அதற்கு மறுப்பாகக் 'கண்ணகி செய்தது தவறே' என்னும் தலைப்பில் ஒரு கட்டுரை எழுதி அனுப்பினேன். அந்தப் பத்திரிகையின் ஆசிரியர் அதை வெளியிட மறுத்து எனக்கு எழுதிய கடிதத்தில் ''இரண்டாயிரம் ஆண்டுகளாகப் போற்றிவரும் ஒரு காவியத்தில் இப்பொழுது குற்றங்குறைகள் காண்பதா?'' என்று கூறினார்கள்.

அந்தக் கடிதத்திற்கு நான் எழுதிய பதிலில் ''இரண்டாயிரம் ஆண்டுகளாக நிலைத்து நிற்கும் ஒரு காவியம் இந்த அற்பத் திருகூடசுந்தரத்தால் வீழ்ந்து விடுமானால், வீழ்ந்துவிடத் தக்கதே'' என எழுதினேன். இதுவரை என் கட்டுரை பிரசுரிக்கப்படவில்லை.

இத்தகைய மனப்பான்மையை எண்ணித்தான் பாரதியார்

''ஏலும் மனிதர் அறிவை அடர்க்கும் இருள்கள் அழிகவே
எந்த நாளும் உலக மீதில் அச்சம் ஒழிகவே''

என்று பாடியுள்ளார்.

ஆதலால் அறிவை மட்டும் துணையாகக்கொண்டு, அறிவுக்கு முரணான உணர்ச்சிகளை அறவே அகற்றிவிட்டு, என் கருத்துக்களை ஆராயவேண்டுமென்று இந்த நூலைப் படிக்கும் அறிஞர்களை வேண்டிக்கொள்கிறேன்.

சென்னை,
29—5—67.

பொ. திருகூடசுந்தரம்

இந்நூல் பற்றிய கருத்துரைகள்

பேராசிரியர் தெ. பொ. மீனுட்சிசுந்தரனுர்

சொற்பொழிவுகளைக் கேட்டுக்கொண்டிருந்தேன். எதிர் பாராத புதிய கருத்துக்களின் வெள்ளம் எல்லோரையும் திக்குமுக்காடச் செய்தது. இந்நூல் ஆராய்ச்சிசெய் வோர்க்கு வழிகாட்டும்.

பேராசியர் லெ. ப. கரு. இராமநாதன் செட்டியார்

இந்நூலாசிரியர் தமக்குப் பொருத்தமானவை எனத் தோன்றுவதைத் தயங்காமல் எடுத்துரைக்கும் இயல்பினர். அதற்குச் சிறந்த எடுத்துக்காட்டு இந்நூல். நூலில் காணும் மேற்கோள்கள் இவர் புலமையை விளக்கும். இந்நூல் முழு வதும் ஒழுக்கத்தின் உயர்வை வற்புறுத்துவது சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது.

பேராசிரியர் கோ. சுப்பிரமணியம்

ஆசிரியர் தமக்குச் சரி என்று பட்டதைச் சொல்லத் தயங்க மாட்டார். அதற்குச் சிறந்த எடுத்துக்காட்டு இந் நூல், உழுதசால் வழியே உழாமல் சிந்தனையைக் கிளறிப் புதுக்கருத்துக்கள் காண்பார். திறனுய்வு முறை கோடாது ஆயுந்திறனைப் போற்றி வாழ்த்துவோமாக.

இந்நூல் பற்றிய கருத்துரைகள்

பேராசிரியர் [illegible]

[illegible]

பேராசிரியர் [illegible]

[illegible]

பேராசிரியர் [illegible]

[illegible]

முன்னுரை

பேராசிரியர் டாக்டர் ரா. பி. சேதுப்பிள்ளை அவர்கள் தம்முடைய அன்னையார் சொர்ணம்மாள் அவர்கள் பெயரால் அமைத்துள்ள சொற்பொழிவுகளை இந்த ஆண்டில் நிகழ்த்துமாறு என்னை இப் பல்கலைக்கழகத்தார் அன்புடன் அழைத்ததற்காக என் மனமுவந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

செந்தமிழ்ச் செல்வரான சேதுப்பிள்ளை அவர்கள், திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் "திக்கெலாம் புகழும் திருநெல்வேலி" என்று பாராட்டிய தென்பாண்டிச் சீமையில் பிறந்த பெரியார். பேராசிரியர், பெருநாவலர், இலக்கியச் செல்வர் என்று சென்னைப் பல்கலைக்கழகத்தாரால் பட்டம் அளிக்கப் பெற்றவர்.

"பொன் திணிந்த புனல்பெருகும்
பொருநை எனும் திருநதி"

என்று கம்பர்பெருமானால் சிறப்பிக்கப்பெற்ற தாம்பிரவருணி ஆற்றங்கரையில் நாங்கள் இருவரும் பிறந்தவர்கள். ஒரே கல்லூரியில் கல்வி பயிலாவிடினும் ஒரே காலத்தில் படித்தவர்கள்; நாங்கள் இருவரும் சட்டம் பயின்றபோதிலும் அதில் நாட்டம் கொள்ளாதவர்கள்; அவர்கள் தாய்மொழியின் பணியில் ஈடுபட்டார்கள்; அடியேன் தாய்நாட்டின் பணியில் ஈடுபட்டேன். நாங்கள் இருவரும்,

பெற்றதாயும் பிறந்த பொன்னாடும்
நற்றவ வானினும் நனிசிறந்தனவே

என்னுங் கொள்கையுடையவர்கள். அவர்கள் தாயார் பெயர் சொர்ணம்மாள் என்பதுபோலவே என் தாயார் பெயரும் சொர்ணம்மாள் என்பதே யாகும்.

சேதுப்பிள்ளை அவர்கள் என்னிடம் பேரன்புடையவர்கள். நான் சென்னைப் பல்கலைக்கழகக் கட்டிடத்தில் பதினைந்து ஆண்டுகளாகக் கலைக்களஞ்சியப் பணிசெய்துவந்த காலத்தில் அடிக்கடி தலைக்கூடி அளவளாவும் இன்பத்தை எனக்கு அள்ளித் தந்தார்கள். அவர்களுடைய புலமையில் ஆயிரத்தில் ஒரு பங்குகூட இல்லாதவனுயினும் அவர்களுடன் பேசும்போதெல்லாம்,

"தவலரும் தொல்கேள்வித் தன்மை யுடையார்
இகலிலர் எஃகுடையார் தம்முட் குழீஇ
நகலின் இனிதாயிற் காண்பாம் — அகல்வானத்து
உம்பர் உறைவார் பதி"

என்னும் நாலடிச் செய்யுளே என் உள்ளத்தில் நிறைந்து நிற்கும்.

இத்தகைய அன்பர் அவர்கள், தம்முடைய அன்னையார் பெயரால் அமைத்த சொற்பொழிவுகளை ஆற்றுமாறு அழைத்து எனக்குப் பெருமையும் மகிழ்ச்சியும் ஒருங்கே உதவுகின்ற அண்ணமலைப் பல்கலைக் கழகத்தார்க்கு நான் மீண்டும் நன்றி கூற விரும்புகின்றேன்.

நான் இதற்குமுன் ஒருதடவை இந்தப் பல்கலைக் கழகத்தில் வந்து பேசும் பாக்கியம் பெற்றிருந்தேன். தமிழ் மாணவர் சங்கத்தார் அழைத்தார்கள்; சர்க்கரைப் புலவர் அவர்கள் தலைமை தாங்கினர்கள்; கா. சுப்பிரமணிய பிள்ளை அவர்கள் என்னை அவையோர்க்கு அறிமுகம் செய்து வைத்தார்கள்; சேதுப்பிள்ளை அவர்கள் நன்றி கூறினர்கள். அந்த அனுபவத்தை எண்ணுந்தோறும் என் இதயத்தில் அது என்றும் வற்ருத இன்ப ஊற்ருக இருந்து கொண்டிருக்கின்றது.

அப்போது நான் "தமிழில் இலக்கியத் திறனாய்வு" என்னும் பொருள்பற்றிப் பேசினேன். இப்போது தமிழிலுள்ள பேரிலக்கியங்களுள் ஒன்றாகிய சிலப்பதிகாரம் பற்றிப் பேசுவதற்கான பேறு பெற்றுள்ளேன்.

யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல்
வள்ளுவன்போல் இளங்கோவைப் போல்
பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை, உண்மை
வெறும் புகழ்ச்சி யில்லை.

என்றுபாரதியார், தமிழ்ப்புலவர்களிலே வள்ளுவர், கம்பன், இளங்கோ என்னும் மூவரே தலைசிறந்தவர் எனப் பாராட்டுகின்றார். சேதுப்பிள்ளை அவர்கள் தமிழிலுள்ள இலக்கியங்கள் எல்லாவற்றிலும் திளைத்தபோதிலும், இந்த மூன்று புலவர்களுடைய நூல்களிலேயே அளவற்ற ஈடுபாடு உடையவராய் இருந்தார்கள். இவர்களைப்பற்றி நூல்கள் இயற்றுவதிலும் கட்டுரைகள் எழுதுவதிலும் சொற்பொழிவுகள் ஆற்றுவதிலும் அன்பர்களுடன் பேசுவதிலும் இறவாத இன்பம் துய்த்தார்கள்.

இதை எண்ணியேதான், இந்தச் சொற்பொழிவுகளைத் துவக்கிவைத்த பேராசிரியர் மு. வரதராசனார் அவர்கள் இளங்கோவைப்பற்றியே பேசியுள்ளார்கள் என்று எண்ணுகின்றேன். அடியேனும் அதே காரணத்தால் இளங்கோ வடிகள் அருளியுள்ள சிலப்பதிகாரம் பற்றியே பேச விரும்புகின்றேன்.

உளநூற் புலவர்கள், உள்ளத்தில் எழுகின்ற நிகழ்ச்சிகளை எல்லாம் உணர்தல், அறிதல், துணிதல் என்ற மூவகையினவாகக் கருதுவர். இந்தப் பாகுபாட்டை மனத்தில் கொண்டே அறிஞர்கள் நூல்களை எல்லாம் உணர்ச்சி நூல்கள், அறிவு நூல்கள், அறநூல்கள் என்று பிரிக்கின்றார்கள். இவற்றைப் பாரதியார் முறையே "காவிய நூல்கள், ஞானக்கலைகள், வேதங்கள்" என்று கூறுவர்.

அறிவு நூல்களிலும் அறநூல்களிலும் உணர்ச்சி காணப்பட மாட்டாது. கருத்தே காணப்படும். ஆனால்,

உணர்ச்சி நூல்களாகிய காவியங்களில் உணர்ச்சி மேலோங்கி நிற்பினும், கருத்து அடிநிலையில் நிற்கவே செய்யும். நான் சிலப்பதிகாரக் காவியத்திலுள்ள உணர்ச்சியூட்டும் கவிநயங்களைப் பற்றிப் பேசாமல் கருத்து நயங்களுள் சிலவற்றை மட்டுமே எடுத்து ஆராய விரும்புகின்றேன்.

எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு.

ஆனால் நாம் ஆராய்கின்றபொருளின் உண்மை இதுவென்று அறிவதற்கு உற்ற துணையாகவிருப்பது இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னர் வாழ்ந்த பேரறிஞர் ஒருவர்,

காய்தல் உவத்தல் அகற்றி யொருபொருட்கண்
ஆய்தல் அறிவுடையார் கண்ணதே — காய்வதன்கண்
உற்றகுணம் தோன்ரு தாகும், உவப்பதன்கண்
குற்றமும் தோன்ருக் கெடும்.

என்று விடுத்துள்ள எச்சரிக்கையே யாகும்.

இதனையே இக்காலத்துப் பேரறிஞர் ஜூலியன் ஹக்ஸ்லி என்பவரும்,

''அறிவு தேடும்போது உண்மையைக் காணவேண்டுமென்னும் ஆசைக்குத் தவிர வேறு எவ்வித ஆசைக்கும் உணர்ச்சிக்கும் இடந்தராது மறுத்துவிடுவதே ஆராய்ச்சி முறையாகும்'' என்று வற்புறுத்துகிருர்.

இந்தப் பெரியோர்கள் உரைகளை இதயத்தில் வைத்துக் கொண்டே நானும் ஆராய முயன்றுள்ளேன். இன்று நான் ஆராய்வதற்கு எடுத்துக்கொண்ட பொருள் 'கண்ணகியின் கற்பு' என்பதாகும்.

கண்ணகியின் கற்பு

இளங்கோவடிகள் படைத்த கண்ணகியே எக்காலத்தும் கற்புக்கு இணையற்ற எடுத்துக்காட்டு என்று அறிஞர்கள் எழுதியும் சொற்பொழிவாற்றியும் வருகிருர்கள். ஒரு பேராசிரியர், கண்ணகியைப் 'பெண்ணிற் பெருந்தக்க யாவுள' என்னும் குறளின் இலக்கியமாகக் காண்கின்ருர். மற்ருெரு பேராசிரியர் 'பண்டைத் தமிழ்மகளிருள் முடிமணியாகத் திகழும் கண்ணகியார்' என்று புகழ்கின்ருர்.

இளங்கோவடிகளும் தமது காவியத்தின் தொடக்கத்திலேயே,

''போதிலார் திருவினள் புகழுடை வடிவென்றும்
தீதிலா வடமீனின் றிறமிவள் திறமென்றும்''

கூறுகின்ருர். சாதாரணமாக ஒரு பெண்ணின் கற்பைப் புகழவேண்டுமானுல் புலவர்கள், 'இவளுடைய கற்பு அருந்ததியின் கற்பை ஒக்கும்' என்று கூறுவது வழக்கம். ஆனுல் அடியார்க்கு நல்லார் இந்த வரிகளுக்குப் பொருள் கூறும்போது 'திருமகளுடைய வடிவு இவள் வடிவையொக்கும், அருந்ததியுடைய கற்பு இவள் கற்பை யொக்கும்' என்று கூறுகின்ருர்.

இளங்கோவடிகள், தாம் சிலப்பதிகாரம் என்னும் காவியத்தை இயற்றியதற்குக் கூறும் மூன்றுகாரணங்களுள் ஒன்று 'உரைசால் பத்தினிக்கு உயர்ந்தோர் ஏத்தல்' என்பதாகும். கண்ணகியின் கற்பைக் காட்டியே இந்த உண்மையை நாட்டுகின்ருர்.

இளங்கோவடிகள் கண்ணகியின் கற்பைத் தாம் புகழ்வதுடன் நிற்காமல் தாம் படைத்த பாத்திரங்களில் முக்கியமானவர்கள் எல்லோரும் புகழுமாறும் செய்துள்ளார்.

கவுந்தியடிகள்,

> ‘ கற்புக்கடம் பூண்ட இத்தெய்வ மல்லது
> பொற்புடைத் தெய்வம் யாங்கண் டிலமால் ’

என்றும், வேட்டுவகுலத் தேவராட்டியான சாலினி,

> ‘ தென்தமிழ்ப்பாவை செய்த தவக்கொழுந்து,
> ஒருமா மணியா யுலகிற் கோங்கிய
> திருமா மணி ’

என்றும், செங்குட்டுவனும் அவருடைய தேவியும் ‘மாபெரும் பத்தினிக் கடவுள்’ என்றும், கண்ணகியின் அடித்தோழி,

> ‘ கற்புக் கடம்பூண்டு காதலன் பின்போந்த
> பொற்றெடி நங்கை ’

என்றும், மதுரை மாநகர மக்கள் ‘வம்பல் பெருந்தெய்வம்’ என்றும் புகழ்கின்றனர்.

இவ்வாறு எல்லோரும் கண்ணகியைக் கற்புக்கு எடுத்துக்காட்டு என்று கூறுவதன் பொருள் யாது? கற்பின் இலக்கணத்துக்கு ஒத்து நடப்பது பெரும்பாலும் கடினமாயினும் கண்ணகி அணுவளவும் பிறழாமல் நடந்தாள் என்பதேயாகும். அதனுல் கற்பின் இலக்கணம் யாது? அதற்கேற்பக் கண்ணகி எவ்வாறு நடந்தாள்? என்பதை ஆராய விரும்புகின்றேன்.

தமிழ்மொழியில் தலைசிறந்த இலக்கணமாயுள்ளது தொல்காப்பியம். தலைசிறந்த அறநூலாகவுள்ளது திருக்குறள். இந்த இரண்டு நூல்களும் இளங்கோவடிகள் காலத்தில் பெருவழக்கில் இருந்தன. இளங்கோவடிகளும் அவற்றைத் தழுவியே காவியம் செய்துள்ளார்.

உதாரணமாக: இளங்கோவடிகள் இந்திரவிழா வெடுத்த காதையில்,

‘வடமீன் கற்பின் மனையுறை மகளிர்
மாதர்வாண் முகத்து மணித்தோட்டுக் குவளைப்
போதுபுறங் கொடுத்துப் போகிய செங்கடை
விருந்திற் றீர்ந்தில தாயின் யாவதும்
மருந்துந் தருங்கொலிம் மாநில வரைப்பென’

என்று கூறுவது தொல்காப்பியர் பொருளதிகாரம் 272 ஆம் சூத்திரத்தில் கூறும் ‘புரையறம் தெளிதல்’ என்று கூறுவதைத் தழுவியதாகும்.

செங்குட்டுவன், ‘இமயவெற்பன் கல் தராவிட்டால் இன்னவாறு செய்வேன்’ என்று கூறும்போது குறிப்பிடும் காஞ்சி, வஞ்சி, கொற்றவள்ளை முதலியவை அனைத்தும் தொல்காப்பியப் பொருளதிகாரத்தையே பின்பற்றியவை.

இளங்கோவடிகள் கட்டுரை காதையின் இறுதியில்,

‘தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுவாளைத்
தெய்வந் தொழுந்தகைமை திண்ணிதால்–தெய்வமாய்
மண்ணக மாதர்க் கணியாய கண்ணகி
விண்ணக மாதர்க்கு விருந்து’

என்று கூறுவது, திருவள்ளுவருடைய,

‘தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யு மழை’

என்னும் குறளையும், வஞ்சினமாலையில்,

‘முற்பகற் செய்தான் பிறன்கேடு தன்கேடு
பிற்பகற் காண்குறூஉம்’

என்று கூறுவது, திருவள்ளுவருடைய,

‘பிறர்க்கின்னா முற்பகற் செய்யிற் றமக்கின்னா
பிற்பகற் றாமே வரும்’

என்னும் குறளையும் அடியொற்றி வருவன.

இளங்கோவடிகள் கால்கோட் காதையில்

'காவா நாவிற் கனகனும் விசயனும்' (159)

என்பது,

'யாகாவா ராயினும் நாகாக்க காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு'

என்னும் குறளையும், அழற்படு காதையில்,

'வருவிருந்தோம்பி மனையறம் முட்டாப்
பெருமனைக் கிழத்தியர்' (132—3)

என்பது,

'செல்விருந் தோம்பி வருவிருந்து பார்த்திருப்பான்
நல்விருந்து வானத் தவர்க்கு'

என்னும் குறளையும், ஊர்சூழ்வரியில்,

'அல்லலுற் றாற்று தழுவாளைக் கண்டேங்கி' (15)

என்பது,

'அல்லற் பட்டாற்று தழுதகண் ணீரன்றே
செல்வத்தைத் தேய்க்கும் படை'

என்னும் குறளையும் நினைவூட்டுவனவாகும்.

இவ்வாறு இளங்கோவடிகள் தொல்காப்பியத்தையும் திருக்குறளையும் பின்பற்றுவதால், கற்பின் இலக்கணத்தை அறிவதற்கு அந்த இரண்டுநூல்களையும் துணையாகக் கொள்வது பொருத்தமாகும்.

தொல்காப்பியர் கற்புக்கு இரண்டு விதப் பொருள்கள் கூறுகின்றார். ஆனால் அந்த இரண்டு பொருள்களும் ஒன்றோடொன்று மிகவும் நெருங்கிய தொடர்புடையனவாக இருப்பதால், ஒரேபொருள் இருவிதமாகக் கூறப்படுகின்றது என்றும் கூறத்தகும்.

முதலாவதாகத் தொல்காப்பியர் 'கற்பியல்' என்னும் பகுதியின் தொடக்கத்தில்,

'கற்பெனப் படுவது கரணமொடு புணரக்
கொளற்குரி மரபிற் கிழவன் கிழத்தியைக்
கொடைக்குரி மரபினோர் கொடுப்பக்கொள் வதுவே'

என்று கூறுகின்றார். அதற்கு இளம்பூரணர்,

'கற்பென்று சொல்லப்படுவது, கரணத்தொடு பொருந்திக் கொள்ளுதற்குரிய மரபினையுடைய கிழவன் கொள்ளுதற்குரிய மரபினையுடைய கிழத்தியைக் கொடுத்தற்குரிய மரபினையுடையார் கொடுப்பக் கொள்வது' என்று பொருள் கூறுகின்ருர்.

இதன் தேர்ந்தபொருள் 'கொடுப்பக் கொள்வது கற்பு' என்பதாகும். தலைவன் தலைவியை அவளுடைய தமர்க்குப் பொருள் கொடாமலும் அவரிடமிருந்து பெறலாம். பொருள் கொடுத்தோ அல்லது அவர்க்குச் சேவை செய்தோ பெறலாம். போதுமான பொருள் இல்லையாயின் தலைவன் பொருள் தேடச் செல்வான். இதை 'வரைவிடை வைத்துப் பொருள் வயிற்பிரிதல்' என்று கூறுவர்.

'பொன்னடர்ந்தன்ன' என்னும் அகப்பாட்டில் (279), தலைவன் 'ஈண்டுள்ள பொருள் கொடுத்தாற் பெறல் அரியளாயின் தன்னை வழிபட்டால் தந்தை தருவனே? அது நமக்கரிதாகலின் இன்னும் பொருள் நாம் மிகத் தேடிவந்து வரைதும்' என்று எண்ணிப் பொருள் தேடப் பிரியக் கருதுவதை அறியலாம்.

தலைவன் தலைவியை அவளுடைய உறவினரிடம் பெற்றபின் இல்லறம் நடத்துவது கற்பு என்பதை,

'மறைவெளிப் படுதலும் தமரிற் பெறுதலும்
இவைமுத லாகிய இயல்நெறி திரியாது
மலிவும் புலவியும் ஊடலும் உணர்வும்
பிரிவொடு புணர்ந்தது கற்பெனப் படுமே'

என்று தொல்காப்பியர் செய்யுளியல் சூத்திரத்தில் (500) கூறுகிருர்.

இந்த இரண்டு சூத்திரங்களிலிருந்தும் நாம் அறியக் கிடக்கும் விஷயங்கள் இரண்டாகும். ஒன்று, தலைவன் தலைவியைத் தமரிடமிருந்து தானமாகவோ விலையாகவோ பெறுவது. தலைவனும் தலைவியும் மனித ஆன்மாக்களாக,

சம அந்தஸ்துடையவர்களாக ஒருவரையொருவர் மணந்து கொள்வது என்பதில்லை. தலைவனுக்கே ஆன்மாவுண்டு. அவனே மனிதன். தலைவி வெறும் பொருளே. ஒருவர் கொடுக்க ஒருவர் பெறும் வஸ்துவே. தலைவி என்பது வெறும் உபசார வழக்கே. அரசன் மனைவியை அரசி என்பர். ஆனால் அவளுக்கு அரசனுக்குரிய அரசியல் அதிகாரத்தில் அணுவளவுகூடப் பங்கு கிடையாது. அதுபோலவேதான் தலைவன் தலைவி உறவும். இது, கடவுளுக்கும் மனிதனுக்குமிடையிலுள்ள உறவைச் சைவசித்தாந்தம் கூறும் ஆண்டான் அடிமைத் திறமே.

தலைவன் ஆண்டான்; தலைவி அடிமை. அடிமையும் தலைவன் அனுபவிக்கும் மற்ற வஸ்துக்களைப்போன்ற ஒரு வஸ்துவே. நச்சினார்க்கினியர் களவியல் முதற் சூத்திரத்தின் உரையில் தலைவியைக் குறிப்பிடும்போது 'பிறர்க்குரியள்' என்று கூடக் கூறாமல் 'பிறர்க்குரித்து' என்று கூறுவது அறிதற் பாலது.

மேற்கூறிய இரண்டு சூத்திரங்களிலிருந்தும் அறியக் கூடிய மற்றொரு விஷயம் இது. சாதாரணமாகக் கற்பு என்னும் சொல்லைப் பெண்ணின் தன்மை அல்லது செயலைக் குறிக்கவே பயன்படுத்துகின்றோம். ஆனால் தொல்காப்பியர் இந்த இரண்டு சூத்திரங்களிலும் ஆணின் செயலைக் குறிக்கவே பயன்படுத்துகின்றார். ஆகவே ஆணின் கற்பு, ஒருத்தியைப் பிறனிடமிருந்து அடிமையாகப் பெற்று அவளுடன் வாழ்க்கை நடத்துவது என்பதாகும்.

தொல்காப்பியர் கற்பு என்னும் சொல்லை ஆண்மகனுடன் தொடர்புபடுத்திக் கூறினும் பெண்மகளுடனும் தொடர்பு படுத்திக் கூறுகின்றார். அவர் 'கிழவோள் மாண்புகள்' அதாவது 'மனைவியின் சிறப்பியல்புகள்' இவை என்று கூறும் போது (தொல். பொருள். 152) கற்பை முதற்கண் வைக்கின்றார். அவற்றுடன் மனைவி 'கற்பு வழிப்பட்டவள்' (தொல். பொருள். 233) என்றும், மனைவி 'செயிர்தீர் காட்சிக் கற்புச் சிறந்தன்று' எனக் கொள்பவள் (தொல்.

பொருள். 113) என்றும், மனைவியின் ‘கற்பினுக்கத்து’ச் செவிலி கூற்று நிகழும் (தொல். பொருள். 115) என்றும் கூறுகின்றார். பொருளியலின் இறுதிச் சூத்திரத்தில் அகப் பொருளில் பயிலும் சில சொற்களைக் குறிப்பிடுகின்றார். அவற்றுள் ஒன்று கற்பு. அதற்கு இளம்பூரணர் ‘மகளிர்க்கு மாந்தர்மாட்டு நிகழும் மனநிகழ்ச்சி’ என்றும், நச்சினார்க் கினியர் ‘தன் கணவனைத் தெய்வமென்று உணர்வதோர் மேற்கோள்’ என்றும் தலைவியிடம் தொடர்பு படுத்திப் பொருள் கூறுகின்றனர்.

இதிலிருந்து தெரிவது யாதெனில், கற்பை ஆண்மக னுடன் தொடர்புபடுத்தும்போது அது கொடுப்பக் கொள் வது என்றும், பெண்மகளுடன் தொடர்பு படுத்தும்போது கொண்டானை வழிபடுவது என்றும் தொல்காப்பியர் கூறு கின்றார் என்பதாகும். அவர் கற்புக்குக் கூறும் இலக்கணத் தின் திரண்ட பொருள் ‘ஆண்டான் அடிமை உறவு’ என் பதே.

தொல்காப்பியர், அதனாலேயே ஆணின் கற்பை இரண்டு சூத்திரங்களிலும் பெண்ணின் கற்பைப் பல சூத் திரங்களிலும் கூறுகின்றார். ஆண்டான் தன் இஷ்டம்போல் நடக்கலாம். அவனுடைய செயல்களுக்கு வரையறை இல்லை; அடிமையின் செயல்களுக்கே உண்டு; அடிமைக்கு ‘வழிபடுகிழமை’ ஒன்றே உளது ஆகலின்.

தலைவன் தலைவி இருவருக்குமிடையில் நிகழ்வதாகக் கூறும் ஆண்டான் அடிமை உறவுக்குக் கற்பு என்னும் பெயர் வந்த காரணம் யாது? இது பண்டை நூல்கள் எதிலும் தெளிவாகக் கூறப்படவில்லை. நச்சினார்க்கினியரே கற்பியலின் முதற் சூத்திரத்தின் உரையிலும் ஐந்தாம் சூத் திரத்தின் உரையிலும் கூறுகின்றார். அது வருமாறு:–

1. திருமணம் செய்வதற்கு முன்னர்ப் பெண்ணின் பெற்றோர் ‘கொண்டானிற் சிறந்த தெய்வம் இன்றெனவும், அவனை இன்னவாறே வழிபடுக’ எனவும் அவளுக்குக் கற்பிப்பர்.

2. திருமணச்சமயத்தில் தலைவனிடம் 'இவளை இன்ன வாறு பாதுகாப்பாய்' எனவும், தலைவியிடம் 'இவற் கின்ன வாறே குற்றேவல்செய்தொழுகு' எனவும் 'அங்கியங்கடவுள் அறிகரியாக மந்திர வகையாற் கற்பிப்பர்.'

3. திருமணம் நடந்த பிறகு தலைமகன் தலைமகட்கு 'அந்தணர் திறத்தும், சான்றோர் தேஎத்தும் – ஐயர்பாங்கி னும் அமரர்ச் சுட்டியும்' ஒழுகும் ஒழுக்கம் கற்பிப்பன்.

இவ்வாறு நச்சினார்க்கினியர் கற்பு என்னும் பெயர் வந்தவிதம் கூறுவதிலிருந்து தலைவன் தலைவி உறவு, ஆண் டான் அடிமை உறவே என்பது தெளிவாகும்.

இனித் திருவள்ளுவர் கற்புக்குக் கூறும் இலக்கணம் யாது என்று பார்ப்போம். தொல்காப்பியர் பொருளதி காரத்தில் களவியல் என்பதை வகுத்து அதனை அடுத்துக் கற்பியல் என்பதை வகுத்துள்ளனர். அதுபோல் திரு வள்ளுவர் காமத்துப்பாலில் களவியலை வகுத்து அதனை அடுத்துக் கற்பியலை வகுத்துளர். ஆனால் அவர் கற்பியலில் கற்பின் இலக்கணத்தைப்பற்றி எதுவும் கூறவில்லை. கற்புக் காலத்து நிகழும் சில காரியங்களைப்பற்றி மட்டுமே கூறு கிறார். அவருடைய கற்பியலில் உள்ள குறட்களில் கற்பு என்னும் சொல்லைக்கூடக் காணவில்லை.

அதை அறத்துப்பாலிலுள்ள,

'பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னும்
திண்மை உண்டாகப் பெறின்'

என்னும் குறள் ஒன்றிலேயே காணலாம். அக்குறளுக்குப் பரிமேலழகர் 'கற்பு என்னும் கலங்கா நிலைமை உண்டாகப் பெறின் ஒருவன் எய்தும் பொருள்களுள் இல்லாளின் மேம் பட்ட பொருள்கள் யாவை உள' என்று உரைக்கின்றார். ஆகவே தொல்காப்பியர் பெண்ணை ஒருவரிடமிருந்து பெறும் பொருள் அல்லது வஸ்துவாகக் கருதிக் கற்புக்கு இலக்கணம் கூறியது போலவே, திருவள்ளுவரும் பெண்ணை ஒரு வஸ்து வாகவே கருதுகிறார். ஆணைப்போலவேபெண்ணும் ஓர் ஆள்,

வஸ்துவல்ல என்று கருதவில்லை. பெண், மாட்டைப் போலவோ வீட்டைப்போலவோவுள்ள பொருளில்லை. ஆனால் அடிமையே; அடிமை ஆளில்லை, வஸ்துவே; ஆண்டான் வழி நிற்கவேண்டியவள்.

திருவள்ளுவர் பெண்ணையும் ஆளாகக் கருதியிருந்தால் 'பெண்ணிற் பெருந்தக்க யாவுள' என்று கூறுமல் 'பெண்ணிற் பெருந்தகையர் யாருளர்' என்று கூறியிருப்பார்.

பெண்ணைப் பொருளாகக் கருதியபடியால்தான் கணவனைக் 'கொண்டான்' என்றும், 'கொழுநன்' என்றும் கூறுகிறார். இந்த இரண்டு சொற்களைத் தவிர வேறு சொற்களைப் பயன்படுத்தவில்லை. இரண்டு சொற்களும் 'கொள்' என்னும் வினையின் அடியாகப் பிறந்தவையே. மனைவியை எங்கும் 'கொண்டாள்' என்று கூறவில்லை.

அதுவுந்தவிர, பிறனில் விழையாமை என்னும் அதிகாரத்திலுள்ள குறட்களில் காணப்படும் 'பிறன் பொருளாள்', 'பிறனியலாள்', 'பிறற்குரியாள்', 'பிறன்வரையாள்' என்னும் சொற்றொடர்களும் இக்கருத்தையே கூறுகின்றன. பிறன் பொருளாள் என்பதற்குப் 'பிறனுக்குப் பொருளாந் தன்மையையுடையாள்' என்றும், பிறனியலாள் என்பதற்குப் 'பிறனுக்கு உரிமைபூண்டு அவனுடைய இயல்பின் கண்ணே நிற்பவள்' என்றும், பிறற்குரியாள் என்பதற்குப் 'பிறரொருவருடைய உரிமையாகியவள்' என்றும், பிறன் வரையாள் என்பதற்குப் 'பிறன் எல்லைக்கண் நிற்பவள்' என்றும் பரிமேலழகர் கூறுகின்றார். இதிலிருந்து பெண், அடிமைபோன்ற பொருளே, வஸ்துவே என்பது வள்ளுவர் கருத்து என்பது தெளிவாகும்.

இன்னும் திருவள்ளுவர் பொருட்பாலில் கூறும்,

'அற்றார்க்கொன் றாற்றாதான் செல்வம் மிகுநலம்
பெற்றாள் தமியள்மூத் தற்று'

என்னும் குறளும் இக்கருத்தை வலியுறுத்தும். இக் குறளில் பெண்ணைப்பற்றிக் கூறுவது யாதெனில் பெண்ணின் நல

மெல்லாம் ஆண் அனுபவிப்பதற்கே என்பதாகும். ஆகவே பெண் ஆளில்லே; ஆண் அனுபவிப்பதற்காகவே, ஆணுக்கு அடிமையாயிருப்பதற்காகவே படைக்கப்பட்டவள் என்பதாகும்.

இனித் திருவள்ளுவர் 'கற்பென்னும் திண்மை' என்று கூறுவதன் பொருள் யாது? ஆணுக்கும் பெண்ணுக்கும் மனங் கலங்கா நிலே அமையவேண்டிய சந்தர்ப்பங்கள் எழுவதுண்டு. பெண்ணுக்கு எழும் சந்தர்ப்பங்களில் சில தனிப்பட்டவை. அதனுல் அத்தகைய சந்தர்ப்பங்களில் அமையும் மனவுறுதி தனிச்சிறப்புடையது. அந்த மன வுறுதியே கற்பாகும் என்பது வள்ளுவர் கருத்து.

ஆனல் பெண்ணிடம் கற்பு என்னும் திண்மை அமைய வேண்டிய விசேஷ சந்தர்ப்பங்கள் இவை என்று வள்ளுவர் கூறவில்லே. அவர் கூருவிடினும் இரண்டு குறள்களில் குறிப்பிடுகின்ருர்.

'தெய்வம் தொழாஅள் கொழுநற் ஜெழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யு மழை'

என்பது ஒரு குறள். இதன் கருத்து: மனேவி, கணவனேயே தெய்வமாகப் பாவித்து வழிபடுவாள் என்பதாகும். அவள் கணவனேத் தெய்வமாக வழிபட்டு வந்தபோதிலும், அவன் அவளுக்குத் தீங்கு செய்தால் அப்போது அவள் எவ்வாறு நடந்துகொள்ளவேண்டும்? அவனுடைய தீங்கைக் கண்டு பொறுக்கமுடியாமல் 'இவனேத் தெய்வமாக வழிபடுகிறேன், தெய்வம் தீங்கு செய்யாதே, இவன் செய்கின்ருனே, இவனே வணங்காமலிருந்தால் என்ன?' என்னும் எண்ணம் எழுவது இயல்பு. ஆனல் அவள் கற்பு என்னும் திண்மையுடையவளாக இருக்க வேண்டுமல்லவா? ஆதலால் அவள் அத்தகைய எண்ணங்களுக்கு இடங்கொடாமல் மனத்தை உறுதியாக வைத்துக்கொள்ள வேண்டும். என்ன தீங்கு செய்தாலும் இறைவனே என்று ஏற்கவேண்டும். 'தெய்வந் தொழாள்' என்னும் குறளில் பொதிந்துள்ள கருத்து இது.

பெண் மனங்கலங்காதிருக்க வேண்டிய மற்ருெரு சந்தர்ப்பத்தை,

> ‘சிறைகாக்கும் காப்பு எவன்செய்யும் மகளிர்
> நிறைகாக்கும் காப்பே தலை’

என்னும் குறள் குறிப்பிடுகின்றது. மனைவியானவள் தன் கணவனைத் தவிர வேறு எந்த ஆண் மகனிடமும் காதல் செலுத்தலாகாது. காதல் எழுமேல் தன் மனத்தைக் கலங்கவிடாமல் நிறுத்துதல் கடன்.

ஆகவே மனைவி, மனங்கலங்காதிருக்க வேண்டிய சந்தர்ப்பங்கள் இரண்டு. ஒன்றில் கணவன் தீங்கு செய்தாலும் தெய்வமே என்று மனத்தில் உறுதி செய்துகொள்ள வேண்டும். மற்ருென்றில் பிறஆடவரைக் கண்டு மயங்காது மனத்தை நிறுத்திக்கொள்ள வேண்டும். கணவனைத் தெய்வமாகக் கொள்ளுதல், பிற ஆடவரை இச்சியாதிருத்தல் என்னும் இரண்டுமே கற்பின் தனிச் சிறப்புக்கள்.

இந்த இரண்டாவது இயல்பைத் தொல்காப்பியர், திருவள்ளுவர்போல் தனியாகப் பிரித்து விளக்கவில்லை. ஆனல் அது முதல் இயல்பிலேயே அடங்கியதேயாகும். அடிமையின் உடல் பொருள் ஆவி எல்லாம் ஆண்டானுக்கே சொந்தம். அதனல் மனைவி, தன் உடலைப் பிறர்க்குத் தர இச்சித்தலுமாகாது, இசைதலுமாகாது என்பது பெறப்படும்.

ஆகவே தொல்காப்பியரும் திருவள்ளுவரும் கற்பு என்பதற்கு ஆண்டான் அடிமைத் திறம் என்று ஒரேவிதமாக இலக்கணம் கூறுகின்றனர் என்பது தெளிவாகும்.

இவ்வாறு திருவள்ளுவர் கணவனை மனைவியின் தெய்வமாக ஆக்கிய காரணத்தால்தான், மனைவி இத்தகையவளாக இருக்கவேண்டும் என்பதற்குப் பத்துக்குறள்கள் செய்தவர், கணவன் இத்தகையவனுக இருக்கவேண்டும் என்பதற்கு ஒரு குறள்கூடச் செய்தாரில்லை. கணவன் எத்தகையவனுகஇருந்தாலும் மனைவி இத்தகையவளாக இருக்கவேண்டும் என்று வற்புறுத்துவதே அவருடைய நோக்கம்.

திருவள்ளுவர் கணவனுக்கு மனைவி வாழ்க்கைத் துணை என்று கூறியவர், மனைவிக்குக் கணவன் வாழ்க்கைத் துணை என்று கூறவில்லை. அவன் இல்லாளின் தெய்வமே ஆவான். தெய்வத்தின் பண்புகளையும் செயல்களையும் யாரால் வரையறுக்க இயலும்?

இனித் தலைவி மேற்கூறிய இலக்கணத்துக்கேற்பத் தலைவனிடம் நடந்துகொள்ளவேண்டிய விதங்கள் இவை என்று தொல்காப்பியர் கூறுவதைப் பார்ப்போம்.

தொல்காப்பியர் தலைவியின் பண்புகள் என்று கற்பு, காமம், ஒழுக்கம், பொறை, நிறை, விருந்துபுறந்தருதல், சுற்றம் ஓம்பல் முதலியவற்றைக் (தொல். பொருள். 152) கூறுகிறார். கற்பு என்பது, கணவன் முதலியோர் கற்பித்த நிலையில் நிற்கும் நல்லொழுக்கம் என்று நச்சினார்க்கினியர் கூறுகின்றார்.

ஆகவே தலைவி தலைவன் கற்பித்தபடி நடப்பாள்; அவனிடம் அன்புசெய்வாள்; ஒழுக்கமாக நடந்து கொள்வாள்; தலைவன் தீமை செய்தால் பொறுத்துக்கொள்வாள்; அதனால் தன் மனத்தில் உண்டாகும் துன்பத்தை வெளியே புலப்படக் காட்டாள்; விருந்தினரையும் சுற்றத்தாரையும் பாதுகாப்பாள்.

ஆனால் தலைவன் ஆண்டான்; அவனுடைய செயல்களுக்குக் கட்டுப்பாடு கிடையாது. அதனால் அவன் வேறு மனைவியரை மணப்பான்; காமக்கிழத்தியரை வைத்துக் கொள்வான்; பரத்தையரிடம் சென்று வருவான்.

தலைவி அடிமையேயாயினும் உயிருள்ளவள்; ஆதலால் அவள் மனத்தில் வருத்தம் உண்டாகவே செய்யும்; ஆனால் அவள் தலைவன் செய்வதைப் பொறுத்துக் கொள்ளவே வேண்டும்; அதுமட்டுமன்று தன்னுடைய வருத்தத்தை யாருக்கும் புலப்படுமாறு காட்டிக் கொள்ளவுங்கூடாது.

அப்படியாயின் அவள் எவ்விதம் நடந்துகொள்ள வேண்டும்?

1. முதலாவதாக அவள் பின்முறையாக்கிய வதுவையாளை அதாவது 'மாற்ருளை விளக்கு முதலிய மங்கலங்களைக் கொண்டு எதிரேற்கவேண்டும் (தொல். பொருள். 172), தன்னின் இழிந்தாளாகக் கருதாது தன்னேடு ஒப்ப உயர்ந்தாளாகக்கொண்டு' ஒழுகுதல் வேண்டும் என்று தொல்காப்பியர் (பொருள் 174) கூறுகின்ருர். அதற்கு இரண்டு காரணங்கள் காட்டுகின்ருர். ஒன்று 'அவன் சோர்வு காத்தல் கடன்'. அதாவது தலைவற்கு இழுக்கம் பிறவாமற் பாது காத்தல் தலைவிக்குக் கடப்பாடாகும்; மற்ருென்று தலைவிக்குச் 'செல்வன் பணி மொழி இயல்பு' ஆகும்; அதாவது தலைவன், இவ்வாறு ஒழுகு என்று தலைவிக்குப் பணிக்கும் மொழிநூலிலக்கணத்தான் ஆன மொழியாகும்.

2. இரண்டாவதாகத் தலைவன் பரத்தைவீடு சென்று வந்தால் தலைவி, அவனைத் தானும் கண்டிக்கமாட்டாள்; பிறரையும் கண்டிக்கச் சம்மதியாள் (தொல். பொருள், 158–159). இவள் கண்டிக்காமல் இருக்கிருளே என்று தோழி, 'அன்பிலை, கொடியை' என்று அவனிடம் கூறினுல், தலைவி அவனிடம் அவ்வாறு கூருதே,

'நன்னலம் தொலைய நலமிகச் சாஅய்
இன்னுயிர் கழியினும் உரையல், அவர்நமக்கு
அன்னையும் அத்தனு மல்லரோ' (குறுந்-93)

என்று கூறித் தடுப்பாள்.

ஆசிரியர் நல்லந்துவனுர் சங்ககாலச் செய்யுளாகிய பரிபாடலில்,

'சேக்கை யினியார்பாற் செல்வான் மனையாளாற்
காக்கை கடிந்தொழுகல் கூடுமோ, கூடா;
தகவுடை மங்கையர் சான்ருண்மை சான்ருர்
இகழுறும் கேள்வரை ஏத்தி இறைஞ்சுவார்' (20-88)

என்று தலைவன் பரத்தையரிடம் செல்வதைத் தலைவியால் தடுக்க முடியாது; தலைவனை ஏத்தும் கடமையை உடையள்என்று கூறுவதும் குறிப்பிடத்தக்கது.

3. மூன்ருவதாகத் தலைவி தலைவனுடைய பரத்தமையைப் பிறரிடமிருந்து மறக்கவே செய்வாள்; இதனைத் தொல்காப்பியர் 'புறஞ்சொன் மாணுக்கிளவி' (பொருள் 272) என்பதில் அடக்குவர்.

'தண்ணந் துறைவன் கொடுமை
நம்முன் நாணிக் கரப்பா டும்மே'

என்று தோழி கூறும் குறுந்தொகைப் பாட்டும் (9) இதையே விளக்குகின்றது. இந்த வரிகளுக்கு உ.வே. சாமிநாதய்யர் 'தண்ணிய துறையையுடைய தலைவனது கொடுமையை நம்முன்னே சொல்லுவதற்கு நாணமுற்று மறைத்தலையுடைய சொற்களைச் சொல்லுகின்ருள், ஆதலின் கற்புக்கடம் பூண்டவளானுள்' என்று உரை கூறுகின்ருர்.

4. நான்காவதாகத் தலைவன் பரத்தை வீட்டுக்குச் சென்றுவிட்டு விருந்தினருடன் வந்தால் அப்போது அவனுடன் ஊடாதிருப்பாள். இதைத் தொல்காப்பியர் 'புரையறந் தெளிதல்' என்பதில் அடக்குவர். தலைவி இவ்வாறு நடத்தலே தனக்கொத்த இல்லறம் என்று மனத்துட்கொள்வாள் என்று நச்சினர்க்கினியர் உரை கூறுவர்.

5. தலைவன் பரத்தை வீட்டுக்குச் சென்று வந்ததுபற்றி ஒருவேளை மனத்தில் வருந்துவானயின் அப்போது தலைவி தாய்போல் பேசி அவனுடைய மனக்கவலையை மாற்றுவாள். (பொருள்–173)

6. எல்லாவற்றிற்கும் மேலாகத் தலைவி, தலைவன் நயக்கும் பரத்தையை ஏத்தவும் செய்வாள்.

'கற்பு வழிப்பட்டவள் பரத்தையை ஏத்தினும்' (பொருள் 229) என்பதற்கு இளம்பூரணர் 'கற்பு காரணமாகத் தலைமகனது பரத்தமைக்கு உடன்பட்டாளே யாயினும்' என்று உரை கூறுகின்ருர்.

இக்கூற்றுக்களினிடையில் இரண்டு சந்தேகங்கள் எழலாம். கணவனுக்கு மனைவி அடிமை என்று கூறினல்,

தலைவன், தலைவியின் 'மெல்லென் சீறடி புல்லிய இரவினும்' (சூ. 144) என்றும், 'அடிமேல் வீழ்ந்த கிழவனை நெருங்கி' (சூ. 145) என்றும் தொல்காப்பியர் கூறுகிறாரே, அதுபோல் மையோடக்கோவனார் என்னும் சங்கப்புலவர் தாம் பாடிய பரிபாடலில்,

'ஆருடு மேனி அணிகண்ட தன்னன்பன்
சேருடு மேனி திருநிலத் துய்ப்பச் சிரமிதித்துத்
தீர்பிலதாகச் செருவுற்றாள்' (7:73–3)

என்று, தலைவன் தலைவியின் பாதத்தில் தன் தலையை வைத்து வணங்கியபோது தலைவி அவனுடைய தலையை மிதித்தாள். அப்போதும் அவளுடைய கோபம் தீரவில்லை என்று கூறுகின்றாரே, அது ஆண்டான் அடிமை உறவாகத் தோன்றவில்லையே என்ற ஐயம் எழும்.

தலைவன், தலைவியைப் பணிதல் உண்டு என்றே தொல்காப்பியர் கூறுகின்றார். ஆனால் அவ்வாறு நடப்பது தலைவனுடைய பரத்தமைக்காகத் தலைவி புலவிகொள்ளும் போது மட்டுமே (தொல்: பொருள் 227). தலைவன் தன் தவறு சிறிதாகியவிடத்துப் புலப்பன் என்றும், பெரிதாகிய விடத்துப் பணிவன் என்றும் நச்சினார்க்கினியர்,

'காமக் கடப்பினுட் பணிந்தகிளவி
காணுங் காலைக் கிழவோற் குரித்தே
வழிபடு கிழமை அவட்கிய லான' (160)

என்னும் சூத்திரத்தின் உரையில் கூறுவது குறிப்பிடத் தக்கது. ஆகவே தலைவன், தலைவியைப் பணிவது புலவிக் காலத்துமட்டுமே என்பது நினைவுகூரத் தக்கதாகும்.

அடுத்த சந்தேகம் இது. தலைவன் பரத்தைவீடு சென்றால் தலைவி தன் வருத்தத்தை வெளியிடாள். அதைத் தோழி, குறிப்பாகக்கண்டு தலைவனைக்கண்டித்தால் அதைத் தலைவி தடுத்துவிடுவாள். தலைவனே தவறு செய்துவிட்டதாக வருந்தினால் "பாதகமில்லை, வருந்தவேண்டாம்" என்று அவனைத் தேற்றுவாள். அவனிடம் பரத்தையைப்

புகழ்ந்துகூடக் கூறுவாள் என்று தொல்காப்பியர் சொல்லும் போது, புலவி என்றும், புலவிச் சமயத்தில் தலைவன் பணிதல் என்றும் கூறுவானேன்?

தலைவி ஊடுவது தலைவனைக் கண்டிப்பதற்காகவும் கண்டித்து அவனைத் திருத்துவதற்காகவுமன்று. அடியாள் தவறு செய்தால் ஆண்டவன் திருத்துவான்; ஆண்டவன் தவறு செய்தால் அடியாள் எவ்வாறு திருத்த இயலும்? அவளுக்குரிய இயல்பு அவனை எஞ்ஞான்றும் வழிபட்டொழுகுதல் ஒன்றேயன்றோ? (தொல். பொருள். 160)

அவ்வாறாயின் தலைவி ஊடுவது எதற்காக? புலவியின் இறுதியில் வரும் கலவியின் இன்பத்தை மிகுவிப்பதற்காகவே.

'புலத்தலிற் புத்தேணாடு உண்டோ, நிலத்தொடு
நீரியைந் தன்னா ரகத்து' (குறள் 133)

அதாவது நிலத்துடன் நீர் இரண்டறக் கலந்துவிடுவது போல் ஒன்றுபடக்கூடிய கணவரிடம் புலவி கொள்ளுதல் போல் இன்பம் தரக்கூடிய தெய்வலோகம் உண்டோ என்று தலைவி தோழியிடம் கூறுவதாகத் திருவள்ளுவர் கூறுகின்றார். 'ஊடுதல் காமத்திற் கின்பம்' என்று அவர் கூறுவதும்,

'முயங்காக்கால் பாயும் பசலைமற்று, ஊடி
உயங்காக்கால் உப்பின்றாம் காமம்'

என்று நாலடியார் கூறுவதும் இக்கருத்தையே வற்புறுத்துகின்றன. காதலின்பம் துய்ப்பதற்கு ஊடல் என்பது எத்துணை அவசியம் என்பதைத் திருவள்ளுவர் அதுபற்றிப் புலவி, புலவிநுணுக்கம், ஊடலுவகை என்ற மூன்று அதிகாரங்கள் (30குறள்கள்) வகுத்திருப்பதிலிருந்து விளங்கும்.

இவ்வாறு தலைவி, தலைவன் பரத்தையிடம் சென்றதற்காக ஊடுவதையும் கடிவதையும் வைத்து அவள் அவ்வாறு செய்வது அவனைக்கண்டித்துத் திருத்துவதற்காகவே என்று எண்ணலாகாது. அதுபோல் தலைவன், தலைவி ஊடும்

போது அவளைப் பணிவதையும்,

> ‘சேய்நின்று செய்யாத சொல்லிச் சினவல், நின்
> ஆணை கடக்கிற்பார் யார்’

அதாவது ‘நின் ஆணை வழி ஒழுகுதலன்றி ஈண்டு நின் ஆணையைத் தப்புவார் யார்’ (கலி. 81) என்று தலைவியிடம் கூறுவதையும் வைத்து அவன், அவளை அடிமையாக மதியாமல் ஆன்மாவாக மதிக்கின்ருன் என்று எண்ணலாகாது.

தலைவி ஊடுவதும் தலைவன் பணிவதும் வெறும் காதல் நாடக நிகழ்ச்சிகளேயன்றி வேறல்ல. குழந்தைகள் ஓடி ஒளிவதுபோன்ற காதல் விளையாட்டு.

ஆகவே தொல்காப்பியரும் திருவள்ளுவரும் கற்புடையவள் இலக்கணமாகக் கூறுவதன் திரண்ட பொருள் இது:

கணவனையே தெய்வமாக மதித்து அவனிடம் அடிமை பூண்டொழுகுவாள். அதன் காரணமாக,

1. பிற ஆடவரிடம் செல்லாதபடி, தன் மனத்தை நிறுத்துவாள். பிற ஆடவர் நெருங்கினுல் எதிர்த்துத் தன்னைக் காத்துக்கொள்வாள்.

2. கணவன் பரத்தையிடம் சென்ருல், தன்னுடைய வருத்தத்தை மறைத்துக்கொள்வாள்; அவனைக் கண்டிக்க மாட்டாள்; பிறரும் கண்டிக்கச் சம்மதியாள். அவன் வருந்தினுலும் தேற்றுவாள்; அவனிடம் பரத்தையைப் புகழ்ந்துகூடக் கூறுவாள். அவன் எத்துணைத் தீங்கு செய்யினும் அன்புமாருமல் அடிமையாகவே வாழ்ந்து வருவாள்.

இனிக் கண்ணகி இந்த இலக்கணத்துக்கு ஒப்ப எவ்வாறு நடந்தாள் என்பதைப் பார்ப்போம். அதற்குமுன் இளங்கோவடிகள் கண்ணகியை,

> ‘தீதிலா வடமீனின் திறமிவள் திறமென்றும்
> மாதரார் தொழுதேத்த வயங்கிய பெருங்குணத்தாள்’

என்றும் கூறுவதுபற்றி இரண்டொரு மொழிகள் கூற விரும்புகின்றேன்.

அருந்ததி வசிஷ்ட முனிவர் மனைவி. கண்ணகிக்கு இன்னும் கலியாணம் ஆகவில்லை. அப்படியிருக்க ஊரார் அவளை அருந்ததிபோன்ற கற்புடையவள் என்று புகழ்வதாகக் கூறுவது எவ்வாறு பொருந்தும் என்று தோன்றவில்லை.

கலியாணமாகவில்லை. உண்மைதான்; அவர்கள் புகழ்ந்ததன் பொருள், அவள் ஆடவர் எவரிடமும் இச்சை கொள்ளவில்லை என்பதாகும் என்று கூறினல், அதுவும் பொருந்துவதாயில்லை. அவள் அத்தகையள் என்ருல் அவ்வூரிலுள்ள ஏனைய மாதர் அத்தகையர் அல்லரோ என்ற ஐயம் எழும்.

அந்த ஐயத்திற்கு இடமில்லை என்பதற்கு இளங்கோவடிகள், இந்திரவிழாவெடுத்த காதையில் அவ்வூர்ப் பெண்களை

'வடமீன் கற்பின் மனையுறை மகளிர்' (229)

என்று கூறும் மொழிகளே விடை அளிக்கின்றன. ஆதலால் கண்ணகி கலியாணமாவதற்கு முன்பே வடமீன் ஒத்தவள் என்று கூறுவது வெறும் பொருளற்ற சொற்களேயாகும்.

ஆயினும் அவர் அருந்ததியைக் கற்புடையவருக்கு எடுத்துக்காட்டாகக் கூறுவதேன்? அதுபற்றி அரும்பதவுரை யாசிரியரும் அடியார்க்குநல்லாரும் விளக்கவில்லை. பொதுவாக அருந்ததியைப்பற்றிப் பல கதைகள் கூறுவதுண்டு. அவற்றைவிட அருந்ததி என்னும் பெயரே அதிக விளக்கம் தருவதாக உள்ளது.

அருந்ததி என்பது வடசொல். அதன் தாது ருத். அத்தாதுவின் பொருள் தடுத்தல். ஆதலால் அருந்ததி என்னும் சொல், கணவன் செய்யும் எந்தக் காரியத்தையும் தடுக்காமல் அவன் வழியே நடப்பவள் என்று பொருள் படும். இது வாசஸ்பதி நிகண்டு கூறுவது. பேராசிரியர் ஆப்தே என்பவர் தமது சமஸ்கிருத அகராதியில் அருந்ததி

என்பது 'ந ருந்ததி' எனப் பிரித்துத் 'தடுக்காதவள்' என்று பொருள்படும் என்று கூறுகின்ருர்.

ஆகவே அருந்ததி என்பவள், தொல்காப்பியரும் திருவள்ளுவரும் வகுத்த ஆண்டான் அடிமைத் திறத்தின் நின்றவளாவள்.

இளங்கோவடிகள் தமது காவியத்தின் தொடக்கத்தி லேயே இந்தச் சொல்லே ஆளுவதால் அவர் தொல்காப்பியர் திருவள்ளுவர் இருவரையும் முற்றிலும் தழுவுகின்ருர் என்பது விளங்கும்.

அந்தக் கருத்து உடையவராக இருந்ததால்தான் அவர்,

'திங்கள் மாலே வெண் குடையான்
சென்னி செங்கோ லதுவோச்சிக்
கங்கை தன்னேப் புணர்ந்தாலும்
புலவாய் வாழி காவேரி,
கங்கை தன்னேப் புணர்ந்தாலும்
புலவா தொழிதல் கயற்கண்ணுய்
மங்கை மாதர் பெருங்கற் பென்று
அறிந்தேன் வாழி காவேரி'

என்று பாடுகின்ருர். இதன் கருத்து யாதெனில் 'சோழன் மனேவி காவேரி; அவன் கங்கையைப் புணர்ந்தான்; ஆயினும் அதற்காகக் காவேரி அவனிடம் புலவிகொள்ளவில்லே. அவ்வாறு கணவன் பிற பெண்ணே நயந்தாலும் புலவா திருத்தலே பெண்களின் பெருங்கற்பு' என்பதாகும். மனேவி கணவனுடைய பரத்தமையைப் பொறுத்துக்கொள்ளுதல் கற்பு என்பது மட்டுமன்று, பெருங் கற்புமாகும். அதுவே கற்பின் தலேயாய பண்பு.

இந்தக் கருத்தை இளங்கோவடிகள், கோவலன் வாயால் கூற வைத்தது போலவே கண்ணகி வாயாலும் கூறவைக்கின்ருர். கண்ணகி, கோவலன் கொலேயுண்டான் என்று கேட்டதும் தாங்க முடியாத துக்கம் மேலிட்டவளாய் இந்த ஊரில் கற்புடை மகளிரும் சான்ருேரும் தெய்வமும்

இல்லையோ, இருந்தால் இந்த அநியாயம் நடந்திராது என்று அழுது குமுறுகிருள்.

கற்புடை மகளிர் என்று இரண்டு சொற்களில் கூருமல்

> பெண்டிரு முண்டுகொல், பெண்டிரு முண்டுகொல்
> கொண்ட கொழுநர் உறுகுறை தாங்குறூஉம்
> பெண்டிரு முண்டுகொல், பெண்டிரு முண்டுகொல்

என்று கற்புடைமையின் சாரத்தைக்கூறுகின்ருர். கணவன் செய்யும் துன்பங்களைத் தாங்குபவரே கற்புடைப் பெண்டிர்; கணவன் செய்யும் துன்பங்களுள் பெண்ணுக்கு மிகக கொடியதாயிருப்பது அவனுடைய பரத்தமையே.

இனிக் கண்ணகியின் கற்பின் திறத்தைப் பார்ப்போம். அவளுடைய கற்பை 'ஆறிய கற்பு' என்றும், 'சீறிய கற்பு' என்றும் இரண்டு வகையாகப் பிரித்துக் கூறுவர். கணவன் தனக்குச் செய்யும் துன்பங்களைப் பொறுத்துக்கொண்டு ஆறியிருப்பது ஆறிய கற்பொழுக்கம். கணவனுக்குப் பிறரால் நேரும் துன்பங்களைப் பொறுக்க முடியாமல் சீறி எழுவது சீறிய கற்பொழுக்கம். கண்ணகியின் ஆறிய கற்பொழுக்கம் காவிரிப்பூம்பட்டினத்தும், சீறியகற்பொழுக்கம் மதுரைமா நகரத்தும் நடைபெறுகின்றன. ஆதலால் அவற்றைத் தனித்தனியே ஆராய விரும்புகின்றேன்.

கண்ணகியின் ஆறிய கற்பு எத்தகையது? கோவலன் கண்ணகியை மணந்து சில ஆண்டுகள் அவளுடன்சேர்ந்து இல்லறம் நடத்துகின்ருன். அதன்பின் மாதவி என்னும் பரத்தையிடம் சென்று அவளைத் தன் காதற்பரத்தையாக ஆக்கிக்கொள்கின்ருன். அவளுடனேயே தங்கிவிடுகிருன்.

பண்டைக் காலத்தில் தலைவன் காதற்பரத்தையை வைத்துக்கொள்வதுண்டு. ஆனுல் அவளுடனேயே தங்கி விடுவதில்லை. தலைவன் தலைவியின் பூப்புத் தோன்றிய மூன்றுநாளும் கூட்டமின்றி அணுகியிருந்து, அதன் பின்னர்ப் பன்னிரண்டு நாளும் அவளுடன் கூடியுறைவன்

(தொல்: பொருள்: 187). ஆகவே தலைவன் ஒரு மாதத்தில். பதினைந்து நாட்கள் மட்டுமே பரத்தையிடம் தங்குவான். மற்றப் பதினைந்து நாட்களும் மனைவியுடனேயே தங்குவான்.

இவ்வாறு நிகழவே மனைவி கணவனுடைய பரத்தைமைக்காக மனம் புண்ணாக வருந்தினும் அவ்வருத்தத்தை ஓரளவேனும் மாற்றும் மருந்தாகக் குழந்தை பெற்று வளர்க்கும் பேற்றைப் பெறுவாள். ஆனால் கண்ணகிக்கோ இந்தப் பேறு கிடைக்க வழியில்லாமல் செய்துவிட்டான் கோவலன். அவன் மாதவி வீடு சென்றவன், அங்கேயே தங்கினான். மூதாதையர் தேடி வைத்த செல்வத்தையெல்லாம் தொலைத்த (சிலப்: 9;70) பின்னர்க் கண்ணகியின் நகைகளை ஒவ்வொன்றாக வாங்கிச் செல்வதற்குமட்டுமே வீட்டை நாடினன்.

இவ்வாறு கோவலன் மாதவியே சதம் என்று அவளுடன் தங்கிப் பணத்தையெல்லாம் பாழாக்கினான். குலந்தரு தொழிலைச்செய்து பொருளீட்டாது,

‘ வறுமொழி யாளரொடும் வம்பப் பரத்தரொடும்
குறுமொழி கோட்டி நெடுநகை புக்குப்
பொச் சாப்புண்டு பொருளுரை யாளர்
நச்சுக் கொன்றான் ’ (சிலப்–16 : 63–67).

தாய்தந்தையர்க்குச் செய்யவேண்டிய பணிவிடைகளைச் செய்யவில்லை. அவர்கள், மாதவி நட்பை விடுக்கப் பணித்தபோது அவர்கள் சொல்லைப் பேணாது நடந்தான். தந்தை சொல் மிக்க மந்திரமில்லை என்பதை அறவே புறக்கணித்தான்.

‘ அறவோர்க் களித்தலும் அந்தணர் ஓம்பலும்
துறவோர்க்கு எதிர்தலும் தொல்லோர் சிறப்பின்
விருந்தெதிர் கோடலும் ’

ஆகிய மனையாளுடன் கூடிச் செய்யவேண்டிய இல்லற தருமகாரியங்களைச் செய்யாது, அவற்றைச் செய்வதால் கண்ணகி பெறும் மகிழ்ச்சியை இழக்கச்செய்தான். நெறியின் நீங்கியோராகிய பரத்தையர் வாழ்க்கையுடன்

பொருந்திவிட்டவனாக வாழ்ந்துவந்தபடியால் தன்னுடைய காதற்பரத்தைக்குப் பிறந்த பெண்ணுக்குத் தன்னுடைய குலதெய்வத்தின் பெயரையிட்டுப் பெருநிதிச் செலவுசெய்து விழா நடத்தினான்.

கோவலன் இவ்வாறு நடந்துவந்ததால் கண்ணகிக்கு உண்டான துக்கத்துக்கு அளவில்லை. கணவன் பரத்தைமை கொள்வதால் உண்டாகும் கொடுமையினும் பெருந்தீங்கு மனைவிக்கு உண்டாவதில்லை.

ஆயினும் கண்ணகி அதைப் பொறுத்தலே கற்பின் இலக்கணம் என்று அறிந்தவளாதலின், அணிகளை மட்டும் அணியவில்லையே அன்றி, வேறு எவ்விதத்திலும் தன் மனத்திலுள்ள வேதனையை வெளிக்காட்டினாளில்லை.

கோவலன் மாதவியிடம் மயங்கி அவளைவிட்டுப் பிரிய மனமில்லாதவனாய் வீட்டையும் மனைவியையும் மறந்தநாள் முதல் கண்ணகி,

‘அஞ்செஞ் சீறடி அணிசிலம் பொழிய,
மென்துகில் அல்குல் மேகலை நீங்கக்,
கொங்கை முன்றில் குங்குமம் எழுதாள்,
மங்கல வணியிற் பிறிதணி மகிழாள்,
கொடுங்குழை துறந்து வடிந்துவீழ் காதினள்,
திங்கள் வாண்முகம் சிறுவியர்ப் பிரியச்
செங்கயல் நெடுங்கண் அஞ்சனம் மறப்பப்,
பவள வாணுதல் திலகம் இழப்ப
மையிருங் கூந்தல் நெய்யணி மறப்பக்
கையறு நெஞ்சத்தளாய்’

உடம்பில் உயிரை வைத்துக்கொண்டிருந்தாள்.

காரைக்காலம்மையாரை அவருடைய கணவன் தெய்வம் என்று கூறி வணங்கியபோது அவர்,

‘ஈங்கிவன் குறித்த கொள்கையிது, இனி இவனுக்காகத்
தாங்கிய வனப்பு நின்ற தசைப் பொதி கழித்தார்’.

அதுபோல் கண்ணகியும் கணவன் கண்டு மகிழ்வதற்காக

அணியும் நகைகளும் கண்ணில் தீட்டும் அஞ்சனமும் கொங்கையில் எழுதும் குங்குமமும் நெற்றியில் இடும் திலகமும் கூந்தலில் தடவும் நெய்யும் இனி எதற்காக என்று நீக்கினுள்.

கண்ணகி தன்னுடைய துயரத்தைத் தன் மாமனுர் மாமியார் முன் கரந்தொழுகினுள். ஆயினும் அவர்கள் இவளுடைய பொறுமையைப் பாராட்டும்போது இவளு டைய துயரம் இத்துணை என்று அவளுடைய பொய்ம்முறு வல் கூறும்; அதனைக்கண்டு அவர்கள் வருந்தி வந்தனர்.

கண்ணகி தன்னுடைய வருத்தத்தை அவர்களிடந் தான் மறைத்தாள் என்பதில்லை; தன்னுடைய தோழி யாகிய தேவந்தியிடங்கூடக் கூறினுளில்லை. தேவந்திதான் 'வாட்டருஞ்சீர்க் கண்ணகி நல்லாளுக்கு உற்ற குறை யுண்டு' (9 ; 40–41) என்று ஊகித்தறிந்தாள்.

கண்ணகி தனக்கு இவ்வளவு துன்பமும் மாதவியால் என்று அறிந்திருந்தும்,

> 'மடம்படு சாயலாள் மாதவி தன்னைக்
> கடம்படாள்'

அழகும் மென்மையுமுடைய மாதவியை வெகுளாள் என்று காவற்பெண்டு என்னும் கண்ணகியின் செவிலித்தாய் கூறு கிருள்.

கோவலன் மாதவியிடம் புலந்துவந்து கண்ணகியிடம், 'சலம்புணர் கொள்கைச் சலதி' அதாவது வஞ்சகம் பொருந்திய கொள்கையுடைய பொய்த்தி என்று மாதவியை இகழ்ந்து கூறும்போது, சாதாரணமான பெண்ணுயின் ஆமாம் இந்த வஞ்சகியினுல்தானே இத்தனைநாள் நான் வாழ்விழந்தேன் என்று மாதவியைத் திட்டுவாள். ஆனுல் கண்ணகியோ அவ்வாறு சொல்லிக் கணவனுக்குத் துன்பம் தர விரும்பாது நகைமுகமேகாட்டி நின்ருள். கோவலன், 'மதுரைமா நகர்க்குச் சென்று பொருள்தேட விழைந்தேன்,

என்னேடு வருவாய்' என்று கூறினன். அதைக் கேட்ட தும் ஆகட்டும் என்று அவனுடன் சென்ருள்.

ஆகவே கோவலன் அழிவந்த செய்யினும் அவனைக் கைப்பிடித்த அன்று அவனிடம் கொண்ட அன்பில் எவ்வித மாற்றமுமின்றி வாழ்ந்தவளாதலால் (சிலப். 16 : 82) அவன் அழைத்ததும் அணுவளவும் தயங்கினுளில்லை.

கோவலன் திருமணம் செய்த காலத்தில் அங்குக் குழுமியிருந்த மங்கையர்

'காதலற் பிரியாமல் கவவுக்கை ஞெகிழாமல்
தீதறு கென'

அதாவது கண்ணகி கோவலனைப் பிரியாமலும் கோவலன் கண்ணகியைக் கைவிடாமலும் இருவரன்பும் ஓரன்பாக வாழக்கடவர் என்று வாழ்த்தினர். கோவலன் கண்ணகி யைக் கைவிட்டு மாதவியிடம் தங்கினன். ஆனல் கண்ணகி அங்கி சான்ருகக்கொண்ட அன்பை அழியாமல் பாதுகாத்தாள்.

'அன்பு மாறுவதற்கான சந்தர்ப்பம் ஏற்பட்டபோதும் மாருது நிற்கும் அன்பே உண்மையான அன்பு' என்று ஷேக்ஸ்பியர் கூறும் அன்பின் இலக்கணம் கண்ணகியின் அன்புக்கு முற்றிலும் பொருந்தும்.

'உடம்பும் உயிரும் வாடியக்காலும்
என்னுற்றனகொல் இவை எனின் அல்லது'

அதாவது தன் உடம்பும் உயிரும் தேய்ந்து கூட்டமின்றி இருந்தகாலத்திலும் இவை என்ன வருத்தமுற்றனவோ என்று தனக்கு வருத்தமில்லாததுபோல (தொல். பொருள். 203) நடந்துவந்தாள்.

இவ்வாறு நடப்பதே 'இன்துணை மகளிர்க்கு இன்றி யமையாக் கற்புக் கடம்' என்று உணர்ந்து சான்ரோர் வகுத்த கற்பின் இலக்கணத்துக்குக் கடுகளவும் பிறழாது

நடந்துவந்தமையால் 'கற்புத்தெய்வம்' என்று கவுந்தியடிகளால் புகழப்பெற்ருள்.

திருவள்ளுவர் கற்பின் இலக்கணத்தை 1. மனைவி கணவனைத் தெய்வமாக மதித்து அவனுக்கு அடிமைபூண்டு ஒழுகுதல் என்றும், 2. கணவனுக்கு மட்டுமே தன்னுடைய உடலைத் துய்க்கக் கொடுத்தல் என்றும் இரண்டு பகுதிகளாகப் பிரித்தார். தொல்காப்பியர் இரண்டாவது பகுதியை விரித்துரையாமல் முதலாவது பகுதியை விரித்துரைத்தார். அதுபோலவே இளங்கோவடிகளும் இரண்டாம் பகுதியைக் கோவலன் மாதவிவீடு சென்றதும் 'கண்ணகி தன்னைக் கோலம் செய்துகொள்ளாதிருந்தாள்' என்று குறிப்பாக உணர்த்திவிட்டு, முதலாவது பகுதியையே பலவிதமாக விளக்குகின்ருர்.

தவிரவும் கண்ணகி இரண்டாவது பகுதியில் சிறந்தவள்; அதுபோல் இருங்கள் என்று இக்காலத்துப் பெண்களுக்கு எடுத்துக்கூற வேண்டியதில்லை. எக்காலத்திலும் பெண்கள் இயற்கையாகவே இந்தப் பகுதியில் வழுவி நடத்தல் அரிதே.

ஆதலால் முதலாவது பகுதியை வைத்தே அந்தக் காலமுதல் அறிஞர்கள், கண்ணகி, கற்பிற்கோர் இணையற்ற எடுத்துக்காட்டு என்றும் அவள்போல் பெண்கள் அனைவரும் இருக்கவேண்டும் என்றும் கூறியும் எழுதியும் பிரசங்கித்தும் வருகிருர்கள். கண்ணகியின் சிறப்புநோக்கி அவளை ஒரு பேராசிரியர் கண்ணகி என்று கூருமல் கண்ணகியார் என்று போற்றுகின்ருர்.

ஒரு பெண் கண்ணகிபோன்ற கற்புடையவளாய் இருக்கவேண்டுமாயின் அவள்,

1. கணவனை ஆண்டவனுகக்கருதி அவனுக்குஅடிமை பூண்டு ஒழுகுதல்வேண்டும். கணவனே தெய்வம் என்று கொண்டு, வேறு தெய்வம் தொழாதிருத்தல் வேண்டும்.

2. கணவனைத் தெய்வமாகக் கொள்வதால் அவன் எத்துணைத் தீயவனாக ஒழுகினாலும், அவனைத் தடுக்கவும் கூடாது. கண்டிக்கவும் கூடாது. அருந்ததி என்னும் சொல்லின் பொருளே தடுக்காதவள் என்பதே.

அதுமட்டுமன்று; அவன் தன் தீய ஒழுக்கத்துக்கு மனைவியின் உதவியை வேண்டினால் அவள் அதையும் அளிக்கக் கடமைப்பட்டவளாவள்.

சிவபெருமான் தொண்டர் வேடத்துடன் வந்து இயற்பகை நாயனாரிடம் அவருடைய மனைவியைத் தருமாறு கேட்டார். சிறுத்தொண்ட நாயனாரிடம் அவருடைய பிள்ளையைக் கறி சமைத்துத் தருமாறு கேட்டார். இருவரும் இத்தொண்டர் கேட்பது அறநெறிக்கு ஒவ்வாததாயிற்றே என்று எண்ணவுமில்லை; தயங்கவுமில்லை. தொண்டர் கேட்டதே பெரும்பேறுகளெண்ணி அவர் கேட்டதைத் தர விரைந்தனர்.

அதுபோல் கண்ணகியும் கோவலன் வந்து தன்னுடைய காதற்பரத்தையுடனும் வம்பப் பரத்தருடனும் காலங் கழிப்பதற்காக அவளுடைய நகைகளைக் கேட்டபோது அவள், இவன் கேட்பது தீய ஒழுக்கத்துக்காகவன்றோ என்று எண்ணாமல்,

'இன்று நீரெனக் கருள்செய்தது இதுவேல்
என்னுயிர்க் கொரு நாதநீர் உரைத்தது
ஒன்றை நான்செயும் அத்தனை யல்லால்
உரிமை வேறுள தோஎனக் கென்று'

(இயற்கை: பெரியபுராணம்)

அவன் கேட்கும் நகையை மிகுந்த மனமகிழ்ச்சியுடன் கழற்றிக் கொடுத்துவந்தாள். கண்ணகி போன்ற கற்புடையவளாக ஆக விரும்பும் பெண்கள் இவ்வாறு நடக்கத் தயங்கலாகாது.

3. கணவன் தனக்குச்செய்யும் துன்பங்களையெல்லாம் பொறுத்துக்கொள்ள வேண்டும்; மனவேதனையை மறைத்துக்கொள்ள வேண்டும். அவனிடத்தில் தனக்குள்ள

அன்பை மாற்றுமல் அவன் சொற்படியே கேட்கவேண்டும். கற்பெனப்படுவது சொல் திறம்பாமை என்று அறிந்து நடத்தல் வேண்டும். ஒருவர் கண்ணுடிமுன் நின்று கையைத் தூக்கினுல் ஆடியுள் தோன்றும் நிழல்வடிவும் கையைத் தூக்கும்; கையைக் கீழேபோட்டால் அதுவும் கீழேபோடும். அதுபோல் மனைவியும் கணவன் 'செய்' என்ருல் செய்பவளாகவும், 'செய்யாதே' என்ருல் செய்யாதவளாகவுமிருக்க வேண்டும். அவளுக்கென்று எவ்வித சுதந்திரமும் கிடையாது.

ஆகவே கணவன் தெய்வம்; மனைவி அடிமை; ஆணின் உபயோகத்துக்காகப் படைக்கப்பட்ட வஸ்து; அவள் கணவன் செய்யும் தீமைகளைப் பொறுத்துக்கொள்ள வேண்டும். அவற்றைச் செய்ய உதவி கேட்டால் உதவி செய்யவேண்டும் என்ற அடிப்படையிலுள்ள கண்ணகியின் கற்பையே எடுத்துக்காட்டாகக் கூறுகின்றனர்.

ஆனுல் இந்தக் கருத்துக்கள் முற்றிலும் தவறு. கண்ணகியின் கற்பைப் புகழ்ந்து கூறும் புலவர்களிடம் பெண் வஸ்துவா, கணவனுக்கு அடிமையா என்று கேட்டால் இல்லை என்றே கூறுவார்கள். ஆயினும் அந்தக் கருத்தையே அடிப்படையாகக்கொண்ட 'தெய்வம்தொழா அள்' என்னும் குறளை விடாமல் பிடித்துக்கொண்டு திரும்பத்திரும்பக் கூறி வருகிருர்கள். அதன் காரணம் யாது?

திருவள்ளுவர் தெய்வப்புலவர்; திருக்குறள் தமிழ் மறை; தவறு கூறுவதா? தமிழ் இலக்கியங்களில் தவருன கருத்துக்கள் உள்ளன என்று கூறுவதா என்ற மயக்கத்தில் ஆழ்ந்துவிடுகின்றனர்.

எந்த நூலாயினும் எவர் எழுதியதாயினும் தவருன கருத்து இருந்தால் தவருன கருத்து என்று கூறுவதே கடமை. தவறு செய்யாதவர் உலகில் இருக்கமாட்டார்.

'அரியகற் ருசற்ருர் கண்ணும், தெரியுங்கால்
இன்மை அரிதே வெளிறு'

என்று திருவள்ளுவரே கூறுகின்றார். இந்தக் குறளுக்குத் தாம் மட்டும் விலக்கு என்று அவர் கூறுகின்றாரில்லை.

ஆங்கில மொழியிலுள்ள இலக்கியங்களுள் ஷேக்ஸ்பியர் எழுதியவற்றையே தலைசிறந்தனவாக ஆங்கில அறிஞர்கள் கூறுவர். ஷேக்ஸ்பியர் எழுதியவை வேண்டுமா, இந்த சாம்ராச்சியம் வேண்டுமா என்று கேட்டால் சாம்ராச்சியம் வேண்டாம்; ஷேக்ஸ்பியர் போதும் என்பேன் என்பதாகக் கார்லைல் என்னும் பேரறிஞர் கூறினர். அத்தகைய சிறப்பு வாய்ந்தவை ஷேக்ஸ்பியரின் நாடகங்கள்.

ஆயினும் உலகப்புகழ்பெற்ற ரஷ்ய நாவலாசிரியர் டால்ஸ்டாய் என்பவர் ஷேக்ஸ்பியர் நாடகங்களுள் மிகச் சிறந்தவற்றில் ஒன்ருகிய 'லீயர் அரசன்' என்பதை ஆராய்ந்து அது சமத்துவக்கொள்கைக்கு முரண்பட்டதாக இருக்கிறது என்றும் ஏழைகளை இழிவுபடுத்திக் கூறுகிறது என்றும் கூறி ஒரு தனி நூல் எழுதிக் கண்டித்துள்ளனர்.

ஆங்கில மகாகவிகளுள் ஒருவரும் ஆஸ்தான கவிஞருமான பிரிட்ஜஸ் என்பவர், ஷேக்ஸ்பியர் நாடகங்களில் ஆபாசமான சொற்றெடர்களும் குரூரமான கருத்துக்களும் காணப்படுவதால் இளைஞர் கையில் நூலைக் கொடுக்கும்போது எச்சரிக்கை செய்யவேண்டும் என்று ஒரு தனி நூல் எழுதியுளர்.

இவ்வாறு ஷேக்ஸ்பியரிடம் குறைகள் காண்பதால் குணங்கள் மறைந்துவிடா. அதுபோல் திருவள்ளுவர் பெண்களைப்பற்றிக் கூறும் கருத்துக்கள் பிழையானவை என்று கூறத் தயங்குதலாகாது. பிழையைப் பிழை என்று கூருமல் பிழையில்லை என்று கூறுவதுபோன்ற பெரும்பிழை வேறு கிடையாது.

அண்மையில் ஒரு பேராசிரியர் மனு முதலிய வடமொழி ஆசிரியர்கள் பெண்ணைப் பொருளாக வைத்து எழுதியிருப்பதாகவும், பண்டைத் தமிழர்கள் அவ்விதம் கருதவில்லை என்றும் எழுதியிருக்கிருர். தம்முடைய கருத்துக்கு

முரணுக 'எத்துணை இழிஞனுயினும் மனைவி கணவனை இறைவனுகவே கருதுதல் வேண்டும்' என்று மனு கூறும் சுலோகத்தைச் சுட்டிக் காட்டுகின்ருர். இந்தச் சுலோகத்துக்கும் 'தெய்வந் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்' என்னும் குறளுக்கும் யாது வித்தியாசம்? இரண்டின் கருத்தும் ஒன்றேயல்லவா? திருவள்ளுவர் இத்தகையவனைத் தொழுவாள் என்று கூருததால் எத்தகையவனுயினும் இழிந்தவனுயினும் தொழுவாள் என்றே கருதுகின்ருர் என்பதில் சந்தேகமில்லை.

மகாத்மா காந்தியடிகள், மேற்கண்ட மனுவின் சுலோகத்தையும் பேராசிரியர் கொடுக்கும் யாக்ஞவல்கியர் முதலியவர்களுடைய சுலோகங்களையும் எழுதி இவை அனைத்தும் அறநெறிக்கு ஒவ்வாதன; அதனுல் அவற்றைத் தவருனவை என்று நீக்கிவிடவேண்டும் என்று கூறுகின்ருர். (ஹரிஜன் 28-11-1936).

மகாத்மா காந்தியடிகள் மேலும் கூறுவதாவது: 'இந்து மதமானது மனைவியைக் கணவனுக்கு அடிமையாக்கி அவளுக்கு எவ்வித சுதந்திரமும் இல்லாமற்செய்து அவனுடைய நலத்திலேயே அவளுடைய நலத்தை மறைந்துவிடச் செய்தது தவருகும். மனைவி கணவனுடைய அடிமையல்லள். அவனுடைய வாழ்க்கைத் துணையே; அதனுல் கணவனுக்குள்ள உரிமைகள் கடமைகள் அனைத்தும் அவளுக்குமுண்டு. இருவரும் இல்லறத்தில் சம பங்கு உடையவர்கள்' என்பதாகும். (யங் இந்தியா 3-10-29, 21-5-31)

இந்தக் கருத்தே அறிவுக்கும் அறத்துக்கும் ஒத்ததாகும். ஆதலால் மகாத்மா காந்தியடிகள் இக்கருத்துக்கு முரணுக வடமொழி மறைநூல்களிலுள்ள சுலோகங்களைத் தவறென்று தள்ளிவிடத் தயங்கவில்லை. அதுபோல் நாமும் நம்முடைய தமிழ் மறையிலுள்ள 'தெய்வந் தொழாஅள்' என்ற குறளையும் பெண்ணைப் பொருளாகக்கூறும் குறள்களையும் பெண்ணின் நலம் பிறர் துய்ப்பதற்கே என்று கூறும் குறளையும் தவருனவை என்று நீக்கிவிடுதல் வேண்டும்.

அதுவே ஆணும் பெண்ணும் சம மதிப்புடைய ஆன்மாக்களே என்று நம்புவோருடைய கடமையாகும்.

இளங்கோவடிகள் கண்ணகியின் கற்பின் சிறப்பின் இரண்டாவது பகுதியாகக் கூறுவது, அவள் கோவலன் பரத்தமையைப் பொறுத்துக்கொண்டதாகும். அதுவே மிக முக்கியமானது என்று கானல்வரியிலும், கண்ணகி பிரலாபத்திலும் கூறுவதை முன்னரே கண்டோம்.

> ‘உற்றநோய் நோன்றல், உயிர்க்குறுகண் செய்யாமை
> அற்றே தவத்திற் குரு.’

ஆதலின் கண்ணகியின் பொறுமை பெருந்தவமாகும் என்று சிலர் கூறுகின்றனர். தவத்திற்கு உரு, பொறுமை என்று வள்ளுவர் கூறுவது உண்மைதான்; ஆனால் கண்ணகியின் பொறுமை தவமாகாது.

ஒருவர்க்குத் துன்பம் ஐந்துவிதமாக உண்டாகலாம். அவற்றில் எந்தவிதத் துன்பத்தைப் பொறுப்பது தவம் என்று ஆராய விரும்புகின்றேன்.

1. நான் பிழை செய்யவில்லை. பிறரும் எனக்குத் துன்பம் செய்யவில்லை. ஆயினும் எனக்குத் தற்செயலாகத் துன்பம் ஏற்படுகின்றது. சாலையில் செல்லும்போது திடீரென்று மரம் சாய்ந்துவிடுகின்றது. அது தற்செயலாக உண்டாகும் துன்பம்; அதைத் தவிர்க்கமுடியாது. அதை அனுபவிக்கவேண்டும். அதைப் பொறுப்பது தவமாகாது.

2. நான் பிழைசெய்கின்றேன். அதற்காகத்தண்டனை பெறுகின்றேன். அதுவும் விலக்க முடியாதது; பொறுக்க வேண்டியதே. அந்தப் பொறுமையும் தவமாகாது.

3. நான் பிழை செய்யவில்லை. பிறர் துன்பம் செய்கின்றனர். அதை நான் எதிர்க்காமல் சகித்தால் அந்தப் பொறுமை தவமாகாது; தவறான கருத்துடைமை அல்லது அச்சமுடைமையாகும்.

4. நான் பிழை செய்யவில்லை. பிறர் துன்பம் செய்கின்றனர். அதை நான் அவருக்குத் துன்பம் செய்யும் முறையில் எதிர்க்கின்றேன். அப்போது அவர் செய்யும் துன்பத்தைப் பொறுத்துக்கொண்டு அவர்க்குத் துன்பம் செய்ய முயல்கின்றேன். அந்தப்பொறுமையும் தவமாகாது. போர்வீரமேயாகும்.

5. நான் பிழை செய்யவில்லை. பிறர் துன்பம் செய்வதை அவர்க்குத் துன்பம் செய்யாமல் எதிர்க்கிறேன். அதற்காக அவர் செய்யும் துன்பத்தைப் பொறுக்கின்றேன். திரும்பி அவர்க்குத் துன்பம் செய்வதில்லை. அந்தப் பொறுமையே தவமாகும்.

அநியாயத்தை அஹிம்சா முறையில் எதிர்ப்பதும் அப்போது உண்டாகும் துன்பத்தைப் பொறுப்பதுமே உற்ற நோய் நோன்றல், உயிர்க்குறுகண் செய்யாமை என்று வள்ளுவர் கூறும் தவத்திற்கு உருவாகும். கண்ணகி கோவலன் செய்த துன்பத்தைப்பொறுத்தது, கற்பின் இலக்கணத்தைப்பற்றித் தவருனகருத்துடைமையேயன்றித் தவமன்று.

கணவன் இழிஞனுயினும் இறைவனுகக் கருதுதல் மனைவியின் கடமையாதலால் அவனை எதிர்த்தல் என்பது கனவிலும் கருதத் தக்கதன்று என்ற கோட்பாடு சமுதாய முழுவதும் பரவியிருந்ததால், கண்ணகி கோவலனுடைய தவருன ஒழுக்கத்தைக் கடிந்து கூறுவது எங்ஙனம்?

அதனுலேயே அவள் தன் வருத்தத்தை யாரிடமும் கூருமலும் வெளியில் தெரியுமாறு காட்டாமலும் இருந்தாள். கோவலன் பணமில்லாமல் போனபிறகு அவளிடம் நகையைக் கேட்க வந்தபோதும் அவன் இழிதொழிலுக்குத் தர மாட்டேன் என்று கூருமல், அவள்

'நலங்கேழ் முறுவல் நகைமுகங் காட்டிக்'

கழற்றிக் கொடுத்துவந்தாள்.

கோவலன் வந்தபோது அவனிடம் 'போற்ரு ஒழுக்கம் புரிகின்றீர். இரு முதுகுரவர்ஏவலும் பிழைக்கின்றீர், என்னை

இல்லற தர்மத்தை இழக்கச் செய்கின்றீர், நெறியின் நீங்கியோர் நீர்மையராயுள்ளீர்' என்றுகூடக் கூறவில்லை.

> 'நகுதற் பொருட்டன்று நட்டல் மிகுதிக்கண்
> மேற்சென் றிடித்தற் பொருட்டு'

என்னும் அறத்தை மறந்தாள்.

கணவன் சொற்படி நடத்தல் கடமை என்று கற்பித்திருந்தபடியால், கணவன் தவறுசெய்தால் அப்போது அவன் சொற்படி நடவாதிருத்தலே அவள் அவனுக்குச் செய்யும் அன்பும் நன்மையும் என்பதை அறியாதிருந்தாள்.

தனயன் அறநெறி தவறி நடந்தால் தந்தை அவனுக்கு உதவி செய்யாதிருந்தால் தனயனுக்குச் சாவு ஏற்படலாம் என்று ஏற்படினும் உதவி செய்யாதிருத்தலே கடன் என்று மகாத்மா காந்தியடிகள் கூறுவதே உண்மை (யங் இந்தியா 25-8-1920).

இவ்வாறு தந்தை தனயனிடம் நடப்பது போலவே மனைவியும் கணவன்செய்யும் ஒழுக்கத் தவறுகளுக்கு உதவி செய்யலாகாது என்றும் காந்தியடிகள் கூறுகின்றார் (ஹரிஜன் 21-10-1926).

ஆதலால் கணவன் பரத்தைமையைத் தடுக்க எவ்வித முயற்சியும் செய்யாதவளும் பரத்தைமைக்காக நகைகள் கேட்டபோதெல்லாம் கழற்றிக் கொடுத்து வந்தவளுமான கண்ணகியின் கற்பு எக்காலத்திலும் ஏற்றமுடையதன்று. அவளைப் பெண்கள் பின்பற்றுதல் தவறேயாகும்.

பெண்கள் ஆண்களுடன் சம அந்தஸ்தும் உரிமையும் உடையவர்கள். இந்த உண்மையைப் பண்டைத் தமிழ் ஆசிரியர்களுள் அறநெறிச்சாரம் இயற்றிய முனைப்பாடியார் என்பவரே உரைக்கின்றார்.

> 'மருவிய காதல் மனையாளும் தானும்
> இருவரும் பூண்டுய்ப்பி னல்லால் - ஒருவரால்
> இல்வாழ்க்கை என்னும் இயல்புடைய வான்சகடம்
> செல்லாது தெற்றிற்று நின்று.

அதாவது இல்லறம் என்னும் வண்டி ஒழுங்காகச் செல்ல வேண்டுமாயின், கணவன் மனைவி என்ற இரு மாடுகளும் ஒத்துழைத்தல் அவசியம் என்று கூறுகின்றார். இருவரும் மாடுகள் என்றதால் இருவரிடையே ஏற்றத்தாழ்வு கிடையாது, இருவரும் சமநிலையுடையவர்கள் என்பது தெளிவாகும். இந்தச் சம நிலையை இந்திய அரசியற்சட்டம் பெண்களுக்கு அளிக்கின்றது.

எவராயினும் தவறு செய்தால் அதனை எதிர்ப்பது என்னும் கடமை பெண்களுக்கும் உண்டு. அஹிம்சா நெறியில் எதிர்ப்பதற்காக சத்தியாக்கிரக வழியை மகாத்மா காந்தியடிகள் வகுத்துள்ளார்.

இந்த இரண்டு உண்மைகளையும் பெண்கள் மனத்தில் ஆழ்ந்து பதியுமாறு செய்தல் அறிஞர் கடமையாகும்.

கோவலனுடைய பரத்தமையைச் சகித்துக்கொண்டு அவனைக் கண்டியாமல் உதவி செய்வதாகிய கண்ணகியின் ஆறிய கற்பை இதுவரை பார்த்தோம். அவ்வாறு தீமையைத் தடுக்காமல் உதவி செய்யும் கற்பு அறவே தீது என்ற முடிவுக்கும் வந்தோம்.

இனிக் கண்ணகியின் சீறிய கற்பைப் பார்ப்போம். கோவலன் கள்வன் என்று குற்றம் சாட்டப்பட்டுக் கொலையுண்டான் என்று கேட்டதும் கண்ணகி,

> ‘பொங்கி எழுந்தாள், விழுந்தாள், பொழிகதிர்த்
> திங்கள் முகிலோடும் சேணிலங் கொண்டெனச்
> செங்கண் சிவப்ப அழுதாள், தன் கேள்வனை
> எங்கணா என்னா இனைந்தேங்கி மாழ்கினாள்.’

அவள் கணவனை இழந்த துக்கத்தையேனும் பொறுக்க முடியும்; ஆனால் கணவனைக் கள்வன் என்று குற்றஞ் சாட்டியதை எப்படிப் பொறுப்பாள்?

என் கணவனுடைய நன்மதிப்பிற்கு ஏற்பட்ட இந்தக் கறையைக் கழுவுவேன் என்று சீறி எழுந்தாள். இறைவன்

கோயில் சென்ருள். கள்வன் அல்லன் என்று மெய்ப்பித்தாள். கணவனின் நன்மதிப்பைக் காப்பாற்றினுள்.

இவ்வாறு அவளிடம் காணப்படும் சீரிய கற்பு எந்தக் காலத்திலும் எல்லாப் பெண்களிடமும் இன்றியமையாது அமையவேண்டிய சீரிய பண்பாடு என்பதில் சந்தேகமில்லை. கணவன் பெயருக்கு இழுக்கு ஏற்படும்போது மனைவி வாளா இருத்தல் ஆகாது. இயன்றவாறு அதைத் துடைக்க முயலுதல் கடன் என்பது கண்ணகியிடம் கற்றுக்கொள்ள வேண்டிய சிறந்த படிப்பினையாகும். இந்த ஒரு விஷயத்திலேயே கண்ணகி கற்புக்கோர் எடுத்துக்காட்டாக எண்ணத்தக்காள்

கண்ணகி கணவனுக்கு ஏற்பட்ட இழுக்கை நீக்க முற்பட்டது சிறந்த பண்பு என்றேன். ஆயினும் அவள் கோவலனைக் கள்வன் என்று சொன்னதைப் பொறுக்க முடியாதவள், பரத்தன் என்று சொன்னதை எவ்வாறு பொறுத்தாள் என்பது விளங்கவில்லை.

கோவலன் மாதவியைக் காதற்பரத்தையாகக் கொண்டதே இழிசெயல். அதனுடன் நிற்காமல் வறுமொழியாளரொடும் வம்பப் பரத்தரொடும் திரிந்தான். வம்பப்பரத்தர் என்பதற்குப் 'புதிய காமநுகர்ச்சியை விரும்பும் காமுகர்' என்று அடியார்க்குநல்லார் உரை கூறுவர். ஆகவே கோவலன் அவர்களுடன்சேர்ந்து புதுப்புதுப் பரத்தையரைத் தேடி அலைந்தான் என்பது போதரும்;

'முற்பகல் தலைக்கூடி நண்பகல் அவள்நீத்துப்
பிற்பகல் பிறர்த்தேரும் நெஞ்சம்' (கலி 74)

உடையவன் என்று கூறினல் மிகையாகாது; காவிரிப்பூம் பட்டினத்தில் தென்றலானது வண்டுகளுடனும் வேனிலுடனும் வீசிற்று என்று கூறுவதற்கு, இளங்கோவடிகள்

'குரல்வாய்ப் பாணரொடும் நகரப் பரத்தரொடும்
திரிதரு மரபிற் கோவலன் போல'

என்று கூறவேண்டுமாயின் அவனுடைய பரத்தமையின் இழிவு சொல்லுந்தரமன்று.

அத்தகைய கடைகழி காமுகனுயிருந்தமை அவனுடைய பெயருக்குப் பெரியதோர் இழுக்காகாதோ? அதைத் துடைக்கக் கண்ணகி ஆத்திரப்பட்டுச் சீறி எழாதிருந்ததேன்? சீறுவதற்குப்பதிலாக ஆறியிருந்ததேன்? ஆறியிருத்தலே கற்பு என்று அல்லும் பகலும் அறிஞர்கள் அக்காலத்தில் அறைந்துவந்ததே காரணம். அதனை இக்காலத்தில் யாரும் ஏற்றுக்கொள்ளமாட்டார். ஆதலால் அதனை யாரும் கூருதிருத்தலே நலம். அங்ஙனமிருக்க அறிஞர்கள் 'ஆறிய கற்பு' என்று புகழ்ந்து கூறுவது அறிவுக்கும் அறத்துக்கும் ஒவ்வாது என்று பணிவுடன் கூறுகின்றேன்.

கண்ணகி கோவலன் கள்வன் அல்லன் என்று காட்டி அவனுடைய பெயரைக் காக்கச் சீறி எழுந்தது சரியே; ஆனல் தவறுசெய்த அரசன் தானகவே தவறு செய்துவிட்டேன் என்று உணர்ந்தான். அந்த உணர்ச்சி அவனுடைய உள்ளத்தில் நிறையவே, அதன் காரணமாக அடியற்ற மரமாக வீழ்ந்தான். அவனுடைய கோடிய கோலும் நீடிய கோலாக ஆயிற்று.

ஆனல் அவனுடைய ஆட்சியின்கீழ் வாழ்ந்த அந்த மதுரைமா நகரத்து மக்கள் அவன் இத்தகைய அநீதி செய்துவிட்டான் என்பதைக்கூட அறியார்கள். அங்ஙனமிருக்கக் கண்ணகி மன்னவன் செய்த பிழைக்காக மக்களை மடியச் செய்தல் என்பது எந்தவிதத்திலும் அறமாகாது.

ஆதலால் கண்ணகி அறத்தைக் காக்க ஆவிநீத்த அரசனைப் போற்றவே கடமைப்பட்டவள்; அங்ஙனம் செய்யாமல் யாதொரு தவறும் செய்யாத ஊராரை எரித்தது தவருகும்.

ஆகவே கண்ணகி சீறவேண்டிய வேளையில் சீருமல் ஆறினுள். சீறிய வேளையில் அளவுகடந்து அறத்துக்கு

மீறிச் சீறினுள்; இந்த இரண்டு நிலேயும் தவருனவை என் பதில் ஐயமில்லே.

அன்பர்களே, இதுகாறும் ஆராய்ந்ததின் பலனுகக் கண்டமுடிவு யாதெனில், கண்ணகி, கோவலன் கள்வன் அல்லன் என்று மெய்ப்பிக்கும் அளவுக்கு மேற்கொண்ட சீற்றமுடைய கற்பு ஒன்றிலேயே சிறந்தவள் என்பதாகும்.

இரண்டு தலைநகரங்கள்

இளங்கோவடிகள் சோழநாட்டின் தலைநகரமான காவிரிப்பூம்பட்டினத்தையும் பாண்டிய நாட்டின் தலைநகராகிய மதுரையையும் விரிவாக வர்ணிக்கின்றார். அவர் தரும் வருணனையிலிருந்து அக்காலத்து மக்கள் எவ்வாறு வாழ்ந்தார்கள் என்று அறிந்துகொள்ளலாம். அவர்கள் செல்வத்தில் செழித்திருந்தார்கள். செல்வம் தேடுவதற்குரிய பயிர் செய்தல், கைத்தொழில், வாணிகம் ஆகிய மூன்று வழிகளையும் நன்கு நடத்தி வந்தனர்.

சோழநாடும் பாண்டிய நாடும் நிலவளம் நீர்வளம் இரண்டும் நிரம்பியனவாக இருந்தன. சோழநாட்டைக் காவிரி நதியும், பாண்டிய நாட்டை வைகை நதியும் வளப்படுத்தின;

'உழவ ரோதை மதகோதை
உடைநீ ரோதை தண்பதங்கொள்
விழவ ரோதை சிறந்தார்ப்ப
நடந்தாய் வாழி காவேரி'

என்றும்,

'வாழி யவன்தன் வளநாடு
மகவாய் வளர்க்குந் தாயாகி
ஊழி யுய்க்கும் பேருதவி
ஒழியாய் வாழி காவேரி'

என்றும் இளங்கோவடிகள் காவிரி ஆற்றைச் சிறப்பிக்கின்றார்.

உலகத்தில் கோள்நிலை திரிந்து மாரி வறங்கூறுங் காலத்திலும் காவிரிப்புதுநீர்,

'சூன்முதிர் கொண்மூப் பெயல்வளஞ் சுரப்பக்
குடமலைப் பிறந்த கொழும்பல் தாரமொடு
கடல்வளம் எதிரக் கயவாய் நெரிக்கும்'.

அதாவது குடக மலையில் மழை பெய்வதும் காவிரியில் நீர் பெருக்கெடுத்து வருவதும் தப்பா.

ஆதலால் காவிரிப்பூம்பட்டினத்திலிருந்து உறையூர் போகும் வரையிலும்

'வயலும் சோலையும் அல்லது யாங்கணும்
அயல்படக் கிடந்த நெறியாங் கில்லை'

என்று கவுந்தியடிகள் கோவலனிடம் கூறுகின்றார்.

போகும் வழியெல்லாம் வள்ளிக்கிழங்கு நிலத்தைப் பிளப்பதுபோல் பெரியனவாயிருக்கும். பலாப் பழங்கள் தேனொழுகத் தொங்கும். செந்நெற் கதிர்கள் கவரித் தொங்கல்போல் வளைந்து கிடக்கும். அங்குக் கரும்பல்லது காடில்லை;

'கரும்பின் தொடுத்த பெருந்தேன் சிதைந்து
சுரும்புசூழ் பொய்கைத் தூநீர் கலக்கும்'

கரும்பிலே பெருந்தேன் அடைகள் காணவேண்டுமாயின் கரும்பு எத்தனைப் பருமனாயிருக்கும் என்று அறிந்துகொள்ளலாம்.

இவ்வாறு சோழநாட்டில் பயிர்த்தொழில் சிறந்திருந்ததால் இளங்கோவடிகள் அந்நாட்டு விவசாயிகளைப்

'பரப்புநீர்க் காவிரிப் பாவைதன் புதல்வர்,
இரப்போர் சுற்றமும் புரப்போர் கொற்றமும்
உழவிடை விளைப்போர்'

என்று சிறப்பிக்கின்றார்.

பாண்டி நாட்டை வளப்படுத்திய வைகையாற்றை இளங்கோவடிகள்

'உலகுபுரந் தூட்டும் உயர்பேர் ஒழுக்கத்துப்
புலவர் நாவிற் பொருந்திய பூங்கொடி
வையை என்ற பொய்யாக் குலக்கொடி'

அதாவது உலகத்திலுள்ள மக்களுக்குப் பல பொருள்களை யும் விளைவித்துத்தரும் உயர்குணத்தவள். சேர்ந்தார்க்கு வரையறையின்றி இன்பமளித்தலின் திருமகளை ஒத்தவள். பருவம் பொய்யாமல் நீர் வருவதால் பாண்டியர் குலக்கொடி யாயிருப்பவள். இக்காரணங்களால் புலவர்களால் ஏற்றப் படுபவள் என்று போற்றுகின்ருர்.

வையை நதி இக்காலத்தில் வறண்ட ஆருக இருப்பது போல் அக்காலத்தில் இருக்கவில்லை. ஆடிக்கோடை யிலுங்கூட

‘பரிமுக அம்பியும் கரிமுக அம்பியும்
அரிமுக அம்பியும் அருந்துறை இயக்கும்
பெருந்துறை’

உடையதாயிருந்தது. அத்துணை ஆழமாக நீர் ஓடிக்கொண் டிருந்தது. அந்த நீர் ஆண்டு முழுவதும் இடையருது ஒழுகியது என்பதை இளங்கோவடிகள் ‘நீடுநீர்வையை’ (துன்பமாலை, 4) என்று குறிப்பிடுகின்ருர். ஆதலால் நாடெங்கும்,

‘புள்ளணி கழனியும் பொழிலும் பொருந்தி
வெள்ளநீர்ப் பண்ணையும் விரிநீர் ஏரியும்
காய்க்குலைத் தெங்கும் வாழையும் கமுகும்’

நிரம்பியிருந்தன. இவ்வாறு பாண்டிய நாடு

‘பொய்யா வானம் புதுப்பெயல் பொழிதலும்
வையைப் பேரியாறு வளஞ்சுரந் தூட்டலும்’

உடையதாயிருந்தது.

இவ்வாறு சோழநாட்டிலும் பாண்டி நாட்டிலும் நீர் வளம் நில வளம் நிறைந்து பயிர்த்தொழில் சிறந்து நடந்து வந்தபடியால் காவிரிப்பூம்பட்டினத்திலும் மதுரைமா நகரத்திலும்,

‘நிறைக்கோல் துலாத்தர் பறைக்கட் பராரையர்
அம்பண அளவையர் எங்கணுந் திரிதரக்
கூலங் குவித்த கூல வீதிகள்’

அதாவது பதினெண்வகைத் தானியங்களை மலைபோல் குவித்து வைத்துக்கொண்டு பறையாலும் மரக்காலாலும் அளந்து கொடுக்கும் தான்யக் கடைகள் நிறைந்திருந்தன.

அக்காலத்து மக்கள் பயிர்த்தொழிலில் மிகுந்த திறமை யுடையவர்களாயிருந்ததுபோலவே, பலவிதமான கைத் தொழில்களிலும் சிறந்தவர்களாயிருந்தார்கள். சோழ நாட்டில் இன்ப வாழ்வுக்கு வேண்டிய எல்லாக் கைத்தொழில் களும் நடைபெற்றன. அவற்றுள் தலையாயது நெசவுத் தொழில். காவிரிப்பூம்பட்டினத்தில்

'பட்டினும் மயிரினும் பருத்தி நூலினும்
கட்டும் நுண்வினைக் காருகர்'

இருந்தனர். காருகர் என்பது நெசவு செய்வோரையும் குறிக்கும்; நெய்த துணியில் நூலால் பூவேலை செய்வோரை யும் குறிக்கும். மாதவி கோவலனுடைய ஊடலைத் தீர்ப்ப தற்காகக் கோலங்கொண்டபோது 'நிறங்கிளர் பூந்துகில்' உடுத்தினாள்; நிறங்கிளர் பூந்துகில் என்பதற்கு நீலநிறங் கிளரும் பூத்தொழிலையுடைய நீலச்சாதருடை என்று அடியார்க்குநல்லார் உரை எழுதுகின்றார்.

பாண்டிய நாட்டிலும் நெசவுத்தொழில் உயர்ந்த நிலை யிலேயே இருந்தது. அங்குள்ள ஜவுளிக்கடைகளில்

'நூலினும் மயிரினும் நுழைநூற் பட்டினும்
பால்வகை தெரியாப் பன்னூறு அடுக்கத்து
நறுமடி'

நிறைந்திருந்தன. அறுவைக்கடையில் ஆடைகள் அடுக்கி வைத்திருந்ததில் இக்காலத்தில் காணப்படாத ஒருசிறப்பும் உண்டு. இக்காலத்தில் கடையில் கோடித் துணிகளை வாங்கினால் பெரும்பாலானவற்றை அப்படியே உடுத்த முடியாது. அவை கஞ்சிநாறும்; நன்றாக அலசி உலர்த்திய பின்னரே உடுத்தலாம். ஆனால் அக்காலத்தில் புடவைக் கடைகளுக்கு வாசம் கொளுத்துவதுண்டு; அதனால் அங்குள்ள ஆடைகளை 'நறுமடி' என்று கூறுகிறார்.

நெசவுத் தொழிலாளர் தவிர வேறு பலவிதமான தொழிலாளர்களும் இருந்தனர். கன்னர், கொல்லர், தச்சர், தட்டார், தையற்காரர் இருந்ததோடு அழகான சித்திரம் எழுதும் ஓவியர்களும் சிற்பங்கள் இயற்றும் மண்ணீட்டாளர் களும் துணியாலும் கிடைச்சாலும் புட்பம், வாடாமாலை, பொய்க்கொண்டை முதலியன செய்வோரும் இருந்தனர்.

இவை தவிரக் காவிரிப்பூம்பட்டினத்தில் பட்டும், பவள மும், சந்தனமும், அகிலும், முத்தும், மணிகளும், பொன் னும் நிறைந்த கடைகள் பலவிருந்தன. பொன் வாணிகர் கடைகளில் பொன்னுலும் மணியாலும் முத்தாலும் செய்த அணிகலன்கள் எண்ணிக் கரைகாண அரியனவாக இருந்தன.

மதுரைமாநகரத்தில் இந்திரசாலம்போன்ற வைரம், பசிய கதிரொளி பரந்த மரகதம், நால்வகை மாணிக்கம், பொன்னை மாசறத் தெளியவைத்தா லொத்த புட்பராகம், தேன்துளிபோன்ற வைடூரியம், இருளைத் தெளியவைத்தா லனைய நீலம், மஞ்சளும் சிவப்பும் கலந்த கோமேதகம், தெளிந்த ஒளியையுடைய முத்து, தூதுளங்கனி போன்ற பவளம் ஆகிய நவமணிகளின் பிறப்பு முதல் சிறப்பு ஈருகத் தெரியவல்ல வணிகர்களுடைய இரத்தினங்கள் உண்டு.

சாதரூபம், கிளிச்சிறை, ஆடகம், சாம்புநதம் என்னும் நால்வகைத் தங்க வகைகளை நன்கு அறியக்கூடிய பொன் வாணிகரும் இருந்தனர்.

இவ்வாறு மதுரைமாநகரில் பலவிதமான செல்வப் பொருள்கள் நிறைந்திருந்த கடைத்தெருவை இளங்கோ வடிகள்,

> வகைதெரி வறியா வளந்தலை மயங்கிய
> அரசுவிழை திருவின் அங்காடி வீதி

அதாவது அரசர்களும் காண்பதற்கு விரும்பத் தக்கவாறு பொருள் நிறைந்திருந்த கடைத்தெரு என்று வருணிக் கின்றூர்.

அக்காலத்து மக்கள் உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் சிறப்பான வாணிகம் நடத்திவந்தனர். காவிரிப்பூம்பட்டினத்தில் வாணிகக் கப்பல் ஏராளமாக வந்து தங்குவதற்காகத் துறைமுகமிருந்தது. அதை இளங்கோவடிகள்

மலைப்பல் தாரமும் கடற்பல் தாரமும்
வளந்தலை மயங்கிய துளங்குகல விருக்கை

அதாவது பலவிதமான பண்டங்கள் நிறைந்த மரக்கலங்கள் அசைகின்ற துறைமுகம் என்பர். கப்பல்கள் இரவில் கரை வந்துசேர்வதற்குத் துணையாகத் துறைமுகத்தில் கலங்கரை விளக்கம் ஒன்று இருந்தது.

அக்காலத்தில் வாணிகத்தில் சிறந்த யவன நாட்டவர்கள் வாணிகத்தின்பொருட்டு காவிரிப்பூம்பட்டினத்தில் கடற்கரையில் மாளிகை அமைத்து வாழ்ந்து வந்தனர்.

காவிரிப்பூம்பட்டினத்துக்குத் தரை மார்க்கமாகவும் நீர்மார்க்கமாகவும் வந்து குவிந்த பண்டங்கள் பலப்பல.

நீரின் வந்த நிமிர்பரிப் புரவியும்
காலின் வந்த கருங்கறி மூடையும்
வடமலைப் பிறந்த மணியும் பொன்னும்
குடமலைப் பிறந்த ஆரமும் அகிலும்
தென்கடன் முத்தும் குணகடல் துகிரும்
கங்கை வாரியும் காவிரிப் பயனும்
ஈழத் துணவும் காழகத் தாக்கமும்
(பட்டின 185-191)

வந்தன என்று பட்டினப்பாலை கூறுகின்றது.

இவ்வாறு செல்வத்துறைகளில் எல்லாம் சிறந்திருந்தபடியால் காவிரிப்பூம்பட்டினமானது,

அரும்பொருள் தரூஉம் விருந்தில் தேஎம்
ஒருங்குதொக் கன்ன

எழிலுடையதாக இருந்தது. அதன் காரணமாக அது

முழங்குகடன் ஞால முழுவதும் வரினும்
வழங்கத் தவாஅ வளத்த தாகி

அதாவது உலகத்திலுள்ள மக்கள் எல்லோரும் ஒருங்குகூடி வந்தாலும் அவர்களுக்கு உணவு அளிக்கக்கூடிய வள முடையதாகி இருந்தது.

இவ்வாறு சிலப்பதிகார காலத்து மக்கள் செல்வத்தில் திளைத்தபடியால் அவர்களுடைய வாழ்வும் அதற்குத் தகுந்ததாக இருந்தது.

காவிரிப்பூம்பட்டினத்திலும் மதுரைமாநகரத் திலும் தெருக்கள் எல்லாம் ஆறு கிடந்தனபோல் அகன்று நீண்டிருந்தன; அங்குள்ள மாளிகைகள் முகில்தோய் மாடங்கள், ஒவ்வொன்றும் ஏழுமாடிகள் உடையது. மாதவி போன்ற தலைக்கோல் வரிசைபெற்ற ஆடுங்கூத்திகளுடைய வீடுகள், அரசன் தன் பரிவாரங்களுடன் தங்கக்கூடிய அளவு பெரியனவாக இருந்தன. வீடுகளின் முகப்பிலுள்ள திண்ணைகளை இளங்கோவடிகள்,

> மரகத மணியொடு வயிரம் குயிற்றிப்
> பவளத் திரள்காற் பைம்பொன் வேதிகை

என்பர். வீட்டு வாயில்கள் மிக உயரமாயிருக்கும்; அவற் றில் மகர தோரணங்கள் தொங்கும்.

குளிர்காலத்தில் வாடைக்காற்று வீசி உடலை நடுங்கச் செய்யும். ஆதலால் அக்காலத்தில் நாலாவது மாடியில் தங்குவர். அங்குள்ள சன்னல்கள் குறுங்கண் சாளரங்கள். அதிகக் குளிராய் இருந்தால் அந்தச் சிறு சன்னல்களையும் மூடிவிட்டு அகிலை எரித்து நெருப்புக் காய்வர்.

இதர காலங்களில் குளிர்ந்த தென்றற்காற்று மெல் லென்று தாராளமாக வருவதற்காக மற்ற மாடிகளில் சன் னல்கள் வாய்களாகவும் (அதாவது பெரிய வாயில்கள் போலவும்), புழைகளாகவும் (அதாவது சிறிய வாயில்கள் போலவும்) இருக்கும் (பட்டின 151-287). சன்னல்களும்

> மாலைத் தாமத்து மணிநிறைத்து வகுத்த
> கோலச் சாளரங்கள்

அதாவது மணிகள் கோத்த மாலைகளால் அலங்காரஞ் செய்யப்பட்டனவாக இருக்கும்.

பெரிய மாளிகைகளின் கூரைகள் மண் ஓட்டால் வேயாமல் பொன்தகட்டால் வேய்ந்திருக்கும். அல்லது வேயாமாடங்களாக இருக்கும். அதில் காதலர் நிலவுப் பயன் கொள்வர்.

இரவில் மாணிக்க விளக்கு ஏற்றுவர் (கனு : 3). மயன் செய்து வைத்தாற்போன்ற மணிக்கால் அமளியில் உறங்கு வர் (மனை : 12). அமளியைச் சுற்றி ஓவிய எழினி சூழக் கட்டுவர்; ஓவிய எழினி என்பது சித்திரப்பணி எழுதின மசகவரி என்னும் கொசுவலை. கட்டிலின்மீது சித்திர விதானத்தைக் கட்டுவர் (கடலாடு : 169-170).

அக்காலத்து மங்கையர் நாடோறும்

பத்துத் துவரினும் ஐந்து விரையினும்
முப்பத் திருவகை ஓமா லிகையினும்
ஊறின நன்னீர் உரைத்த நெய்வாசம்
நாறிருங் கூந்தல் நலம்பெற ஆட்டிப்
புகையிற் புலர்த்தி பூமென் கூந்தலை
வகைதொறும் மான்மதக் கொழுஞ்சே றூட்டுவர்
(கடலாடு . 76–81)

அதாவது பத்துத்துவர், ஐந்து விரை, முப்பத்திரண்டு ஓமா லிகை இவற்றில் ஊறிய நீரால் ஸ்நானம் செய்வர். கூந்தலை அகிற்புகையால் உலர்த்திவிட்டுக் கஸ்தூரிக் குழம்பைத் தடவி ஐந்து விதமாக முடிப்பர். அதன்பின் அழகிய பூந் துகில் உடுத்துவர்.

மாதவி கோவலனுடைய ஊடலைத் தீர்ப்பதற்காகக் கோலஞ் செய்தபோது முப்பத்திரண்டு வகை நகைகளை அணிந்ததாக இளங்கோவடிகள் கூறுகின்றார். அவள் தன் னுடைய காலிலுள்ள மெல்லிய விரல்களில் மோதிரம், பீலி முதலியவற்றை அணிந்தாள். கால்களில் பாதசாலமும் பாடகமும் சதங்கையும் அணிந்தபின் அரையில் நீலநிறம்

அமைந்த அழகிய பூந்துகிலை உடுத்தாள். அதன்மீது முப்பத்திரண்டு முத்துக்கோவையினுடைய மேகலையை அணிந்தாள். தோளில் கண்டிகையும் முத்துமாலையும், கைகளில் மாணிக்கச்சூடகமும், பொன், மணி, சங்கு பவளம் இவற்றால் செய்த வளையல்களும், கைவிரல்களில் நெளிவு மோதிரம் போன்றவையும் அணிந்தாள். அவளுடைய கழுத்தைச் சங்கிலி, சவடி, சரப்பணி, முத்தாரம் முதலியன அழகு செய்தன. இந்திர நீலமும் வயிரமும் பதித்த குதம்பைகள் காலுக்கு ஒளி தந்தன. பூரப்பாளை முதலிய தலையணிகளைக் கூந்தலில் அணிந்தாள்.

அக்காலத்து மக்கள் பலவகையான வாசனைப்பொருள்களைப் பயன்படுத்தினர். வண்ணம், சுண்ணம், தண்ணறும் சாந்தம், பூ முதலியன அவற்றுள் சில.

செம்பொன் வள்ளத்துச் சிலதியர் ஏந்திய
அந்தீந் தேறல் மாந்துவர்

அவர்களுடைய வெற்றிலைப்பெட்டியும் பொன்னால் செய்ததாகும்.

பெண்கள் வையம், சிவிகை, மணிக்காலமளி ஆகிய வாகனங்களில் ஏறிச்செல்வர். ஆண்கள் குதிரைகளில் ஏறுவர். (கடலாடு 119-120).

இவ்வாறு காவிரிப்பூம்பட்டினமும் மதுரைமாநகரமும் செல்வச் செழிப்பும் சுகபோக வாழ்க்கையும் உடையனவாக இருந்தன. அங்கிருந்த மக்கள் 'மண்ணகம் மருள, விண்ணகம் வியப்ப' (இந்திர 157) வாழ்ந்தனர். மண்ணிலுள்ளவர்கள் இப்படித்தான் தேவர்கள் வாழ்வர்போலும் என்று மருண்டனர். விண்ணிலுள்ளவர்கள் நம்முடைய தேவலோகத்தினும் இந்நகரங்கள் சிறப்புடையனவோ என்று வியந்தனர்.

இவ்வாறு சிலப்பதிகார காலத்தில் காவிரிப்பூம்பட்டினத்திலும் மதுரைமாநகரத்திலும் வாழ்ந்த மக்கள் ஏராளமாகச் செல்வம் படைத்திருந்தார்கள்; இன்பமாக வாழ்க்கை நடத்தினார்கள்; இவ்வளவும் இரண்டாயிரம் ஆண்டுகட்கு

முன்னர் என்னும்போது இக்காலத்து அறிஞர்களுடைய மனத்தில் இறும்பூது உண்டாவது இயற்கையே.

ஆதலால் ஒரு பேராசிரியர் 1. 'செல்வம் மலிந்த நாடே சிறப்புடைய நாடு' என்றும், 2. 'அக்காலத்தியத் தமிழ் மக்கள் நாகரிக முறைகள் என்று கருதப்படுகின்ற பல துறைகளிலும் தலைசிறந்து விளங்கினார்கள்' என்றும் அளவற்ற ஆனந்தத்துடன் கூறுகின்றார். செல்வத்தைவைத்துச் சிறப்பை நிருணயித்தல் தவறு என்பதே எக்காலத்திற்கும் ஒத்த ஓர் உண்மையாகும்.

செல்வம் என்பது மனிதன் வாழ்வதற்கு இன்றியமையாது வேண்டப்படுவதே. 'பொருள் இல்லார்க்கு இவ்வுலக மில்லை' என்பது தமிழ்மறை. 'செல்வம் இல்லாதவன் தரித்திரனே; ஆனால் 'செல்வம் மட்டும் உள்ளவன் அவனிலும் தரித்திரனாவான' என்று ஆங்கிலப் பழமொழி ஒன்று கூறும். செல்வம் இருந்தால்மட்டும் ஒருவன் செல்வன் ஆகிவிடமாட்டான். செல்வத்துடன் வேறொன்றும் இருக்க வேண்டும்; அப்பொழுதே அவன் செல்வன் ஆவான். அவ்வாறு செல்வத்துடன் இருக்கவேண்டிய பொருள் யாது?

'மனிதன் உணவினால் மட்டும் அதாவது செல்வத்தால் மட்டும் வாழ்வதில்லை' என்று இயேசு கிறிஸ்து என்னும் உலகப் பெரியார்களில் ஒருவர் கூறினர். செல்வம் ஒருவனுக்கு உயிர் கொடுக்கும். ஆனால் வாழ்வு கொடுக்காது. ஒருவன் உயிருடன் இருப்பதோடு வாழவும் செய்யவேண்டுமாயின் வேறொன்றும் அவனிடம் இருக்கவேண்டும். அது யாது?

உலகத்திலுள்ள உயிர்ப்பிராணிகளிடம் உள்ள இயற்கை உணர்ச்சிகள் அனைத்திலும் தலையாயது, தலையாய ஆற்றலுடையது உயிரைப் பாதுகாத்துக் கொள்வதற்கான உணர்ச்சியாகும். அந்த உணர்ச்சி மனிதனிடமும் அத்தகைய ஆற்றலுடனே உள்ளது. அழுகு தொழுநோயர்கூட ஆவியைவிட்டு விடுதலைபெற விழைவதில்லை.

ஆயினும் மக்கள் உயிரைக் காப்பதைவிட்டு வேறொன்றைக் காக்க விரும்புவதுமுண்டு. அதுவே மனிதனுக்கு மனிதன் என்னும் சிறப்பைத் தருவது. மனிதன் என்னும் பெருமையினும் மனிதனுக்கு உண்டாகக்கூடிய பெருமை வேறு எது ?

இவ்வாறு செல்வம் உடையவனைச் செல்வன் என்று அழைக்குமாறு செய்யக்கூடியதும், மனிதனை வாழுமாறு செய்யக்கூடியதும், உயிரினும் பெரிதாக மதிப்பதுமான பொருள் ஒழுக்கமே.

ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்.

ஆகவே ஒழுக்கமுடையவனே உயிருடையவனும் வாழ்பவனும் ஆவான்; ஒழுக்கமில்லாதவன் இறந்தவனே.

பாரதியார் சுதந்திரதேவிக்குச் சொன்ன ஒரு செய்யுளைச் சிறிது மாற்றி,

நன்னெறி நிற்கிலாதார்
நனிமிகு செல்வரேனும்
பன்னருங் கல்விகேள்வி
படைத்துயர்ந் திட்டாரேனும்
பின்னரும் எண்ணிலாத
பெருமையிற் சிறந்தாரேனும்
அன்னவர் வாழ்க்கை பாழாம்
அணிகள்வேய் பிணத்தோ டொப்பார்.

என்று கூறலாம்.

ஆகவே உயிரினும் சிறந்த ஒழுக்கமே ஒருவனுக்கு உயர்வு தருவதாகும். ஒருவன் ஒரு நகையைப் பொன் வாணிகரிடம் கொண்டுபோனால் அவர் அந்த நகை பொன்னால் செய்ததா அல்லவா என்று அறிவதற்காக அதை ஒரு கல்லில் உறைத்துப் பார்ப்பார் என்று கூறுவர். கல்லில் உறைத்துப் பார்ப்பது உண்மைதான். ஆனால் அவர் உறைப்பது சாதாரணமான கல்லிலன்று. சாதாரணமான

கல்லில் உறைத்தால் தங்கமா இல்லையா என்பதைத் தெரிந்துகொள்ளமுடியாது. அதனால் அவர் அதற்கென்று உள்ள ஒரு தனிக்கல் வைத்திருப்பார். அதைக் கட்டளைக் கல் என்பர். அதுவே தங்கமா இல்லையா என்பதை ஐயமறக் காட்டும்.

அதுபோல் ஒருவனுடைய அல்லது ஒருநாட்டினுடைய சிறப்பை அறிவதற்கும் ஒரு கல் உண்டு. பேராசிரியரும் ஒரு கல் தருகிறார். திருவள்ளுவரும் ஒரு கல் தருகிறார். பேராசிரியர் தருவது செல்வம் என்பது; அது வெறும் சாதாரணக்கல். அதைக்கொண்டு அறிய முடியாது.

திருவள்ளுவர் தருவதே கட்டளைக்கல்; அதுவே விஷயத்தை விளக்கும்.

பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல்.

ஒருவனுடைய பெருமையையும் சிறுமையையும் அவனுடைய செயலை - ஒழுக்கத்தை வைத்தே அளந்தறிய வேண்டும் என்று கூறுகிறார்.

அதனாலன்றோ கிறிஸ்துவ வேதமானது 'ஒரு சமூகத்தின் உயர்வைக் காட்டுவது அதன் ஒழுக்கமே' என்று கூறுகின்றது. செல்வமே ஒரு நாட்டின் சிறப்பைக் காட்டுமாயின் உலகத்தை அழியாமல் பாதுகாப்பதும் செல்வமே என்று கூறத்தகும். ஆனால் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் தமிழ்நாட்டிலிருந்த இளம்பெருவழுதி என்னும் அரசரிடம் உலகம் நிலைத்து நிற்பது எதனால்? என்று கேட்டபோது செல்வம் என்று கூறாமல்

தமக்கென முயலா நோன்றாள்
பிறர்க்கென முயலுநர் உண்மை யானே (புறம்-182)

என்று கூறினார்.

ஆங்கில நாட்டில் ரஸ்கின் என்ற ஒரு பெரியார் இருந்தார். அவர் 'கடையவருக்கும் கடைத்தேற்றம்' (Unto the Last) என்ற பெயருடைய ஒரு சிறுநூல் எழுதினார். அதுவே

காந்தியடிகளைத் துறவியாக்கியது. அதிலுள்ள கருத்தையே காந்தியடிகள் 'சர்வோதயம்' என்று கூறினர். அத்தகைய நூலில் அதன் ஆசிரியர் பெருந்தகை 'சான்றோர் உள்ள நாடே சிறந்த நாடு' என்று கூறுகின்றார்.

இந்தக் கருத்து தமிழ்நாட்டு மக்களுக்குப் புதியதன்று. இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பே ஔவைப்பிராட்டியார் ஒரு நாட்டின் சிறப்பு அதிலுள்ள நிலத்தின் செழுமையைப் பொறுத்ததன்று; மக்களின் ஒழுக்கத்தையே பொறுத்தது;

நாடா கொன்றோ காடா கொன்றோ
அவலா கொன்றோ மிசையா கொன்றோ
எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை, வாழிய நிலனே (புறம்-187)

என்று மிகத் தெளிவாக அறிவுறுத்தியுள்ளார்.

செல்வத்தைக்கொண்டு சிறப்பைக் கணிப்பது தவறு என்பதற்கு இத்துணையும் கூறியதுகூடத் தேவையில்லை. திருவள்ளுவர்

பொருட்செல்வம்
பூரியார் கண்ணும் உள

என்று ஐந்து சொற்களில் எச்சரிக்கை செய்துள்ளதே போதும்.

2. இனிப் பேராசிரியர் அக்காலத்து மக்கள் எல்லா வித நாகரிகத் துறைகளிலும் சிறந்திருந்தார்கள் என்று கூறுகின்றார். நாகரிகம் என்பது யாது?

ஆதியில் மனிதன் காட்டிலேயே வசித்தான். இயற்கைச் சக்திகளுக்கு ஆளாயிருந்தான். அவனுக்குப் பயிர் செய்யத் தெரியாது. அதனால் காய்கனிகள் முதலியவற்றையும் கையில் அகப்பட்ட சிறு பிராணிகளையுமே உணவாக உண்டான். அவனுக்கு ஆடை நெசவு செய்யத் தெரியாது; அதனால் ஆடையின்றியே அலைந்து திரிந்தான். வீடு கட்டத் தெரியாது; அதனால் வெயிலுக்கும் மழைக்கும் மரங்களின் அடியிலேயே தங்கினான்.

ஆயினும் நாளடைவில் இயற்கைச் சக்திகளைப்பற்றிச் சிறிது சிறிதாக அறிந்து பயன்படுத்தத் தெரிந்து வந்தான். பல்லாயிரக் கணக்கான ஆண்டுகளுக்குப் பின்னர் பயிர் செய்யவும் ஆடை நெய்யவும் வீடு கட்டவும் அறிந்தான்.

காட்டு வாழ்வு இயற்கைக்கு அடிமையாயிருந்ததைக் காட்டும். வீட்டு வாழ்வு இயற்கையை அடக்கி ஆளத் தெரிந்துகொண்டதைக் காட்டும். அதனுல் என்று வீட்டில் வாழத்தொடங்கினுனே, அன்று முதலே நாகரிகத் தொடக்கம் என்று மானிடவியலார் கூறுவர்.

நாகரிகம் என்னும் சொல் நகரம் என்பதிலிருந்து வந்த தாயிற்றே; அப்படியானுல் நகரம் அமைத்து வாழக் கற்றுக் கொண்ட காலம் அல்லவா நாகரிகத்தின் ஆரம்பக் காலம் என்று கேட்கக்கூடும். நகரத்திலிருந்தே நாகரிகம் என்னும் சொல் பிறந்தது. ஆனுல் நகரம் என்பது ஆதியில் வீட்டையே குறித்தது. (பட்டின : 20)

இவ்வாறு மனிதன் இயற்கைச் சக்திகளை அறியவும் பயன்படுத்தவும் கற்றுக்கொண்டதன் பயனுகத் தனக்குப் பல்லாயிரக் கணக்கான சுகபோகப் பொருள்களை உண்டாக்கிக்கொண்டான். இந்த முறையில் பார்த்தால் காவிரிப் பூம்பட்டினத்திலும் மதுரைமா நகரத்திலும் வாழ்ந்த மக்கள் இறும்பூது அடையக்கூடிய அளவு நாகரிகம் மிகுந்தவர்களாகவே இருந்தார்கள்.

ஆனுல் நாகரிகம் என்பது இரண்டு வகைப்படும். இயற்கைச் சக்திகள் மனிதனுக்குப் புறத்தே உள்ளன போலவே அகத்தேயும் உள்ளன. புறத்திலுள்ள சக்திகளைப் பயன்படுத்துவது புறநாகரிகம்; அதைச் சடநாகரிகம் என்று அறிஞர் கூறுவர். அகத்திலுள்ள சக்திகளை அடக்கி ஆளுவது அகநாகரிகம்; அதை ஆன்ம நாகரிகம் என்று அறிஞர் கூறுவர்.

செல்வத்திலும் ஒழுக்கமே சிறந்ததாவதுபோல் சட நாகரிகத்திலும் ஆன்ம நாகரிகமே சிறந்ததாகும். செல்வம்

என்பது ஒழுக்கத்தைப் பெறுதற்குரிய சாதனமேயன்றி வேறன்று. ஆனால் சாதனம் பெற்றும் அதனால் உண்டாக வேண்டிய பயனைப் பெருவிட்டால் சாதனத்தால் தீங்கே யன்றி நன்மையில்லை. அதுபோல் சடநாகரிகத்தால் ஆன்ம நாகரிகப் பெருவிட்டால் சடநாகரிகம் மனிதனுக்குத் தீங்கே செய்யும்.

காவிரிப்பூம்பட்டினத்திலும் மதுரை மாநகரத்திலும் வாழ்ந்த மக்கள் சடநாகரிகத்தில் தமக்கிணையற்றவராக இருந்தார்கள் என்பதில் ஐயமில்லை. ஆனால் அவர்களிடம் சடநாகரிகம் காணப்பட்டதுபோல் ஆன்ம நாகரிகமும் காணப்பட்டால் மட்டுமே அவர்களை உண்மையில் நாகரிகம் வாய்ந்தவர்களாகக் கருதலாம். இல்லை எனில் அநாகரிக மானவர்களே.

மனிதனிடம் காணப்படும் இயற்கைச் சக்திகளுள் மிகுந்த ஆற்றலுடையன என்று உளவியலார் கூறும் இயல் பூக்கங்களில் தலையாயது காம உணர்ச்சியே என்றும், அதனை அடக்கும் அளவே நாகரிகம் என்பது அமையும் என்றும் மிகச்சிறந்த உளவியற் புலவர்களுள் ஒருவரான பிராய்டு கூறுகிறார்.

இந்த உளவியல் அளவுகோலை வைத்து அளந்தோ மாயின் சிலப்பதிகாரத்து மக்கள், நாகரிகம் அணுவளவும் இல்லாதவர்களே என்பது தெளிவாகும். அவர்கள் காம வுணர்ச்சியை அடக்கவில்லை என்பது மட்டுமன்று. அடக்க விருப்பமேயில்லை. அதில் ஆழ்ந்தே போயினர்.

> சென்றவிடத்தால் செலவிடாது தீதொரீஇ
> நன்றின்பா லுய்ப்பது அறிவு

இந்த அறிவைப்பற்றி இறையளவுகூட அவர்கள் சிந்திக்க வில்லை. காமமாகிய

> தொலையாத இன்பமெலாம் துன்னினர், மண்மேல்
> நிலையாமை கண்டவர்போல் நின்று.

அதாவது உலகத்தில் வாழ்வு நிலையாது என்பதைக்கண்டு, அது உள்ளபோதே அனைத்தின்பமும் அனுபவிப்பதற்கு

விரைதல்போல் காமஇன்பங்களை எல்லாம் அவசரம் அவசரமாக அனுபவித்தார்கள்.

காவிரிப்பூம்பட்டினத்தில் வாழ்ந்தமக்கள் செல்வத்தில் திளைத்தார்கள் என்பது உண்மைதான். ஆனால் அச்செல்வத்தை எல்லாம் காமத்தில் ஆழ்வதற்கே பயன்படுத்தினர்கள். அவர்கள் இழிந்த ஒழுக்கமுடையவர்களாயிருந்தார்கள் என்பதற்குச் சில சான்றுகள் தருகின்றேன்.

மாதவி பன்னீராண்டு நிரம்பிய காலத்தில் ஆடல் பாடல் அழகு மூன்றிலும் நிறைந்தவளாயிருந்தாள். அவளுடைய தாய் சித்திராவதி அவளுடைய ஆடலையும்பாடலையும் சோழன் கரிகாற்பெருவளத்தானுக்குக் காட்ட விரும்பினள். அதன்மேல் அரசனுடைய அவையிலுள்ள அரங்கத்தில் மாதவியின் நடன அரங்கேற்றம் நடைபெற்றது.

அக்காலத்தில் நடனத்தில் மிகுந்த திறமையுடையவளுக்கு அரசன் தலைக்கோலி என்ற பட்டம் அளித்து, அதற்கு அடையாளமாகத் தலைக்கோல் என்ற கோலைத் தருவான். அரசன் பகையரசரை வென்று அவரிடமிருந்து கவர்ந்துகொள்ளும் அவர்களுடைய வெண்கொற்றக் குடையின் காம்பைக்கொண்டே பெரும்பாலும் தலைக்கோலைச் செய்வர். அக்காம்பைச் சாம்பூநதம் என்னும் தலைசிறந்த பொன் தகட்டைக்கொண்டு பொதிந்து இடையிடையே நவமணிகளை இழைத்து அரண்மனையில் வைத்திருப்பர்.

அரங்கேற்றம் நடத்தும் நாளில் அதனை அரங்கில் வைத்துப் புண்ணியதீர்த்தத்தைப்பொற்குடத்தில்கொண்டு வந்து நீராட்டுவர் அதன்பின் அதற்கு மாலைசூட்டி அரசனுடைய பட்டத்து யானையின் கையில் வாழ்த்தித் தருவர். அதன்பின்,

முரசெழுந் தியம்பப் பல்லிய மார்ப்ப
அரைசொடு பட்ட ஐம்பெருங் குழுவும்
தேர்வலம் சென்று கவிகைக் கொடுப்ப
ஊர்வலம் சென்று புகுந்து முன்வைப்பர்

அதாவது வீரமுரசம் முதலிய முரசுகளும் பலவகை வாத்தியங்களும் முழங்கும்; அரசனும் அவனுடைய அமைச்சர், புரோகிதர், சேனாபதி முதலியோரும் தலைக்கோலுடைய பட்டத்து யானையுடன் தெருவில் நிற்கும் தேரினை வலம் வந்து தலைக்கோலைத் தேரின்மீது உள்ள கவிஞன் கையில் கொடுப்பர். கவிஞன் ஊரை வலமாக வருவான். வந்தபின் தலைக்கோலை அரங்கத்தில் வைப்பர்.

இதுகாறும் கூறியதிலிருந்து அக்காலத்தில் அரசன் ஆடல் பாடலாகிய கலைகளை அதிக ஆதரவுடன் வளர்த்து வந்தான் என்று நாம் ஆச்சரியமும் ஆநந்தமும் கொள்வோம். ஆனால் அரங்கேற்றத்தின் இறுதியில் நடக்கும் காரியங்களைப் பார்த்தால் நாம் நாணித் தலைகுனியக்கூடியதாகவே உள்ளன.

சாதாரணமாக இக்காலத்தில் நடன அரங்கேற்றம் நடந்தால யாருடைய தலைமையில் நடக்கின்றதோ அவர் அரங்கேற்றத்தின் முடிவில் நடனத்தைப் பாராட்டுவார்; பட்டம் அளிப்பார் ; பரிசு வழங்குவார் ; அவ்வளவே.

ஆனல் அக்காலத்தில் நடனம் முடிந்ததும் அரசன் ஆடியவளுக்குத் தலைக்கோலி என்னும் பட்டத்தை அளிப்பான். அரங்கத்தில் வைத்திருக்கும் தலைக்கோலையும் தருவான். தன்னுடைய மகிழ்ச்சிக்கு அறிகுறியாக ஏதேனும் ஒரு மணிமாலையும் கொடுப்பான்.

அதனுடன் நின்றுவிட்டால், நாம் தலைகுனிய வேண்டியதில்லை. அதனுடன் நிற்காமல் இவளுடைய நடனத்தை ஒருநாள் அனுபவிக்க விரும்புவோர் ஆயிரத்தெட்டுக் கழஞ்சு பொன் கொடுக்க வேண்டும் என்று ஒரு விதி செய்தாலும் குற்றமில்லை.

அப்படிக்கின்றி அரசன் இந்த ஆடற்கூத்தி
விதிமுறைக் கொள்கையின் ஆயிரத் தெண்கழஞ்சு
ஒருமுறை யாகப் பெற்றனள்

அதாவது நாடகக் கணிகையர் ஆயிரத்தெண் கழஞ்சு

பொன்னை ஒரு நாளைக்குப் பரிசமாகப் பெறுகை நூல்வழக்கு. ஆதலின் இவளுக்கும் அதையே விதிக்கின்றேன் என்று கூறுவானாயின் அதனினும் இழிவான செயல் வேறுண்டோ? அரசன் கலைகளை வளர்க்கும் முறை இதுதானோ? ஆடினாள்; பாடினாள்; இவளுடைய பாடலும் ஆடலும் இத்துணைப் பொன் பெறத் தகுந்தன என்று கூறாமல் இவளுடைய அழகான உடல் இத்துணைப் பொன் விலையாக விற்கத் தகுந்தது என்று கூறுவது அரசியல் தருமம் ஆகுமோ? அரங்கேற்றம் நடந்தது ஆடல் பாடலின் தரத்தை நிச்சயிப்பதற்காகவா, அன்றி ஆடவும் பாடவும் செய்கின்றவளுடைய தசையின் தரத்தை நிச்சயிப்பதற்காகவா? அரசனே காமத்தின் விலையை நிச்சயிப்பானாயின், அவனுடைய குடிகளுடைய ஒழுக்கத்தை என்னவென்று கூற இயலும்?

மாதவியின் ஆடலையும் பாடலையும் அழகையும் கண்டு வியந்து மன்னன் அவளுக்கு நாட்பரிசம் ஆயிரத்தெட்டுக் கழஞ்சுபொன் என்று தீர்மானித்தான். அதனுடன் அவளுக்கு ஒரு பச்சைமாலையும் அளித்தான். அந்த மாலையை மாதவியின் தாய் சித்திராபதி ஒரு வேலைக்காரியிடம் கொடுத்து 'இதற்கு ஆயிரத்தெட்டுக் கழஞ்சுபொன் தருபவனை அழைத்துவா' என்று கூறி அனுப்பினாள்.

ஊரில் காருகர்தெரு, கூலத்தெரு என்று பல தெருக்கள் இருந்தன. காருகர் தெருவில் ஆடைகள் விற்பர். கூலத் தெருவில் கூலங்களை விற்பர். அப்படியாயின் சித்திராபதி தந்த பச்சைமாலையை எந்தத் தெருவில் விற்பது? பரத்தையர் உடலை விற்கும் அந்தக் கடைத் தெருவிலேயே. அங்குத்தான் போய்நின்றாள் வேலைக்காரி. கோவலன் பொன் கொடுத்தான்; அவளுடன் மாதவி வீடு சென்றான்.

அந்தத் தெருவை இளங்கோவடிகள் 'நகர நம்பியர் திரிதரு மறுகு' என்று கூறுகின்றார். ஒவ்வொரு மொழியிலும் சில சொற்கள் தாங்கள் குறிக்கும் நல்ல பொருளை நாளடைவில் இழந்து தீயபொருளைக் குறிக்க நேர்வதுண்டு. தமிழ்மொழியில் மக்களில் உயர்ந்தோனைக் குறிப்பதற்காகப்

பயன்படும் அழகியசொல் சான்றோன் என்பது. சான்றோன் என்பவன் ஆன்று அவிந்து அடங்கிய கொள்கையுடையவன். கம்பர் கூறும் நிறைகுணத்தன். ஆனால் சான்றோன் என்னும் சொல்லைப் புலவர்கள் போர்வீரனைக் குறிக்கவும் பயன்படுத்தலாயினர். போர்வீரன் என்பவன் போர்க்களம் சென்று புறங்கொடாமல் உயிர் போகும்வரை போர்புரிபவன். அவனிடம் அந்த ஒரு குணமிருந்தால் போதும்; மற்றப்படி அவன் எத்துணை இழிந்தவனாயினும் பாதகமில்லை; அவன் போர்வீரனே. அத்தகையவனைப் புலவர்கள் சான்றோன் என்று கூறியது அணுவளவும் பொருத்தமில்லை. ஆனால் அந்தச் சொல்லின் துர் அதிர்ஷ்டம் அது.

அந்த துர் அதிர்ஷ்டம் நம்பி என்ற சொல்லுக்கும் இளங்கோவடிகள் காலத்தில் உண்டாயிற்று. நம்பி என்பது ஆடவரில் தலைபாயவனைக் குறிக்கும். ஆனால் இளங்கோவடிகள் அதைப் பரத்தனைக் குறிக்கவே தாம் ஆளும் இரண்டு இடத்திலும் (சிலப். 3; 168; 14; 100) பயன்படுத்துகின்றார். அவர் காலத்தில் பரத்தரே ஆடவரிற் சிறந்தவராகக் கருதப்பட்டனர்போலும்.

காவிரிப்பூம்பட்டினத்தில் பெண்களின் தசையை விலைபேசும் தெரு ஒன்று இருந்தது என்பதும், அங்கு பரத்தராகிய நம்பியர் வந்து கொள்முதல் செய்வர் என்பதும் அக்காலத்து மக்களின் வாழ்வில் காமம் எத்துணை உயர்நிலை பெற்றிருந்தது என்பதைக் காட்டும்.

காவிரிப்பூம்பட்டினத்தில் மருதூர்ப்பாக்கம், பட்டினப்பாக்கம் என்று இரண்டு பகுதிகள் இருந்தன. அவற்றுள் மருதூர்ப்பாக்கத்திலும் பட்டினப்பாக்கமே சிறந்தது என்பது இளங்கோவடிகள் கருத்து. அதற்குக் காரணம்

பீடுகெழு சிறப்பின் பெரியோர் மல்கிய
பாடல்சால் சிறப்பின் பட்டினப்பாக்கம்.

அதாவது பட்டினப்பாக்கம் பெருமையையுடைய பெரியோரை மிகுதியாயுடையது; புலவர்களால் பாடப்பெறும் சிறப்புடையது என்று கூறுவர்.

அங்குள்ளவர் சாதாரணமான பெரியோர்கள்கூட அல்லர், பீடுகெழு சிறப்பிற் பெரியோர், பெருமை மிகுந்த பெரியோர். அவர்கள்யார் ?

பெரியோர் என்று கூறக் கேட்டதும் கல்வி அறிவு ஒழுக்கம் நிறைந்த சான்றோர் என்று எண்ணுவோம். ஆனால் அங்கிருந்த பெரியோர்களில் ஆடற் கூத்தியர், பூவிலை மடந்தையர், காவற்கணிகையர் என்ற மூவகைப் பரத்தையரையும் இளங்கோவடிகள் சேர்த்துளர். இவர்களை இக்காலத்தில் எவரும் பெரியோராகக் கருதார்; இழிந்தோரினும் இழிந்தோராகவே கருதுவர். ஆனால் இளங்கோவடிகளே பரத்தையரைப் பெரியோர் என்று கூறுவராயின், ஏனையோர் அவர்களை எத்துணை உயர்வாக மதித்திருந்தனர் என்பதை ஊகித்துக்கொள்ளலாம். பரத்தமைத் தொழில் பண்பாட்டினும் பாராட்டப்பெற்ற காலம் அது !

முன்னால் அவர் பரத்தரை நம்பியர் என்ற சொல்லால் குறிப்பிட்டதைக் கண்டோம். இப்போது பரத்தையரைப் பெரியோர் என்ற சொல்லால் குறிப்பிடுவதைக் காண்கின்றோம். அவர்மீது பிழையில்லை. அவர் அக்காலத்தில் கண்ட அலங்கோலமான நாகரிகத்தை உள்ளது உள்ளபடி கூறுவதற்காகவே இந்த உயர்ந்த சொற்களை இழிந்த பொருளில் பயன்படுத்துகின்றார் என்று தோன்றுகிறது.

இளங்கோவடிகள் மூன்றுவகைப் பரத்தையரைக் கூறுகின்றனர். ஆடற்கூத்தியர், ஆடல்பாடல் அழகு மூன்றிலும் சிறந்தவர். மாதவியின் மரபினர்; அரசர்களாலும் அவரையொத்த செல்வர்களாலும் விரும்பப்படுபவர்.

அடுத்த தரத்துச் செல்வர்களுக்கு உதவுபவர் பூவிலை மடந்தையர். அவர்கள் அற்றைப் பரிசங்கொள்வோர். அவர்கள் ஆடல்பாடல்களில் சிறந்தவராயிருக்க வேண்டுமென்றதில்லை. அழகுடையவராயிருந்தால் போதும்.

தாழ்ந்த மக்களுக்குப் பயன்படுபவர் காவற்கணிகையர்; தொழிலாளர் போன்றவர்கள் பகல் முழுவதும் வேலை

செய்துவிட்டு இரவிலேயே இவரிடம் வர இயலும். அதனால் இவர் தம்முடைய உடலை விற்கும் வாணிகத்தை இரவிலேயே நடத்துபவர். அதனால் இவர்கள் இராக்கடை வேசையர் என்றும் கூறப்படுவர் (இந்திர. 50 அரும்ப).

கணிகையர் என்பவர் பரத்தையர். இவரைக் காவற் கணிகையர் என்று கூறுவதன் காரணம் யாது?

மாதவர் நோன்பும் மடவார் கற்பும்
காவலன் காவலின்றெனில் இன்றும் (மணி 22 : 209)

அதாவது அரசன் காவல் செய்யாவிடின் மாதவர் தவமும் மகளிர் கற்பும் அழிந்துபோகும் என்று புலவர்கள் கூறுவர்.

காவலன் பெண்களின் கற்பைக் காக்கும் வழி யாது? ஆடவர் குலமகளிரைநாடி அவர்களுடைய கற்பைக் கெடுக்காமலிருப்பதற்காகப் பரத்தையர் என்ற ஒரு வகுப்பினரை ஏற்படுத்திப் பாதுகாப்பதேயாகும். சமூகத்தில் ஏராளமாக வுள்ளவர் தாழ்ந்தவரே. அவர்களுக்கு உதவும் பரத்தையரே அரசருக்குத் துணையாக நின்று குலமகளிர் கற்பைக் காப்பவராவர். அத்தகையவரே இராக்கடை வேசையர். அதனால்தான் இவர்கள் காவற்கணிகையர் என்ற பெயர் பெற்றனர்.

இவ்வாறு அரசன் முதல் அனைவரும் பரத்தையரை விரும்பினர் என்பதும், அவர்களை இளங்கோவடிகள்கூடப் பெரியோர் என்று போற்றியிருப்பதும் அக்காலத்து மக்கள் காமக்கடலில் எத்துணைத் திளைத்தார்கள் என்பதைத் தெற்றென விளக்கும்.

பண்டைக்காலத்தில் காவிரிப்பூம்பட்டினம் புகார் என்ற பெயரால்வழங்கி வந்தது. அதனைப் புலவர்கள் பூம்புகார் என்று சிறப்பித்துக் கூறுவர். பூம்புகார் என்பது பொலிவு பெற்ற புகார் நகரம் என்று பொருள்படும். நாம் இதுவரை புகாரில் கண்ட பொலிவு காமக்களியாட்டமேயாகும். இப்பண்புடைய நகரத்தைப் பூம்புகார் என்ற அழகிய சொல்லால் புலவர்கள் புகழ்வது மாங்குடி மருதனார் மதுரை

மாநகரத்துக்கு வெளியேயிருந்த பரத்தையர் சேரியை 'மணங்கமழ்சேரி' (மதுரை 329) என்று வருணிப்பதை ஒக்கும். இப்புலவர் பெருமக்கள், புகழ்வதுபோல் இகழ் கின்றனரோ என்று எண்ணுகிறேன்.

இக்காலத்தில் சிறிய ஊர்களிலும் திருடர்கள் வந்து களவு செய்யாதவாறு இரவில் போலீஸ்காரர்கள் தெருக் களில் ரோந்து சுற்றிவருவது வழக்கம். சென்னை நகரத்தில் நாலைந்து தெருக்காரர்கள் சேர்ந்து தங்கள் வீடுகளைத் திருடர்களிடமிருந்து பாதுகாத்துக் கொள்வதற்காக ஒரு குர்க்கா என்னும் நேப்பாள தேசத்து வீரரைத் தங்கள் காவலராக நியமித்து வருகின்றனர்.

இரவில் நடுச்சாமத்தில்தான் பெரும்பாலும் திருடர்கள் வந்து தங்கள் காரியங்களைச் செய்வர். அதனால் குர்க்கா என்பவர் நாடோறும் அந்தச் சமயத்தில் தெருக்களில் சுற்றி வருவார். அவர் தம் கையிலுள்ள தடியைத் தரையில் தட்டிக்கொண்டே நடப்பார். அந்தச் சப்தத்தைக் கேட்டு வீட்டிலுள்ள மக்கள் விழிப்பாய் இருந்துகொள்வர்.

ஆனால் காவிரிப்பூம்பட்டினத்தில் போலீஸ்காரர் ரோந்து சுற்றவுமில்லை; தெருக்காரர்கள் குர்க்காவை நியமிக்கவுமில்லை. கடவுள் நியமித்த ஒரு காவலன் இருந்தான். அவன் நடுநிசியில் மட்டுமன்று இரவு முழுவதும் மாலை முதல் 'இரவுத் தலைப் பெயரும் வைகறை காறும்' தெருக்கள் எல்லாவற்றிலும் திரிந்துகொண்டிருப்பான். அவன் கையில் ஒரு வில்லும் அம்பும் வைத்திருப்பான்.

அவன்தான் மன்மதன். அவன் ஒவ்வொரு வீட்டிலும் உள்ளவர்கள்மீது மலர் அம்பு எய்வான். அதனால் மக்கள்

'அரையிருள் யாமத்தும் பகலும் துஞ்சார்'

இரவு முற்றிலும் அரையிருளிலும், ஓர் யாமத்திலும், அரை யாமத்திலும் ஒரு கணப்பொழுதும் துஞ்சார். ஆதலால்,

'நகரம் காவல் நனிசிறந்தது'.

இதிலிருந்து அக்காலத்து மக்கள் கங்குல் முழுவதும் காமத்தில் ஆழ்ந்திருந்தார்கள் என்பது தெளிவாம்.

இந்திரவிழவூரெடுத்த காதையின் இறுதி 50 வரிகளுக்கு உரை எழுதப் புகும்போது அடியார்க்குநல்லார் 'இனி வீதி வருணனை கூறுவார்' என்று தொடங்குகின்றார். சாதாரணமாக வீதி வருணனை என்றவுடன் வீதியின் அமைப்பு, வீதியின் இருமருங்கிலுமுள்ள வீடுகளின் அலங்காரங்கள் முதலியவற்றைக் கூறுவர் என்று நினைப்போம்.

வகைபெற எழுந்து வானம் மூழ்கிச்
சில்காற்று இசைக்கும் பல்புழை நல்லில்
ஆறுகிடந் தன்ன அகனெடுந் தெரு

(மதுரை 357–9)

அதாவது வானளாவி நின்று தென்றற் காற்று தவழும் சன்னல்களையுடைய நல்ல வீடுகள் இருமருங்கிலுமுள்ள ஆறுகிடந்தாற்போன்று அகன்றும் நீண்டும் உள்ள தெரு என்று மாங்குடிமருதனர் கூறுவதுபோல் கூறுவர் என்று எண்ணுவோம்.

ஆனால் இளங்கோவடிகள் அப்படி எதுவும் கூறவில்லை. அவர் வீதிகளில் நடந்த ஒரு நிகழ்ச்சியைமட்டுமே கூறுகின்றார். அக்காலத்தில் வீதிகளில் நிகழும் காட்சிகளில் அதுவே மிக முக்கியமானது, சிறந்தது என்று கருதியே காதையின் இறுதியில் முத்தாய்ப்புப்போல் கூறுகின்றார் என்று தோன்றுகிறது. ஆனால் அதனைக் கண்ணுறும் எந்தத் தமிழனும் வெட்கித் தலைகுனியாமல் இருக்க முடியாது.

அவ்வாறு கவிஞர் முக்கியமானதாகக் கருதியதும் தமிழர் தலைக்குனியக் கூடியதுமான அந்த நிகழ்ச்சி யாது?

வீதியில் காமன்சேனையாகிய கடைகழிமகளிர் வருகின்றனர். அவர்களைக் காணும் கல்லா இளைஞர் அவர்கள்மீது ஆசை கொள்கின்றனர். மகளிர் மறுக்கவே இளைஞர் காதற்கவிதைகளைப் பொழிகின்றனர் :—

அங்கண் வானத்து உலவும் அணிநிலா அரவு விழுங்கிவிடும் என்று அஞ்சிக் கருமுகிலாகிய கூந்தலுடன் கயல் மீன்களாகிய கண்களுடன் குமிழ் மலராகிய மூக்குடனும்

தன்னிடமுள்ள குறுமுயலாகிய களங்கத்தைவிட்டு இள நங்கை வேடங்கொண்டு இவ்வீதியில் வந்துளதோ?

மீனக்கொடி யுடையோனுகிய மன்மதன் சிவபெருமானுடைய நெற்றிக்கண்ணின் நெருப்பாலிழந்த தன்னுடைய உடலை மீண்டும் பெறுவதற்காகத் திங்களிடமுள்ள அமுத கலைநீரை மாந்த வளர்ந்த வானவல்லி இப்போது வானின் றிழிந்து காமவல்லியாகத் திரிகின்ருளோ?

திருமகள் வாழும் கமலமலரே இப்போது இலவமலரை இதழாகவும், முல்லை முகையை முறுவலாகவும், கருங்குவளையைக் கண்ணுகவும், குமிழமலரை நாசியாகவும் அமைத்துக் கொண்டு இந்நகரில் வந்து திருமகளைத் தேடித் திரிகின்றதோ?

கூற்றுவன் என்னும் கொடியவன் செங்கோல் மன்னனுக்கஞ்சி ஆண்மை வடிவத்தை நீக்கிவிட்டு நகை முகமும் இசைச் சொல்லுமுடைய பெண்போல் வேடங்கொண்டு ஆண்களை வாட்ட வந்துளனோ?

இவ்வாறு இளைஞர் கூறும் புகழ்மொழிகளைக் கேட்டவுடன் ஏந்திழையார் அவர்களுக்கு அருள் செய்கின்றனர். அப்போது மகளிர் மார்பிலுள்ள சந்தனம் முதலியவை மைந்தர் மார்பில் படிகின்றன. அதனுடன் வீடு சென்ருல் அங்குள்ள மனைவியர் வெகுள்வரே என்று அஞ்சி ஒவ்வோர் இளைஞனும் ஒரு விருந்தினனைக் கூட்டிக்கொண்டு செல்லுகின்ருன். விருந்துமுன் வெகுள்தல் அழகன்று என்று எண்ணி மனைவியர் ஊடாதிருந்துவிடுகின்றனர்.

இந்த அற்புதக் காட்சி நிகழும் வீதிகள் எந்த வீதிகள் என்று இளங்கோவடிகள் குறிப்பிடவில்லை. அடியார்க்கு நல்லாரும் கூறவில்லை. ஆனல் பரத்தையர் செயலாக இருப்பதால் பரத்தையர் வீதிகளாகத்தான் இருக்கவேண்டும்; அப்படியாயின் அடியார்க்குநல்லார் பரத்தையர் வீதி வருணனை என்று கூருமல் வீதி வருணனை என்றுமட்டும் கூறக் காரணம் யாது? தாமரை என்று கூருமல் பூ என்று

கூறினால் போதும், அது தாமரையையே குறிக்கும். 'பூவினுக் கருங்கலம் பொங்குதாமரை' ஆதலின் என்பர் புலவர். அதுபோல் பரத்தையர் வீதி என்று கூறாமல் வீதி என்று கூறினால் போதும், அது பரத்தையர் வீதியையே குறிக்கும். வீதியினுக் கருங்கலம் வேசியர் வாழிடம் என்று கருதினார்போலும்.

அல்லது விழாக்காலமாதலால் எல்லா வீதிகளிலுமே காமன் சேனையினர் காமுகரைத் தேடிக் கழுகுகள்போல் அலைந்தனரோ, அப்படியானால் அதைவிடக் கேவலமான காரியம் வேறு எதுவும் இருக்க முடியாது. நகர் முழுவதும் நம்பியர் காதற் கவிதைகள் முழங்கியிருக்கும். இவர்கள் அகத்துறையில் ஆழ்ந்த புலமையுடையவர் போலும். இவர்களை மாங்குடிமருதனார் 'கல்லா மாந்தர்' என்பர். அச் சொற்றொடர்க்கு நச்சினார்க்கினியர் 'காமநுகர்ச்சியினை யன்றி வேறொன்றையும் கல்லாத இளைஞர்' என்று உரை கூறுகின்றார்.

நடுத்தெருவில் மங்கையர் ஊடுவதும் மைந்தர் ஊடல் தீர்ப்பதும் மகளிர் உணர்வதும் அருள்வதும் எந்த நாட்டிலும் காணமுடியாத இறும்பூதாக இருக்கின்றது. நாணுத் தாழ் வீழ்த்த கதவை உடைக்கக்கூடிய ஆற்றல் காமக் கணிச்சிக்கு உண்டு என்று வள்ளுவர் கூறுவர். ஆனால் அது நடுத்தெருவில் அச்செயலை நிகழ்த்தும் என்பதைக் காவிரிப்பூம்பட்டினத்திலேயே காண இயலும்.

மகளிர் மார்பிலுள்ள சந்தனம் மைந்தர் மார்பில் வந்து சேரும் என்று கூறுகிறாரே, அது எங்ஙனம்? இக்காலத்தில் பெண்கள் மார்பில் பாடி என்றும் ஜாக்கட் என்றும் அணிகின்றனர். அவை அந்தக் காலத்தில் இல்லை; ஆயினும் அக்காலத்துப் பெண்கள் மார்பில் எதுவும் அணியாமல் வெளியில் வருவதில்லை. அவர்கள் மார்பில் கச்சணிவர். கழுத்தில் இக்காலத்துப் பஞ்சாப் பெண்கள் அணிவது போல் உத்தரீயம் அணிவர்; இளங்கோவடிகள் வேட்டுவ வரியில் கொற்றவையை வர்ணிக்கும்போது

'துணையெயிற்று உரகக் கச்சுடை முலைச்சி'

அதாவது நஞ்சு ஊறும் துணைப்பல் உடைய பாம்பைக் கச்சாக அணிந்த மார்பினளே என்றும்

'கரியினுரிவை போர்த்து அணங்காகிய
அரியின் உரிவை மேகலை யாட்டி'

அதாவது சிங்கத்தின் தோலை மேகலையாகவும் யானையின் தோலை ஏகாசமாகவும் அணிந்தவளே என்றும் கூறுகின்றார். ஏகாசம் என்பது உத்தரீயம் என்னும் மேலாடையாகும்; பெண்கள் கழுத்தில் அணியும் உத்தரீயம் அவர்களுடைய மார்பை மறைக்கும் என்பதைக்

'கடாஅக் களிற்றின்மேல் கட்படா மாதர்
படாஅ முலைமேற் றுகில்' (1087)

என்னும் குறளிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

மைந்தர் மார்பில் சந்தனம் வந்து சேர்ந்ததே, அதைக் கழுவிவிட்டு அவர்கள் தங்கள் இல்லங்கட்குச் செல்லலாம் அல்லவா? அவ்வாறு செய்யின் விருந்தினரை அழைத்துச் செல்லவேண்டிய அவசியம் ஏற்படாதல்லவா? மார்புச் சந்தனத்தைக்கழுவுதற்கு நீர் கிடைக்கவில்லையா அல்லது நேரம் கிடைக்கவில்லையா?

இளங்கோவடிகள் கூறும் இந்த நிகழ்ச்சி தமிழனுக்கு இழிவு தருவதொன்று என்பதில் ஐயமில்லை. இதனை உணர்ந்து அடியார்க்குநல்லார் சந்தனம் மைந்தர் மார்பில் வந்த விதத்தை வேறுவிதமாகக் கூறிச் சமாளிக்க முயல்கின்றனர். அவர்,

"இம்மகளிர் நெருங்குதலாலே மாந்தர் மார்பால் தள்ளிப் பெயர்கின்றனர் தம் மார்பிற் பொறித்தலால் எனவுமாம்" என்று கூறுகின்றார். பரத்தையர் பெருங்கூட்டமாக நெருங்கி வந்தனராம்; அந்தக் கூட்டத்தினிடையே மைந்தர் போகவேண்டியிருந்ததாம்; அதனால் மைந்தர் மார்பு, மகளிர் சந்தனத்தைப் பெற நேர்ந்ததாம்.

பெண்கள் பரத்தையரே யாயினும் மார்பை மூடாமல் வந்திருக்கமாட்டார்கள் என்று முன்னமே கண்டோம். மூடாமல் வந்தார்கள் என்று வைத்துக்கொண்டாலும் மைந்தருடைய மார்பில் மட்டும் படுவானேன் ? தோள் முதலியவற்றில் படாவோ ? மைந்தர் மார்பால் தள்ளுவானேன் ?

அதுபோகட்டும், கூட்ட நெருக்கடியில் போகும்போது இளைஞர் காதற் கவிதைகள் மொழிந்ததேன்? 'புலவியாலே கூடாத மகளிரை இங்ஙனம் புகழ்ந்து புலவியைத் தீர்த்தனர்' என்று அடியார்க்குநல்லாரே கூறுகின்றனரே, அதை மறப்பது எப்படி ?

இனி மதுரைமா நகரத்தில் வாழ்ந்த மக்கள் எத்தகைய வாழ்க்கை நடத்தினர் என்று பார்ப்போம். கவுந்தியடிகளும் கோவலனும் கண்ணகியும் ஒருநாட் காலையில் மதுரை நகரத்தில் புறஞ்சேரியில் வந்து தங்கினர். மறுநாட் காலையில் கோவலன் கவுந்தியடிகளிடம் தான் மதுரை நகர்க்குச் சென்று தன்னினத்தவரைக் கண்டு, தங்க வீடு அமர்த்திக் கொண்டு வருவதாகச் சொல்லி விடைபெற்றுக்கொண்டு மதுரை நகருட் புகுந்தான்.

புகுந்தவன் காலை முதல் மாலை வரை நகரம் முழுவதும் சுற்றினன். அவன்

பால்வேறு தெரிந்த நால்வேறு தெருவும்
அந்தியும் சதுக்கமும் ஆவணவீதியும்
மன்றமும் கவலையும் மறுகும் திரிந்தான்

அந்தி என்பது முச்சந்தி. சதுக்கம் என்பது நாற்சந்தி. கவலை என்பது பலவாய் ஒன்ருன முடுக்கு. மறுகு என்பது குறுந்தெரு. ஆகவே மூலைமுடுக்குகளைக்கூடப் பார்க்காமல் விட்டுவைக்கவில்லை.

ஆயினும் இளங்கோவடிகள் அவன் பார்த்தவற்றுள் இரண்டு இடங்களையே வர்ணிக்கின்ருர். அயலார் வந்தால் ஆவலுடன் பார்க்கக்கூடிய இடங்கள் பல விருக்கவே

செய்தன. அவற்றுள் முக்கியமானவை அந்தணர் பள்ளிகள், பௌத்தருடைய கோயில்கள், சமணருடைய கோயில்கள், அறங்கூறவையம், பட்டி மண்டபம், சோறிடுஞ் சாலைகள், காட்டு விலங்குச்சாலை என மாங்குடி மருதனார் தமது மதுரைக்காஞ்சியில் கூறுகின்றார். எலலாத் தெருக்களிலும் அலைந்துதிரிந்து கோவலன் இவைகளையும் பார்த்தேயிருப்பான். ஆனால் இளங்கோவடிகள் இவற்றைப்பற்றி ஒரு சொற்கூடக் கூறவில்லை. அவற்றைப் பார்த்தான் என்று கூடக் குறிப்பிடவில்லை. இவைகளைத் தவிர்த்து வேறு இரண்டு இடங்களைப் பற்றி மட்டுமே விரிவாகக் கூறுகின்றார். அவை என்ன? அதற்குக் காரணமென்ன?

அவர் வர்ணிக்கும் இரண்டு இடங்கள் பரத்தையர் வாழும் வீதிகளும் பண்டங்கள் விற்கும் வீதிகளுமாகும். இந்த இரண்டு வகை வீதிகளைப்பற்றி மட்டும் இளங்கோவடிகள் விரிவாகக் கூறுவதால், இவையே அந்நகரத்தில் வாழ்ந்த மக்களின் கருத்தில் சிறப்புடையன என்று தோன்றுகின்றது.

அவர்கள் கவுந்தியடிகள் கூறுவதுபோல் "பெண்டிரும் உண்டியும் இன்பம் என்றுலகில் கொண்டோர்". உண்டி என்பதில் சுகபோகங்களுக்கு வேண்டிய சகல பொருள்களும் அடங்கும்; கவுந்தியடிகள் உண்டியும் பெண்டிரும் என்று கூறாமல் பெண்டிரும் உண்டியும் என்று கூறியதால் அக்காலத்து மக்கள் உண்டியின்பத்திலும் பெண்டிரின்பத்தையே பெரிதாக மதித்தவர் என்று தோன்றுகிறது. இக்கருத்துப்பற்றியே இளங்கோவடிகள் பரத்தையர் வீதிகளை வர்ணித்த பின்னரே கடைத்தெருக்களை வர்ணிக்கின்றார். அதுமட்டுமன்று, ஐம்பது வரிகளில் கடைத்தெருக்களை வர்ணிப்பவர், காமுகர் வீதிகளை வர்ணிக்க நூறு வரிகளைப் பயன்படுத்துகின்றனர். அதுவே ஊரில் பார்க்கவேண்டிய தலையாய இடம்போலும்!

காவிரிப்பூம்பட்டினத்தில் நடந்த இந்திர விழாவை வர்ணிக்கும்போது இறுதியில் கூறியதற்குப் பொருள்கூறத்

தொடங்கும்போது அடியார்க்குநல்லார் "இனி வீதி வருணனை கூறுவார்" என்று எழுதினர் அல்லவா? அங்கு வீதி வருணனை என்றது வீதிகளில் பரத்தையரும் காமுகரும் பரஸ்பரம் காதல் கொண்டதைக் கூறுவதாகவே இருந்தது என்பதைக் கண்டோம்.

அதுபோலவே இப்போதும் பரத்தையர் வீதிகளைப்பற்றி இளங்கோவடிகள் கூறியவற்றிற்கு உரை கூறி முடிந்ததும், அடியார்க்குநல்லார் "இத்துணையும் வீதிகளைச் சிறப்பித்துக் கூறினர்" என்று எழுதுகின்றார். அக்காலத்து மக்களுக்கும் புலவர்களுக்கும் வீதிகள் என்று கூறப்படுவனவெல்லாம் பரத்தையர் வீதிகளேதான் போலும்!

காவிரிப்பூம்பட்டினத்தில் இருந்ததுபோலவே மதுரைமாநகரத்திலும் மூன்று வகைப் பரத்தையர் இருந்தனர். ஆனால் இம் மூவகைப் பரத்தையரும் செல்வர்களுக்கே உதவுபவர். செல்வர்களின் செல்வத்தின் அளவை வைத்தே மூவகைப் பட்டவர் ஆகின்றனர். ஏழைகளுக்கான பரத்தையரை இளங்கோவடிகள் காவற்கணிகையர் என்று இராக்கடை வேசையரைக் காவிரிப்பூம்பட்டின வருணனையில் கூறியதுபோல் இங்குக் கூறவில்லை. ஆனால் ஏழைகளுக்கான பரத்தையரும் மதுரை மக்களுக்கு இருக்கவே செய்தனர் என்பது மதுரைக்காஞ்சி என்னும் காவியத்திலிருந்து தெரிகின்றது. அத்தகையோர் வாழ்ந்த இடத்தை மாங்குடிமருதனர் "மணங்கமழ் சேரி" என்று கூறுகின்றனர். அதற்கு நச்சினார்க்கினியர் "மணம் நாறுகின்ற பரத்தையர் சேரி" என்று உரை கூறுகின்றார். அந்தச் சேரி மதுரை நகர்க்கு வெளியே வையை ஆற்றின் வடகரையில் இருந்தது (மதுரை 329).

கோவலன் மதுரை நகர்க்குள் வந்ததும் அந்நகரிலிருந்த பரத்தையரில் தாழ்ந்தவர் தெருக்களுள் நுழைந்தான். அங்குக்கடைகழி மகளிர் தம் காதலஞ் செல்வரொடு முகில்தோய் மாடங்களில் வாழ்ந்தனர். ஒவ்வொரு மாடமும் ஏழடுக்கு மாடிகள் உடையது. அவற்றின் உச்சியில் மன்மதனுடைய மகரக்கொடிகள் பறந்துகொண்டிருக்கும்.

இப் புறவீதி மகளிர் ஒவ்வொரு நாளும் காலை, நண் பகல், மாலை என்ற பொழுதுகளில் காமுகருடன் வேறுவேறு விளையாட்டுகளில் ஈடுபடுவர். காலையில்

வருபுனல் வையை மருதோங்கு முன்துறை
விரிபூந் துருத்தி வெண்மணல் அடைகரை
ஓங்குநீர் மாடமொடு நாவாய் இயக்கிப்
பூம்புணை தழீஇப் புனலாட் டயர்வர்

அதாவது இடையறுது பெருகும் புனலுடைய வையை ஆற்றில் பள்ளியோடம் முதலிய தோணிகளில் தங்கள் காதலருடன் ஏறி உல்லாசமாய்ச் செல்வர். புணைகளைத் தழுவி நீந்துவர்; இவ்வாறு புனலாட்டயர்வர்.

அக்காலத்து மக்கள் நிகழ்த்திய புனல் விளையாட்டு என்பது இக்காலத்தில் எந்த இடத்திலுமில்லை. நாம் ஆற்றுக்குப் போவது நீராடவே; நீரில் விளையாடவன்று. அக்காலத்து நீர்விளையாட்டின் விபரங்களைச் சங்ககால நூலாகிய பரிபாடலிற் பரக்கக் காணலாம்.

மைந்தரும் மகளிரும் தாங்கள் எப்போதும் அணிந்துள்ள அழகிய அணிகளை நீக்கிவிட்டுப் புனலாடற்கேற்ற அணிகளை அணிவர். பெண்கள் பொற்பூவும் முத்துவடங்களும் வளைகளும் தொடிகளும் கட்டுவடம் கான்மோதிரம் போன்றவைகளும் அணிவர். கூந்தலைக் குழலாக முடிப்பர். சிலர் கூந்தலில் வெட்டிவேர் சேர்த்துத் தொடுத்த மலர் மாலையை அணிவர். சிலர்வாசனைத் தைலங்களைப் பூசிக் கண்ணுடியில் தங்கள் அழகை நோக்குவர். சிலர் யோசனை தூரம் கமழும் வாசனைப் பொருள்களை உடலில் பூசுவர். சிலர் சந்தனத்தை மாற்றி அகிற் சாந்தை அப்புவர். சிலர் பஞ்சவாசங் கலந்த தாம்பூலம் மெல்லுவர்.

மைந்தரும் மகளிரும் வையை ஆற்றில் நீர்ப்போர் நடத்துவதற்குரிய படைக்கலங்களாகப் புழுகுநெய் இட்ட துருத்தியையும் பனிநீர் நிறைந்த கொம்பையும் எடுத்துக் கொள்வர். நீந்துவதற்கு உதவியாக வெள்ளை நெட்டியாற்

செய்த மிதவையையும் நிறம் ஊட்டிய நெட்டியாற் செய்த தேரினையும் கொண்டுபோவர் (பரி. 6).

நீராடுதற்கு வேண்டிய பத்துத் துவர்களையும், புனலாடியபின் ஈரம் புலர்த்தும்பொருட்டுப் புகைக்கும் அகில் முதலியவற்றையும் அவற்றைப் புகைக்க அழலையும், அணிதற்குப் பூந்துகில்களையும், சூடுவதற்குப் பூவையும், பூசுதற்குச் சந்தனத்தையும் சிலதியர் ஏந்திக்கொண்டு பின் தொடர்வர் (பரி. 6, 22).

மைந்தரும் மகளிரும் குதிரைமீதும், பிடிமீதும், எருது பூண்ட வண்டியிலும், கோவேறு கழுதையிலும், குதிரை பூண்ட வண்டியிலும் சிவிகையின்மீதும் ஏறிச்செல்வர். (பரி. 10)

வையையில் புதுப்புனல் வருங்காலத்தில் நடைபெறும் நீரணி என்னும் விழாவின்போது, மலராத முகைபோன்ற பருவத்தினரும், புதுமலர் மலர்ந்தது போன்ற பருவத்தினருமாகிய இளைய மாதரும், கருமயிருக்கிடையே நரை கலந்த கூந்தலுடையவரும், முழுநரையாகிய கூந்தலுடையவருமாகிய முதிய மாதரும், கற்புடை மகளிரும், காமக்கிழத்தியரும், காதற்பரத்தையரும், இற்பரத்தையரும், சேரிப் பரத்தையரும் இவர்களுடைய தோழியர்களும் ஏவன் மகளிரும் ஆற்றைநோக்கிச் செல்வர்.

இங்ஙனம் ஆற்றை அடையும் மைந்தரும் மகளிரும் நீர்ப்போர் செய்வர். சிலர் குதிரையையும் யானையையும் நீரினுள் செலுத்தி உழக்குவர். சிலர் வட்டினுல் அரக்கு நீரை வீசுவர். சிலர் மாலையைச் சுற்றி எறிவர். அவர்மீது சிலர் கொம்பு நீரை வீசுவர் (பரி. 11). சில பெண்கள் மலர் நிறைந்த ஆற்றிடைக்குறையிற் சென்று அங்குள்ள கூடாரத்தில் தங்கள் காதலருடன் வீற்றிருப்பர் (பரி. 1). சிலர்

மண்ணுர் மணியின் அணர்குரல் வண்டார்ப்பத்
தண்ணந் துவர்பல ஊட்டிச் சலங்குடைவார்
எண்ணெய் கழல இழைதுகள் பிசைவார் (10)

அதாவது நீலமணிபோன்ற தம் கூந்தலில் பத்துத் துவர்களையும் தேய்த்துக்கொண்டு நீராடுவர். சிலர் எண்ணெய் நீங்குமாறு அரைப்பினைத் தேய்ப்பர். இவ்வாறு நீராடுவதால் வையை நதி, பெண்கள் பூசிய பத்துவகைத் துவரில் ஊறிய நீரும் சந்தனக் குழம்பும் வாச எண்ணெய்யும், சூடிய பூக்களும் மைந்தர் தாரும் மகளிர் கோதையும் மணக்குமாறு சென்றது.

மைந்தர்கள் வாழைத் தண்டைத் தழுவி நீந்துவர், ஓடத்திலேறிச் செலுத்துவர், மகளிர் இழைத்த சிற்றிலில் அட்ட சிறு சோற்றை உண்ணச் செல்வர். மகளிருடைய பந்தையும் கழங்கையும் களவுசெய்து நீரில் பாய்வர்.

நீர் விளையாட்டால் இளைத்த மகளிர் கரையில் வந்து

கனல்பொருத அகலின்ஆவி காவெழ
நகின்முகடு மெழுகிய அளறுமடை திறந்து
திசைமுழுது கமழ முகிலகடு கழிமதியின்
உறைகழி வளர்த்து உறுநறவு
மதியுணர் மகளென ஆம்பல்வாய் மடுப்பர்

அதாவது அகிற்புகையால் உடலின் ஈரத்தைப் புலர்த்தி, எங்கும் கமழும் கலவைக் குழம்பைப் பூசுவர். தேவமகளிர் போல் வெப்பமான மதுவை உண்பர். வெண்துகிலைப் போர்ப்பர். கூந்தலில் வெள்ளையாடையைச் சுற்றி ஈரம் புலர முருக்குவர்.

ஆற்றங்கரையில் யாழும் மிடற்றுப் பாடலும் இசைந்து நிற்கும், சுருதியோடு குழல்கள் ஒலிக்கும், முழவுகள் ஆர்க்கும். தலைக்கோல் கூத்திகளும் பாணர்களும் ஆடலைத் தொடங்குவர். மைந்தரும் மகளிரும் இசைப்பயன் நுகர்வர். (பரி. 7).

இவ்வாறு நீர்விளையாட்டு நிகழ்த்தும் ஆண்களும் பெண்களும் பட்டப்பகலில் ஆற்று நீரிலும் ஆற்றின் கரையிலும் பேசிய பேச்சுக்களையும் செய்த செயல்களையும் பரிபாடலில் வையை பற்றியுள்ள பாடல்களிலிருந்து தெரிந்து

கொள்ளலாம். அப்பேச்சுக்களும் செயல்களும் இக்காலத்தில் பேசவோ எழுதவோ முடியாத அளவு அருவருக்கத் தக்க ஆபாசமாகவுள்ளன. அத்துணை அலங்கோலமாயிருந்தது அக்காலத்து நாகரிகம்!

காமுகரும் கடைகழி மகளிரும் வையை ஆற்றங்கரையில் மதுவுண்டு களிப்பர்; களியால் குளிப்பர்; குளித்துக் காம மிகுதியால் கலப்பர்; கலந்து அதற்கு இன்பமுண்டாகப் புலப்பர்; ஆதலால்

ஆடுவார் நெஞ்சத்து அலர்ந்து அமைந்தகாமம்
வாடற்க வையை நினக்கு.

வையாய்! நின்கட் புனலாடுவர் நெஞ்சத்து மிகுந்த காமத்தை உண்டாக்கும் இத்தகைய நினக்கு எஞ்ஞான்றும் குறையாதொழிக என்று மருத்துவன் நல்லச்சுதனர் (பரி. 6) வையை நதிக்குக் கூறும் வாழ்த்தே போதும், அக்காலத்து நாகரிகத்தை அங்கை நெல்லிக்கனியென அறிவுறுத்தற்கு. இதனுல்தான்போலும் அறிஞர்கள் பரிபாடலை 'ஓங்கு பரிபாடல்' என்று ஏத்துகின்றனர்!

ஆங்கில இலக்கியங்களுள் தலைசிறந்தவை ஷேக்ஸ்பியர் நாடகங்கள். இவை இருந்தால்போதும், இந்தியா போயினும் பாதகமில்லை என்று பேரறிஞர் கார்லைல் கூறினர். ஆனுல் அவற்றில் ஆபாசமான பகுதிகள் இருப்பதால் அவற்றை நீக்கியே படித்தல் வேண்டும் என்று வற்புறுத்துவதற்காக பிரிட்ஜெஸ் என்னும் ஆங்கில மகாகவி ஒரு தனி நூல் எழுதியுளர். அதுபோல் நாமும் வையைப் பாடல்களை நீக்கிவிட்டு மற்றப் பாடல்களைப் பயிலுதலே நலம். இது நிற்க;

நண்பகலில் இவர்கள் முல்லை குவளை நெய்தல் ஆகிய மலர்களைக் கொண்டையிலே செருகுவர். கழுத்தில் முத்துவடத்துடன் மல்லிகையும் செங்கழுநீரும் சேர்த்துக் கட்டிய மாலையை அணிவர். சந்தனக்குழம்பை மேனி முழுவதும் மட்டிப்பர். இந்த அலங்காரங்களுடன் தங்கள் காதல்

இளைஞர்களுடன் ஊரையடுத்துள்ள இலவந்திகை என்னும் பொழில்களில் விளையாடுவர்.

இவ்வாறு புனலிலும் பொழிலிலும் ஆடி இளைத்த மகளிர் மாலையில் பூஞ்சேக்கையில் அமர்வர். காதலர் அவர்களுக்குக் களைப்புத்தீரப் பணி செய்வர்.

இப்பரத்தையர் பொழுதுக்கேற்பப் பூச்சூடி விளையாடுவதுபோல் பருவத்துக்கேற்பவும் நடந்துகொள்வர். கார்காலத்தில் பூத்தொழில் மிக்க செம்பட்டினை மேகலைமீது உடுத்துவர். கூந்தலில் செங்குடப்பூவை முடிப்பர். சந்தனத்தையும் குங்குமச் சுண்ணத்தையும் மார்பில் அப்புவர். கழுத்தில் பவளக்கோவையுடன் செங்கொடுவேரிப் பூமாலையை அணிவர்.

இவர்கள் கூதிர்க்காலத்தில் நாலாம் மாடியில் தங்குவர். வாடைக்காற்று வந்து நடுக்காதபடி குறுங்கண்கள் உடைய சாளரங்களை மூடுவர். அகிலால் நெருப்பு மூட்டி அதன் அருகே ‘நறுஞ் சாந்து அகலத்து நம்பியர் தம்மொடு’ அமர்வர்.

இவர்கள் முன்பனிக்காலம் வந்தபோது தங்கள் மாளிகையின் மேனிலையாகவுள்ள நிலா முற்றத்தில் தங்கள் காதல் மைந்தருடன் உட்கார்ந்து இளவெயில் நுகர்வர்.

இவ்வாறு பொருட் சிறப்போடும் புலனுகர் இன்பச் சிறப்போடும் வாழ்ந்ததாழ்ந்ததரப் பரத்தையர் வீதிகள் எல்லாவற்றிலும் மெதுவாக நடந்து கோவலன் பின்னர் அடுத்த தரத்துப் பரத்தையர் வீதிகளுக்கு வந்து சேர்ந்தான். இவர்களை அடியார்க்குநல்லார் அரசனைக் காக்கும் மகளிர் என்றும், அரசன் மேனியைத் தொட்டு விளையாடும் உரிமையுடையவர் என்றும் கூறுகின்ருர்.

இவர்களுக்கு அரசன் கூடாரப்பாண்டி, கடகத்தண்டு, பல்லக்கு முதலிய வாகனங்களில் செல்லும் உரிமையை அளிப்பான். இவர்களுக்குச் சிலதியர் சாமரையிடுவர்; பொன் வெற்றிலைப்பெட்டி பிடிப்பர். இவர்கள் எங்கேனும்

சென்றால் சிலதியர் அவர்களைச் சூழ்ந்து கையில் வாளை ஏந்திப் போவர். இத்தகைய வரிசைகளையும் அரசன் இவர்களுக்கு அளிப்பான்.

செழுங்குடிச் செல்வரும் வையங்காக்கும் அரசரும் இவர்களை நாடி வருவர். இவர்கள் அவரவர்களுக்குத் தக்கவாறு நடந்துகொள்ளும் ஆற்றலுடையவர். இவர்கள், சிலதியர் பொன்வண்ணத்தில் கள் தேறலைத் தர வாங்கிப் பருகுவர்.

தலையாய பரத்தையர் "முடியரசொடுங்கும் கடிமனை வாழ்க்கை" உடையர். அதாவது அவர்கள் மாளிகைகள், அரசர்கள் தங்கள் பரிவாரங்களுடன் வந்து தங்கினும் வெளியே தெரியாத அளவு விசாலமானவை. அவற்றின் கூரை, ஓடு வேயாமல் பொற்றகடு வேய்ந்திருக்கும். ஒவ்வொரு மாளிகையிலும் ஆடல் அரங்கம் ஒன்றிருக்கும். அதில் வீட்டுத் தலைவியான தலைக்கோலி ஆடுவாள்; அப்போது தோரியமடத்தை வாரப்பாட்டையும் ஒரு கூத்தி தலைப்பாட்டையும் மற்றொரு கூத்தி இடைப்பாட்டையும் பாடுவாள். அப்போது அரசரும் அவரனைய செல்வர்களும் ஆடல் பாடல் அழகு மூன்றையும் அனுபவிப்பர். அருந்தவத்தோராகிய முனிவர்கள்கூட இம்மங்கையரின் கண் வலையில் பட்டால் அதினின்று தப்ப முடியாமல் தத்தளிப்பர். அவ்வாறாயின் மற்றக் காமுகரைப் பற்றிக் கூறுவானேன்?

காவிரிப்பூம்பட்டினத்தில் போலவே மதுரைமா நகரத்திலும் அரசன் முன்னால் நாடகக் கணிகையருடைய நடன அரங்கேற்றம் நடைபெறும்; அரசன் அவர்களுக்குத் தலைக்கோலிப்பட்டம் அளிப்பதோடு அவர்களுடைய ஆடல் பாடல் அழகு ஆகியவற்றிற்குத் தக்கவாறு ஒன்று முதல் ஆயிரத்தெண் கழஞ்சுவரை அற்றைப் பரிசம் நிச்சயம் செய்வான் (ஊர்: 157–9).

அரசன் செய்வது அதுமட்டுமன்று, தன்னுடைய பரிவாரத்துடன் தலைக்கோலியர் மாளிகையில் போய்த்

தங்குவதுமுண்டு (ஊர் : 146–7). சாதாரணமாக அரசனுடைய மனைவியும் மக்களுமே அவனுடைய மேனியைத் தொடக்கூடும்; ஆனால் அக்காலத்து அரசர்கள் மேனியைத் தொடவும் தொட்டு அவர்களுடன் உய்யானம் என்னும் காவற்சோலையில் விளையாடவும் உரிமையுடையவராயிருந்தனர் பரத்தையர். அவர்களுக்குப் பலவிதமான வரிசைகளும் அளிப்பான் (ஊர் : 126-31).

ஆகவே மதுரை நகரத்திலும் அரசன் முதல் எல்லா மக்களும் காமக் கள்ளாட்டயர்ந்து வந்தனர் என்று தெரிகிறது. இதற்கு முடிமணியாக மதுரையை ஆண்டுகொண்டிருந்த நெடுஞ்செழியன் செயல் ஒன்று உளது.

பாண்டியன் நெடுஞ்செழியன் தன்னுடைய மனைவி கோப்பெருந்தேவியும் அமைச்சர் பிரதானிகளும் புடைசூழ அரசவையில் கொலு வீற்றிருந்தான். அவன் முன்னர் நாடக மகளிர் ஆடியும் பாடியும் அவையோரை ஆனந்திக்கச் செய்தனர். அப்போது கோப்பெருந்தேவி

கூடன் மகளிர் ஆடல் தோற்றமும்
பாடற் பகுதியும் பண்ணின் பயங்களும்
காவலன் உள்ளம் கவர்ந்தன

என்று மனத்தில் வருத்தமுற்றனள். தன் கணவனுடைய மனம் ஆடற்கலையிலும் பாடற்கலையிலும் ஈடுபட்டிருப்பது கண்டு மனைவி மகிழவேண்டியிருக்க வருத்தம் கொண்டதேன்? ஆடற்கலையும் பாடற்கலையும் ஆன்ம வளர்ச்சிக்கு அருந்துணை செய்வனதான்; ஆனால் அரசன் ஆடற்கலையிலும் பாடற்கலையிலும் ஈடுபடவில்லை. அவன் மனத்தைக் கொள்ளை கொண்டது ஆடன் மகளிரின் அழகே. மகளிர் அழகைக்கண்டு மகிழ்வதும் ஒரு கலையே; ஆனால் அதுவும் இயற்கைத் தத்துவத்தோடும் இறைத் தத்துவத்தோடும் பொருந்தும்போதே நற்கலையாம். அப்படிக்கின்றி மன்னன் மனத்தை ஈர்த்ததுபோல் இறைச்சித் தத்துவத்துடன் இணைந்ததாயின் அது தீயதே. அவன் நாடக மகளிருடைய ஆடலையும் பாடலையும் அனுபவிக்கவில்லை; அவர்களுடைய

உடல் அழகைமட்டுமே அனுபவித்தான். அதுதான் தேவி யின் மனவேதனைக்குக் காரணம்.

ஆடல் பாடல் நிகழும்போது அவற்றைவிட்டு அவற்றை நிகழ்த்தும் பெண்ணின் உடலைக்கண்டு மயங்கி யவன் நெடுஞ்செழியன் மட்டும்தான் என்பதில்லை. கரிகாற் சோழன் முன்னிலையில் மாதவி அரங்கேறி ஆடினாள்; பாடினாள்; அப்போது அவனுடைய மனத்தில் நிகழ்ந்த வற்றை அடியார்க்குநல்லார்,

"நாடகமகள் அரங்கேறக் கண்ட அரசன் அவள்மேற் காமக்குறிப்புடையனாதல் இயல்பு. அங்ஙனம் மாதவி ஆடல் பாடல் அழகு என்னும் இவை முதலிய கண்களிப்பக் கண்டும், செவிகளிப்பக் கேட்டும் நெஞ்சம் அழிந்து காமக் குறிப்பு மீதூரவும் நாம் இவளை வரையின் நகை பிறக்கும் என்பது கருதி வரையான் ஆயினான்" என்று கூறுகின்றார்.

இவ்வாறு பண்டைக் காலத்துத் தமிழ்மன்னர்கள் ஆடல் மகளிருடைய ஆடலிலும் பாடலிலும் ஈடுபடுவதை விட அவர்களுடைய உடலிலேயே அதிகமாக ஈடுபட்டனர் என்று தெரிகிறது. அதற்கேற்ப ஆடல் மகளிராகிய விறலி யரும் மிகுந்த எழிலுடையவர்களாக இருந்தனர்.

முடத்தாமக்கண்ணியார் என்னும் சங்ககாலப் புலவர் தாம் இயற்றிய பொருநராற்றுப்படையில் விறலியின் அழகை

'அறல்போல் கூந்தல், பிறைபோல் திருநுதல்,
கொலைவிற் புருவத்துக் கொழுங்கடை மழைக்கண்,
இலவிதழ் புரையும் இன்மொழித் துவர்வாய்ப்,
பலவுறு முத்திற் பழிதீர் வெண்பல்
மயிர்குறை கருவி மாண்கடை யன்ன
பூங்குழை யூசற் பொறைசால் காதின்,
நாண்அடச் சாய்ந்த நலங்கிளர் எருத்தின்
ஆடமைப் பணைத்தோள், அரிமயிர் முன்கை,
நெடுவரை மிசைய காந்தள் மெல்விரல்,
கிளிவாய் ஒப்பின் ஒளிவிடு வள்ளுகிர்,

அணங்கென உருத்த சுணங்குஅணி ஆகத்து,
ஈர்க்கிடை போகா ஏரிள வனமுலை,
நீர்ப்பெயர்ச் சுழியின் நிறைந்த கொப்பூழ்,
உண்டென உணரா உயவும் நடுவின்,
வண்டிருப் பன்ன பல்காழ் அல்குல்,
இரும்பிடித் தடக்கையிற் செறிந்துதிரள் குறங்கில்
பொருந்துமயிர் ஒழுகிய திருந்துதாட் கொப்ப
வருந்துநாய் நாவிற் பெருந்தகு சீறடி' (25-42)

என்று தலைமுதல் அடிவரை அழகாக வருணிக்கின்றார்.

இந்த அழகியரைக் கண்டு அரசர்கள் காமுற்றனர் என்பது மட்டுமன்று. அதற்கே அவர்களுடைய ஆடலையும் பாடலையும் பயன்படுத்தினர் என்றுமாம். திருத்தக்கதேவர்

'கிளைநரம் பிசையும் கூத்தும்
கேழ்த் தெழுந் தீன்ற காமம்' (சீவக. 2598)

என்று கூறுவதற்கு நச்சினார்க்கினியர்,

'அழகைக் கண்ட அளவில் காமவேட்கை விளைவித்தற்குக் கூத்தையும் பாட்டையும் நடத்துதலிற் பிறந்தது காமம்' என்று உரை கூறுகின்றார்.

அதன் பொருள் யாதெனில் அழகான பெண்ணைக் கண்டால் காமவுணர்ச்சி எழுந்தாலும் எழலாம்; எழாமலுமிருக்கலாம்; ஆனால் அப்பெண் ஆடவும் பாடவும் செய்தால் காமவுணர்ச்சி கட்டாயமாக எழுந்தே தீரும் என்பதாம்.

இசையும் கூத்தும் காமத்தை எழுப்பும் ஆற்றலுடையன என்பதைக் கரும்பிள்ளைப் பூதனார் என்ற சங்கப் புலவரும் பத்தாம் பரிபாடலில்

பருக்கோட்டி யாழ்ப்பக்கம் பாடலோடு ஆடல்
அருப்ப மழிப்ப அழிந்த மனக்கோட்டையர்

அதாவது யாழின் கூறு, மிடற்றுப்பாடல், ஆடல் ஆகியவை மனவுறுதியை அழிக்க அழிந்த தன்மையுடைய மகளிரும் மைந்தரும் என்று கூறுவதிலிருந்து அறியலாகும்.

இக்கருத்தைக் கொண்டே பிற்காலத்திருந்த குமர குருபர சுவாமிகளும், துறவிகள் ‘பண்ணொடு பாடல் செவி மடார்’ என்று கூறுகின்றார். இதுதான் பண்டைத்தமிழ் மக்கள் கலைகளை வளர்த்த அழகு! அவர்கள் ஆடற் கலையையும் பாடற்கலையையும் வெறும் பொழுது போக்காக வும் காமத்தை எழுப்புவதற்காகவுமே பயன்படுத்தினர். ஆன்ம வளர்ச்சியைப்பற்றி அவர்கள் சிறிதும் சிந்தித்ததாகத் தெரியவில்லை.

தமிழ்மன்னர்கள் ஆடன் மகளிரை விழைந்தனர் என்பது மட்டுமன்று. அதை அவர்களுடைய புகழ்ச் செயல்களுள் ஒன்றாகவே அக்காலத்துப் புலவர்கள் போற்றி னார்கள்.

கோவூர்கிழார் என்னும் புலவர், சோழன் நலங்கிள்ளி யைப் பாடிய பாட்டு ஒன்று புறநானூறு என்னும் தொகை நூலில் உள்ளது. அதன் துறை இயன்மொழி என்று குறித் திருக்கின்றது. இயன்மொழி என்பது அரசனுடைய சிறப் பியல்புகளைப் புகழ்ந்து பாடுவதாகும். கோவூர்கிழார் அந்தப் பாட்டில் நலங்கிள்ளியின் இரண்டு சிறப்பான பண்புகளைப் பாடுகின்றார். நலங்கிள்ளி தன்னிடம் வந்து பாடும் பாவ லர்க்குப் பரிசாக வஞ்சிநகரைத் தருவன்; தன்னிடம் வந்து ஆடும் விறலியர்க்கோ

“ஒண்ணுதல் விறலியர்! பூவிலை பெறுகென
மாட மதுரையும் தருவன்”.

பூவிலை என்பது ஆடற்கூத்தியின் உடலை ஒரு நாளைக்கு உபயோகிப்பதற்குக் கொடுக்கும் கூலி அல்லது விலையாகும்.

ஆகவே நலங்கிள்ளி பாணர்க்குத் தருவது பரிசில்; விறலியர்க்குத் தருவது பரிசம். இக்காலத்தில் எந்தப் புலவரும் எந்த அரசனையும்பற்றி இவ்வாறு பாடத் துணிய மாட்டார்; பாடினாலும் எந்த அரசனும் அதைக் கேட்கச் சம்மதிக்க மாட்டான்; எந்தப் புலவரும் அந்தப் பாடலை இறவாமற் பாதுகாக்க விரும்பமாட்டார்; ஆனால் கோவூர்

கிழார் நலங்கிள்ளி விறலியர்க்குப் பூவிலை தருவதையும் அவனுடைய புகழ்ச்செயல்களில் ஒன்றாகவே கருதினார்; கருதிப் பாடினார். அந்தப் பாடலைப் புறநானூற்றைத் தொகுத்த புலவர் ஏட்டில் எழுதிப் பாதுகாத்துவிட்டார்.

ஆனால் இக்காலத்துப் புலவர் ஒருவர் 'ஐயோ! கோவூர்கிழார் இவ்வாறு பாடிவிட்டாரே, பிறமொழியாளர் கண்டால் நம் தமிழ் மன்னர்களை இழிவாகக் கருதுவார்களே' என்று மனம் கவன்று போலும் மேற்கூறிய கோவூர் கிழாரின் வரிகளுக்கு,

"விறலியர்க்குத் தரும் பூவிற்கு மாறாக, அப்பூவின் விலையாகப் பாண்டியற்குரிய மதுரையை வென்று தருகுவன்" என்று பொருள் கூறுகின்றார்; இது முற்றிலும் பொருந்தாத பொருள்.

நலங்கிள்ளி விறலியர்க்கு ஏதோ ஒரு பூவைக் கொடுத்ததுபோலவும், அதை மீண்டும் திரும்ப வாங்கிக்கொண்டது போலவும், வாங்கிக்கொண்டு அதன் விலையை விறலியர்க்குத் தந்ததுபோலவும் கூறுகிறார். நலங்கிள்ளி விறலியர்க்கு எந்தப் பூவைத் தந்தான்? தந்த பூவை ஏன் திரும்பப் பெற்றான்?

'விறலியர்! பூவிலை பெறுக' என்பது "விறலியரே! நீங்கள் தந்த பூவிற்குரிய விலையைத் தருகிறேன் பெற்றுக் கொள்ளுங்கள்' என்று பொருள்படுமேயன்றி, "விறலியரே! நான் உங்களுக்குத் தந்து திரும்ப வாங்கிய பூவிற்குரிய விலையைத் தருகிறேன், பெற்றுக்கொள்ளுங்கள்" என்று பொருள்படாது.

விறலியர் அரசனுக்குப் பூவைத் தந்தனர்; அரசன் விறலியர்க்குத் தரவில்லை. பூ என்பது பூப்பு என்பதுடன் தொடர்புடையது; போகம் என்று பொருள்படும். 'போகம் புரக்கும் பொதுவர்' (மணி, 28) என்று சாத்தனார் கூறுவது இப்பொருளிலேயே.

பூவிலை என்னும் சொற்றொடர் சிலப்பதிகாரத்தில் (சிலப். 5-51) வருகின்றது. காவிரிப்பூம்பட்டினத்தில் வாழ்ந்தவர்களைக் கூறும்போது இளங்கோவடிகள் 'பூவிலை மடந்தையர்' என்பவரையும் குறிப்பிடுகின்றார். அதற்கு அரும்பதவுரையாசிரியர் 'பரிசங்கொள்வார்' என்றும், அடியார்க்குநல்லார் 'அற்றைப் பரிசங்கொள்வார்' என்றும் பொருள் கூறுகின்றனர். இந்தப் பொருளே சரியானது என்பது மணிமேகலையிலிருந்தும் அறியலாம்.

மாதவியின் தாயான சித்திராபதி, கோவலன் இறந்து விட்டான் என்று மாதவி துறவுபூண்டாள் என்பதை

'பூவிலை ஈத்தவன் பொன்றினன் என்று
மாதவி மாதவர் பள்ளி அடைந்தனள்'

என்னும் சொற்களில் கூறுகின்றாள். பூவிலை ஈத்தவன் என்பதற்கு இக்காலத்துப் புலவர் கூறும் பொருள் அணுவளவும் பொருந்தாதது தெளிவு.

பண்டைக்காலத்தில் அரசர்கள் பரிசிலர்க்குப் பொன்னால் தாமரைப் பூப்போல் செய்து கொடுப்பது வழக்கம். ஆனால் அவர்கள் பாணர்களுக்கே பொற்பூ கொடுப்பார்கள். விறலியர்க்கன்று. புறநானூறு (11,364), பொருநராற்றுப்படை (481-2), மலைபடுகடாம் (569-70), மதுரைக்காஞ்சி (218), பதிற்றுப்பத்து (12:23: 49:1) முதலிய நூல்கள் எல்லாம் பாணர்க்குப் பொற்பூவும், விறலியர்க்குக் கழுத்தில் அணிய மாலை, கையிலணியத் தொடிபோன்ற அணிகலன்களுமே தந்ததாகக் கூறுகின்றன. எந்த நூலிலும் அரசர்கள் விறலியர்க்குப் பூ தந்ததாகக் கூறப்படவில்லை.

ஆகவே இக்காலத்துப் புலவர் பூவிலை என்பதற்கு வேறு பொருள் கூற முனைவதில் பயனில்லை. உள்ளதை உள்ளபடி உரைப்பதே உண்மைத் தெய்வம் வேண்டுவதாகும். பிழையைப் பிழை என்று கூறுவதே பிழை செய்யாமல் பாதுகாப்பதற்குரிய வழியாகும். அறிஞர்கள் புண் வைத்து மூடார் பொதிந்து.

இதுகாறும் இளங்கோவடிகள் வர்ணிக்கும் காவிரிப்பூம் பட்டினத்தையும் மதுரைமா நகரத்தையும் ஆராய்ந்தோம். அந்த நகரத்திலிருந்த மக்கள் செல்வத்தில் திளைத்தார்கள். ஆடம்பர வாழ்வின் அடிவரை ஆழ்ந்திருந்தார்கள். இன்பமாக வாழ்வதற்கு இக்காலத்திலும் கூடக் காணமுடியாத பல விதமான உபகரணங்களை உடையவர்களாக இருந்தார்கள். இன்றும் தமிழ்நாட்டில் ஏழடுக்கு மாடிகள் உள்ள வீடுகள் உண்டாகவில்லை. தங்கத்தட்டைக் கொண்டு கூரை வேய்வது எந்தக் காலத்திலும் நடக்கப்போவதில்லை.

இவற்றையெல்லாம் கண்டதும் இக்காலத்து அறிஞர்கள் "என்னே, அக்காலத்து மக்களின் நாகரிகத்தின் உயர்வு" என்று மூக்குமேல் விரல்வைத்து இறும்பூது அடைகின்றனர்.

ஆனால் நாகரிகம் என்பது பொருட்செல்வத்தின் மிகுதியையும் அதனால் அடையும் இன்ப சாதனங்களின் தொகையையும் பொறுத்ததன்று; இவற்றைப் பயன்படுத்தும் மக்களின் ஒழுக்கத்தையே பொறுத்ததாகும். எந்த மக்கள் ஒழுக்கமுடையவர்களோ அவர்களே நாகரிகமுடையவர்கள்.

'பொருட்செல்வம் பூரியார் கண்ணுமுள' என்று தம்முடைய நன்மையையும் பிறருடைய நன்மையையும் நாடுவோர் அனைவர்க்கும் அழியாத எச்சரிக்கையாகத் திருவள்ளுவர் இரண்டாயிரம் ஆண்டுகளாகக் கூறிக்கொண்டிருக்கின்றார்.

அறநெறி வழுவிய பூரியார் எத்துணைச் செல்வராயினும் நாகரிகமுடையவராகமாட்டார்; அநாகரிகரே ஆவர். அறநெறி வழுவாத சீரியர் எத்துணை வறிஞராயினும் அவரே நாகரிகம் உடையவர்.

சாக்ரட்டீசும் இயேசுவும் வள்ளுவரும் காந்தியும் செல்வம் படையாதவர்கள், ஆயினும் அவர்களை அநாகரிகர் என்று யாரும் கூற மாட்டார். அவர்களை நாகரிகர் என்று மட்டுமின்றி நாகரிகத்தின் சிகரமானவர் என்றுகூட அறிஞர்கள் கருதுகின்றார்கள்.

பெல்ஜியம் மிகச் சிறிய நாடு. ஜெர்மனி மிகுந்த பலமும் பணமும் படைத்த நாடு. ஆயினும் முதல் உலகயுத்தத்தில் பெல்ஜியம் நடுநிலை நாடாயிருந்தபோதிலும் ஜெர்மனி அதன்மீது பாய்ந்தது. அந்த அநியாயத்தை எதிர்ப்பதே அறம் என்று கருதியது பெல்ஜியம். ஆதலால் அறிஞர்கள் எல்லோரும் பெல்ஜியத்தை நாகரிகமுடைய நாடாகவும் ஜெர்மனியை அநாகரிக நாடாகவும் கருதினுர்கள்.

ஆகவே தனி மனிதனுக்கும் சமூகத்துக்கும் அறவொழுக்கமே நாகரிகத்தின் ஆணிவேராகும். அங்ஙனமிருக்கச் சிலப்பதிகார காலத்து மக்கள் வாழ்வை நாகரிகம் என்று கூறுவது அணுவளவும் பொருந்தாது.

எதைப் பாராட்டுகிருேமோ அதுவாக ஆவோம் என்பது எல்லோரும் இதயத்தில் பதியவைத்துக் கொள்ளவேண்டிய உளநூல் உண்மைகளுள் ஒன்று. ஆதலால் ஒழுக்கமில்லாத மக்களை உயர்ந்த நாகரிகமுடையவர் என்று பாராட்டுவது மீண்டும் அந்த நிலையை உண்டாக்க அடிகோலுவதாகும்.

அக்காலத்து மக்கள் வாழ்ந்ததுபோல் இக்காலத்தும் வாழ்வதாயின் அதனினும் தமிழ்நாட்டுக்கு உண்டாகும் துர்அதிர்ஷ்டம் வேறு இருக்கமுடியாது.

ஆதலால் அறிஞர்கள் அக்காலத்து மக்கள் இவ்வாறு வாழ்ந்தார்கள் என்று கூறுவதுடன் அமையவேண்டுமேயன்றி, அக்காலத்து மக்கள் வாழ்ந்தமுறை நாகரிக வாழ்வு என்று கூறுவது முற்றிலும் தவறு. அது நாட்டுக்குக்கேடு சூழ்வதேயாகும்.

சிலப்பதிகார காலத்தில் வாழ்ந்த நம் மூதாதையர்கள் செல்வம் நிறையப் படைத்திருந்தார்கள். ஆனுல் அவர்கள் அதை எவ்வாறு பயன்படுத்தினுர்கள். அதைப் பொறுத்தே அவர்களுடைய வாழ்வின் உயர்வையும் தாழ்வையும் கணிக்கத் தகும். செல்வம் படைத்தால் அதை எவ்வாறு செலவு செய்யவேண்டும் என்பது குறித்துத் திருவள்ளுவர் சிலப்பதிகார காலத்துக்கு முன்னரேயே

தாளாற்றித் தந்த பொருளெல்லாம், தக்கார்க்கு
வேளாண்மை செய்தற் பொருட்டு

அதாவது பொருள் தேடுவதெல்லாம் தக்கவர்க்கு உதவுவ தற்காகவே என்று மிகத் தெளிவாகக் கூறியுள்ளார்; சிலப் பதிகாரத்து மக்கள் திருக்குறளின்படி நடந்தார்களா? தாங்கள் தேடிக்குவித்த பொருளை யெல்லாம் தக்கார்க்கே தந்தார்களா?

தக்கார் என்பவர் சான்றோர்; நல்லொழுக்கம் நிறைதல், தீயொழுக்கம் அவிதல், இரண்டும்பெற்று ஆணவம் கொள் ளாது அடங்கியிருத்தல் ஆகியவற்றையே தம் கொள்கை யாக உடையவரே சான்றோர்.

'ஆன்று, அவிந்து, அடங்கிய கொள்கைச் சான்றோர்' என்று சான்றோர் இலக்கணத்தைப் பிசிராந்தையார் (புறம். 191) என்னும் சங்ககாலப் புலவர் சுருங்கச் சொல்லி விளங்க வைத்துள்ளார்.

ஆனால் புலவர்கள் நாளடைவில் புறப்போர் செய்யும் மறவரையும் (புறப் 63), அகப்போர் செய்யும் பரத்தைய ரையும் (பதிற்றுப்பத்து 73) குறிக்கச் சான்றோர் என்ற தண்டமிழ்ச் சொல்லைப் பயன்படுத்தலாயினர்.

இப்பொருளை ஏற்பதாயின் இளங்கோவடிகள் காலத்து மக்கள் தாங்கள் தேடிய பொருளைத் தக்கார்க்கே வேளாண்மை செய்தனர் என்று கூறலாம்; அவர்கள் தங்கக் கூரை வேய்ந்து வாழுமாறு தக்காராகிய பரத்தையர்க்குத் தங்கள் செல்வங்களைத் தட்டுத்தடையின்றி அள்ளிக் கொடுத்த வள்ளல்களாக இருந்தார்கள் ஆதலின்.

இவ்வாறு அரசர் முதல் யாவரும் பரத்தையரை ஆத ரித்துவந்த மக்களை நாகரிக வாழ்வினர் என்று கூறுவதும் போற்றுவதும் நாகரிகம் என்ற பண்பாட்டுச் சொல்லுக்கு நஞ்சூட்டிக் கொள்வதாகும்.

இளங்கோவடிகள் உள்ளதை உள்ளவாறு உரைத்து உள்ளத்தைத் தூய்மை செய்யும் உத்தமக் கவிஞர்களுள்

ஒருவராவர். அவர் தம்முடைய காலத்தில் காவிரிப்பூம் பட்டினத்திலும் மதுரையிலும் இருந்த அரசர்களும் அவர்கள் குடிகளும் வாழ்ந்த சடநாகரிக முறைகளை நாம் கண்ணுல் கண்டு அருவருக்கவும் அருவருத்து வெறுக்கவும் வேண்டும் என்பதற்காகவே அவற்றை இத்துணை விரிவாகவும் பச்சை பச்சையாகவும் வருணிக்கின்ருர். அவர் சிலப்பதிகார காவியத்தை இயற்றியதன் தலையாய நோக்கம் அதுவேதான் என்று கூறினுல் மிகையாகாது.

மூவாயிரம் ஆண்டுகட்கு முன்னர் பாலஸ்தீன நாட்டில் ஸோடம், கொமரா என்ற பெயருடைய இரண்டு நகரங்கள் இருந்தன. அங்கு வாழ்ந்த மக்களும் காவிரிப்பூம்பட்டினத்திலும் மதுரையிலும் வாழ்ந்த மக்களைப்போலவே ஆண்டவன் கற்பித்த கட்டளைகளுக்கு விரோதமாகச் செல்வத்தில் திளைத்தார்கள். ஆடம்பரத்தில் மூழ்கினுர்கள்; காமத்தில் ஆழ்ந்தார்கள். அதைக்கண்டு ஆண்டவன் சினந்தான்; அந்த நகரங்கள் இரண்டையும் அழித்தான் என்று கிறிஸ்தவ வேதநூல் கூறுகின்றது.

அதுபோலவே எவர் அறநெறிக்கு ஒவ்வாத ஆடம்பரத்திலும் காமத்திலும் ஈடுபடுகிருர்களோ, அவர்கள் அனைவரும் அழிந்தே போவார்கள். இதுவே நாம் சிலப்பதிகார காவியத்திலிருந்து கசடறக்கற்று நிற்கவேண்டிய தனிப் பெரும் படிப்பினை என்று பன்முறை வற்புறுத்த விரும்புகின்றேன்.

இந்தப் படிப்பினை, தமிழ் மக்கள் இதயத்தில் இறவாத எச்சரிக்கையாக நின்று அவர்களை அழியாமல் காக்குமாக!

ஊழ்வினை

சேர நாட்டு மன்னனாகிய செங்குட்டுவன்

துஞ்சா முழவின் அருவி ஒலிக்கும்
மஞ்சுசூழ் சோலை மலைகாண் குவமென

தனது தேவி வேண்மாளொடும், தம்பி இளங்கோவடிகளோடும் தன்னுடைய தலைநகராகிய வஞ்சி நகரினின்றும் புறப்பட்டு நால்வகைச் சேனைகளும் புடைசூழ்ந்து வரப் பேராற்றங் கரையிலுள்ள மணற்குன்றிலே தங்கியிருந்தான்.

அப்போது அம்மலையில் வாழ்கின்ற மக்கள் கண்ணகி தன்னுடைய கணவனோடு விமானமேறி விண்ணுலகம் சென்ற அதிசயத்தைத் தங்கள் அரசனிடம் கூற விரும்பித் தங்கள் மலையில் கிடைக்கக்கூடிய பலவகையான காணிக்கைப் பொருள்களுடன் வந்தனர். அப்பொருள்களை அவனிடம் சமர்ப்பித்துவிட்டு 'அரசே; நமது மலையில் ஒரு வேங்கை மரத்தினடியில் இதுவரையில் பாராத ஒரு புதுமையைக் கண்டோம். ஒரு பெண் மனவருத்தத்துடன் நின்ருள். ஆகாயவிமானம் வந்தது. அதில் அவள் வானவர் போற்ற ஏறிச் சென்ருள்; அவள் எந்த நாட்டினளோ, எவர் மகளோ அறியோம்' என்று கூறினர்.

அப்போது அரசனுடன் இருந்த தண்டமிழ்ப் புலவரான சாத்தனுர், கோவலன் கொலையுண்டதையும் அதற்காகக் கண்ணகி பாண்டியனிடம் வந்து வழக்குரைத்ததையும் மதுரையை அழித்ததையும் மன்னவன் இறந்ததையும் அதன் காரணமாகப் பாண்டிமாதேவி உயிர் துறந்ததையும் விரிவாக எடுத்துச் சொன்னுர்.

அதைக் கேட்டதும் இளங்கோவடிகள்

அரைசியல் பிழைத்தோர்க் கறங்கூற் ருவதூஉம்
உரைசால் பத்தினிக் குயர்ந்தோ ரேத்தலும்
ஊழ்வினை உருத்துவந் தூட்டும் என்பதூஉம்
சூழ்வினைச் சிலம்பு காரணமாகச்
சிலப்பதிகாரம் என்னும் பெயரால்
நாட்டுதும் யாமோர் பாட்டுடைச் செய்யுள்

என்று கூறி அவ்வாறே சிலப்பதிகாரம் என்னும் காவியத்தை இயற்றினர்.

இளங்கோவடிகள் மூன்று உண்மைகளை உலகத்தார்க்கு எடுத்து ஓதுவதற்காகவே சிலப்பதிகாரத்தை எழுதியதாகக் கூறுகின்றார். அந்த மூன்று உண்மைகளுள் ஒன்ருகிய 'ஊழ்வினை உருத்துவந்து ஊட்டும்' என்பதை எவ்வாறு விளக்குகின்ருர் ?

இளங்கோவடிகள் ஊழுண்மையை நிலைநாட்டுவதற்காக மேற்கொள்ளும் முறை மிகவும் விசித்திரமானது; காவிய நீதிக்குப் புறம்பானது. ஒரு கவிஞன் தன்னுடைய காவிய மூலமாக ஓருண்மையை உணர்த்த விரும்பினல் அவன் அந்த உண்மை இது என்று கூருமல், அதை வாசகர்களே காவிய நிகழ்ச்சிகளிலிருந்து ஊகித்து அறிந்துகொள்ளுமாறே செய்வான். அதுதான் காவிய நூலுக்கும், அறிவு அற நூல்களுக்கும் உள்ள வேறுபாடு. அறிவு நூலும் அறநூலும் அறிவுமூலமாக அறிந்துகொள்ளச் செய்யும். காவியமோ உணர்ச்சிமூலமாகவே உணர்ந்துகொள்ளச் செய்யும். இளங்கோவடிகள் தாம் நிலைநாட்ட விரும்பும் மற்ற இரண்டு உண்மைகளையும் அவ்வாறே ஊகித்துக்கொள்ளுமாறு செய்கின்ருர். ஆனல் ஊழுண்மை விஷயத்தில்மட்டும் அவ்வாறு செய்யவில்லை. அதற்குக் காரணம் சிலப்பதிகாரக் கதையில் காணப்படும் நிகழ்ச்சிகள் எல்லாம் இப்பிறப்பில் நிகழ்ந்தவை. அவற்றைக் கொண்டு முற்பிறப்பு நிகழ்ச்சிகளை ஆசிரியர் கூறினலன்றி அறிந்துகொள்ள முடியாது. அதனல் கதாபாத்திரங்களின் நடவடிக்கைகளிலிருந்து நாம்

ஊழுண்மையைத் தெரிந்துகொள்ள இயலாது. ஆகவே இளங்கோவடிகள் ஊழுண்மையைக் கூறுவதாக இருக்கின்றதேயன்றி நிலைநாட்டியதாக இல்லை.

ஆயினும் அவர் ஊழுண்மைபற்றிக் கூறுவது யாது என்று பார்ப்போம். சிலப்பதிகாரக் கதையில் பல நிகழ்ச்சிகள் காணப்படுகின்றன. அவற்றை ஒவ்வொன்ருக எடுத்துத் தனித்தனியாக ஒவ்வொன்றுக்கும் ஊழ்வினையே காரணம் என்று காட்ட அவர் விரும்பவில்லை. நடந்த நிகழ்ச்சிகளுள் எது நடுநாயகமாக நிற்கின்றதோ, எந்த நிகழ்ச்சியின் காரணமாகக் கண்ணகியின் கற்பின் திறத்தையும், அரசதர்மம் தவறின் அறங்கூற்ருவதையும் காட்ட விரும்புகின்ருரோ அந்த நிகழ்ச்சிக்குமட்டுமே ஊழ்வினையைக் காரணமாகக் காட்டுகின்ருர்.

அத்தகைய முக்கியமான, உயிர்நாடியான நிகழ்ச்சி யாது? அது கோவலன் கொலையுண்டதே. கோவலன் கொலையுண்ணுதிருந்தால் அவன் தன்னுடைய மனைவியின் சிலம்பை விற்று அப்பணத்தைக்கொண்டு வாணிகம் செய்திருப்பான். பொருள்மிக ஈட்டிக் கண்ணகியுடன் சந்தோஷமாக வாழ்ந்திருப்பான். ஆனல் அப்போது கண்ணகியைப் பற்றியும் அவளுடைய கற்பின் திறத்தைப்பற்றியும் அக்கம் பக்கத்தில் குடியிருப்பவர்களைத் தவிர வேறு யாருக்கும் தெரியவந்திருக்காது. இளங்கோவடிகள் சிலப்பதிகார காவியத்தை இயற்றியிருக்கவுமாட்டார்.

கோவலன் கொலையுண்டதனுல்தான் கண்ணகி அரசனிடம் சென்று வழக்குரைத்தாள்; மதுரையை எரித்தாள்; இறுதியில் விண்ணுலகு சென்ருள். இந்தக் காரியங்கள் நடைபெற்றதனுல்தான் இளங்கோவடிகள் சிலப்பதிகார காவியத்தைச் செய்து கண்ணகி கற்பு, ஊழ்வினை, அரசதர்மம் மூன்றையும் கூறினுர்.

கோவலன் கொலையுண்டதற்குக் காரணம் ஊழ்வினையே என்று இளங்கோவடிகள் கூறுகின்ருர். அந்த ஊழ்வினை யாது?

கலிங்க நாட்டில் சிங்கபுரம் கபிலபுரம் என இரண்டு நகரங்கள் இருந்தன. சிங்கபுரத்தரசன் வசு என்பவனுக்கும் கபிலபுரத்தரசன் குமரன் என்பவனுக்குமிடையே போர் மூண்டது. அதனல் இரண்டு நகரங்களுக்குமிடையில் மக்கள் போக்குவரத்து நடைபெறவில்லை. ஆயினும் கபில புரத்திலிருந்த சங்கமன் என்பவன் தன்னிடமுள்ள நகைகளைச் சிங்கபுரத்தில் விற்றுப் பெரும்பொருள் தேடவிரும்பினன். அவனும் அவனுடைய மனைவியும் சிங்கபுரத்து அங்காடியில் தங்கள் அணிகலன்களைக் காட்டிக்கொண்டிருந்தனர். அப்போது அவர்கள் "கரந்துறைமாக்களில்" (அதாவது கபிலபுரத்தினர் எனத்தெரியாவண்ணம் சிங்க புரத்தினர்போல் வேடந்தரித்தவர்களாய்த்) தோன்றினர். அந்த நகரத்து அரசனுக்குக் கோத்தொழில் செய்வோன் (அதாவது அரசனுக்காக அந்த நகரத்தைப் பாதுகாக்கும் பொறுப்புடைய காவற்படைத் தலைவன்) ஆகிய பரதன் என்பவன் அவ்வழியாக வந்தவன் சங்கமன்மீது சந்தேகம் கொண்டான். கபிலபுரத்தரசனுடைய ஒற்றன் என்று எண்ணினன். அவனைப் பற்றிக்கொண்டு அரசனிடம் சென்றன். அரசன் ஆணையின்மேல் சங்கமனைக் கொல்வித்தான்.

இப்பரதன் கோவலனகவும் சங்கமன் பொற்கொல்லனகவும் பிறந்தனர். பரதன் சங்கமனைக் கொல்வித்ததால் கோவலனைப் பொற்கொல்லன் கொல்வித்தான். இவ்வாறு கோவலன் தன் ஊழ்வினை காரணமாகவே கொலையுண்டான் என்று இளங்கோவடிகள் கூறுகின்றர்.

தீமை செய்தவன் தீமையை அனுபவிப்பான் என்று மட்டுமின்றி அனுபவிக்கவேண்டும் என்றும் கூறலாம். ஆனல் போன பிறப்பில் கொலை செய்தான் என்பதை மட்டும் வைத்து, இந்தப் பிறப்பில் கொலையுண்ணவேண்டும் என்று கூற முடியாது. கொலை செய்தவன் எத்தகையவன், அவன் எவனை, எதற்காகக் கொலை செய்தான் என்பதையும் ஆராயவேண்டும்.

ஒரு நாட்டான் பிறநாட்டிற்குள் நுழைய விரும்பினல் அந்த நாட்டின் அனுமதி பெறுவது அவசியம். இந்த விதி

போர்க்காலத்தில் எப்போதும்விட அதிகக் கண்டிப்பாக நடைபெறும். அந்தக் காரணத்தினுல்தான் கபிலபுரம் சிங்கபுரம் இரண்டுக்குமிடையில் எவ்வித மக்கள் நடமாட்டமும் இல்லாமல் இருந்தது. எல்லோரும் ஓர் ஊரிலிருந்து மற்ற ஊருக்குப் போவதற்குத் துணிவரேல், அவர் போர் வீரராகவோ அல்லது அவர்க்கு உளவு அறிந்து உரைக்கும் ஒற்றராகவோ தான் இருப்பார்.

அதனுல் சங்கமன் கபிலபுரத்தில் பிறந்து சிங்கபுரத் தான்போல் வேடம்பூண்டு காணப்பட்டதால் அவனைப் பரதன் ஒற்றன் என்று எண்ணியதில் தவறில்லை. 'கரந் துறைமாக்கள்—ஒற்றர் முதலாயினர்' என்று வேங்கடசாமி நாட்டார் அவர்கள் கூறுவதும் காண்க. அதனுடன் பரதன் நகரத்தின் பாதுகாவலுக்கு அரசனுல் பொறுப்பாக்கப் பெற்றவன். ஆதலால் அவன் சங்கமனை ஒற்றன் என்று முடிவு செய்ததும், அதற்கேற்பக் கொல்வித்ததும் தவருகா. ஒற்றர்கள் பிடிபட்டால், அதிலும் போர்க்காலத்தில் பிடிபட்டால் கொலைத் தண்டனை பெறுவர் என்பது யாவரும் அறிந்ததே.

சென்ற பிறப்பில் எவ்வித குற்றமும் செய்யாத நிரபராதி ஒருவனை அநியாயமாய்க் கொலை செய்தால், அவ்வாறு கொலை செய்பவனே அடுத்த பிறப்பில் கொலையுண்ணத் தகுந்தவன் ஆவான். அவ்வாறின்றி நியாயமான காரணத்துக்காக நீதி முறைப்படி குற்றங்கள் செய்தவனைக் கொலை செய்ய நேர்ந்தால், அதற்காகக் கொலை செய்தவனை அடுத்த பிறப்பில் கொல்லச்செய்வது என்பது அறமாகாது.

பரதனுகிய கோவலன் தவறு செய்யவில்லை. சங்கமனுகிய பொற்கொல்லனே தவறு செய்தான். பரதன் தன் கடமையையே செய்தான். அதனுல் அடுத்த பிறப்பில் தண்டிக்கப்படவேண்டியவன் சங்கமனேயன்றிப் பரதன் அல்லன். அதனுல் கோவலன் கொலையுண்டதற்கு இளங்கோவடிகள் கூறும் ஊழ்வினைக் காரணம் கொஞ்சமும் பொருந்துவதாயில்லை.

அதுமட்டுமன்று. இந்தப் பிறப்பில் கோவலனைப் பொற்கொல்லன் கொலையுண்ணச் செய்தான். அதற்குக் காரணம் பொற்கொல்லனைக் (சங்கமனை) கோவலன் (பரதன்) கொன்றதாகும் ஊழ்வினைக் கொள்கையின்படி.

அப்படியானால் பரதன் சங்கமனைக் கொல்லக் காரணம் அதற்கு முந்திய பிறப்பில் சங்கமன் பரதனைக் கொன்றது என்று கூறவேண்டும். இவ்வாறு கூறிக்கொண்டேபோனால் இதற்கு முடிவே கிடையாது. என்றேனும் ஒரு பிறப்பில் ஒருவன் மற்றொருவனை ஊழ்வினை காரணமாகஇல்லாமலே கொன்றிருக்கவேண்டும். அதுமுதலே ஊழ்வினை என்பது தொடங்கியிருக்க வேண்டும். இவ்வாறு காரணம் கூறுவதால் எவ்விதப் பயனுமில்லை என்பது தெளிவாகும்.

கோவலன் கொலையுண்டதற்கு முந்திய பிறப்பில் அவன் செய்த தீவினை காரணமாவதுபோல் அரசன் செய்த தீவினையும் காரணமாகும் என்று இளங்கோவடிகள் கூறுகின்றார்.

அரசன் அறநெறி பிறழ்ந்து நடந்ததனால்தானே கோவலன் கொல்லப்பட்டான். அரசன் உயிர் துறந்தான். அவ்வாறு அரசன் இறப்பதற்கு ஊழ்வினை காரணம்.

ஆடித் திங்கட் பேரிருட் பக்கத்து
அழல்சேர் குட்டத்து அட்டமி ஞான்று
வெள்ளி வாரத்து ஒள்ளெரி உண்ண,
உரை சான் மதுரையோடு அரசுகேடு உறுமெனும்
உரையு முண்டே

ஆடி மாதம் தேய்பிறையில் அட்டமியும் கார்த்திகையும் சேர்ந்து வரும் வெள்ளிக்கிழமையில் அரசனும் அழிவான், ஊரும் எரியும் என்று முன்னாலேயே சோதிடர்கள் கூறியுள்ளார் என்று மதுரை நகரத்தின் தேவதை கண்ணகியிடம்கூறியது.

அதாவது கோவலன் மேற்கூறிய நாளில் கொலையுண்டால், அதே நாளில் அரசனும் இறப்பான் என்பது அவனுடைய ஊழ்வினை. அதனாலேயே அவன் நீதி தவறிக்

கோவலனை விசாரியாது கொல்லுமாறு ஆணை தந்தான் என்று இளங்கோவடிகள் கூறுகின்றார் (சிலப். 16 : 148–154).

ஆனால் கோவலன் கொலையுண்டதற்கு முந்திய பிறப்பில் செய்த தீவினையே காரணம் என்று கூறாமல், அரசனும் கோவலனும் இந்தப் பிறப்பில் செய்த தீச்செயல் காரணம் என்று கூற முடியாதா என்று ஆராய விரும்புகின்றேன். கோவலன் மரணத்திற்குக் காரணம் அரசனுடைய ஊழ்வினையுமன்று, கோவலனுடைய ஊழ்வினையுமன்று, இருவரும் காமத்தில் ஆழ்ந்திருந்ததேயாகும்.

கோவலன் கண்ணகியைக் கைவிடேன் என்று அங்கி சான்றாகக் கூறி வாழ்ந்துவந்தவன் அதை மறந்து காம வயத்தனாய் நகரநம்பியர் (பரத்தர்) திரிதரு மறுகில் சென்று மாதவியின் மாலையை வாங்கி அவள் வீடே தஞ்சமென்று தங்கி முன்னோர் தேடிவைத்த செல்வத்தையும் கண்ணகி அணிந்திருந்த அருங்கலன்களையும் அந்தக் காமதேவதையின் காலடியில் வைத்து வழிபாடு செய்யாதிருந்திருந்தால், அவன் மதுரைக்குச் சென்று மரணம் அடைந்திருக்க மாட்டான்.

இந்திரவிழாவன்று மாலையில் கோவலனும் மாதவியும் கடற்கரையில் சிலதியர் அமைத்த கட்டிலில் அமர்ந்தனர். கோவலன் அகப்பொருட்சுவையுடைய பல வரிப் பாட்டுக்களைப் பாடிக்கொண்டு வீணை வாசித்தான். அதனால் மாதவி இவன் வேறு மகளிரிடம் விருப்பமுடையவன் என்று எண்ணினாள். அவன் கையிலிருந்த வீணையை வாங்கித் தானும் வேறு மைந்தரிடம் விருப்பமுடையாள்போல அகப்பொருட் பாடல்களைப் பாடிக்கொண்டு வீணை வாசித்தாள். கோவலன் இதைக் கேட்டதும் அவளிடம் வெறுப்புக் கொண்டு அவளை விட்டு நீங்கினான்.

இவ்வாறு அவன் நீங்கியதற்குக் காரணம் ஊழ்வினை வந்து உருத்ததே என்று இளங்கோவடிகள் கூறுகின்றார்.

கோவலன் மதுரையிலுள்ள பொற்கொல்லனால் மடிய வேண்டும் என்பது அவனுடைய ஊழ்வினை. மதுரைக்குப் போகவேண்டுமானால் மாதவியைவிட்டு நீங்கவேண்டும். அதனால் ஊழ்வினையே அவர்கள் இருவரையும் பிரிப்பதாயிற்று என்று கவிஞர் கருதுகிறார்.

ஆனால் ஊழ்வினையின் உதவியில்லாமலே அவர்கள் பிரிந்ததற்குக் காரணம் கூறலாம். முதலில் கோவலன் பாடினான்; அவன் வேறு பெண்களிடம் ஆசையுடையான் என்று மாதவி எண்ணினாள். அவ்வாறு எண்ணக் காரணங்கள் இருக்கவே செய்தன.

கோவலன், மாதவி வீடே தஞ்சம் என்றிருந்தாலும் அவளுடனேயே எப்போதும் இருந்தான் என்பதில்லை. அவன் எப்போதும்

'வறுமொழி யாளரொடு வம்பப் பரத்தரொடு
குறுமொழிக் கோட்டி'

திரிந்ததாக அவனே கூறுகின்றான் (சிலப். 16:63-64).

இளங்கோவடிகளும் காவிரிப்பூம்பட்டினத்தில் தென்றல் உலவியது, கோவலன் பாணரொடும் பரத்தரொடும் திரிந்ததுபோல் இருந்ததாகக் கூறுகின்றார்.

வம்பப் பரத்தர் என்பவர் புதிய காமநுகர்ச்சியை விரும்பும் காமுகர் என்று அடியார்க்குநல்லார் கூறுகின்றார். ஆதலால் கோவலன் நாடோறும் புதுப்புதுப் பரத்தையை நாடிச் சென்றுகொண்டிருந்தான் என்பது போதரும்.

முன்பகல் தலைக்கூடி நண்பகல் அவள்நீத்துப்
பின்பகல் பிறர்த்தேரும் (கலி 47)

அதாவது முற்பகலில் ஒருத்தியிடத்தே கூடியிருந்து உச்சிக் காலத்தில் அவளைக் கைவிட்டுப் பலரிடத்தே சென்று மாலையில் கூடுதற்கு வேறு சிலரைத் தேடுகின்றவனாயிருந்தான் என்று கூறினால் தவறாகாது.

இவ்வாறு கோவலன் நாளுக்குநாள் அதிகமாக வெளியே அலைந்து திரிந்துவந்தபடியினால், மாதவி இவன் வேறு பெண்ணைக் கருதுகின்றான் என்று எண்ணியதில் வியப்பில்லை. இதற்கு ஊழ்வினையை இழுத்துக்கொண்டுவர அவசியமில்லை.

கோவலன் மாதவிக்குத் தன் மூதாதையர் தேடிவைத்த பொருள்களையும் மனைவியின் நகைகளையும் ஒவ்வொன்றாகக் கொடுத்து முடித்துவிட்டான். அவன் கையில் எதுவுமில்லை. பரத்தையர் பணத்தின்மீதே கண்ணுயிருப்பர். கோவலன் தன்னிடம் பணம் இல்லாததால் மாதவி மனம் வேறு எவர் மீதும் சென்றதோ என்று ஐயமுற்றாள் என்றால் அது மிகை யாகாது. ஆகவே கோவலனும் மாதவியும் பிரிந்ததற்கு ஊழ்வினையைக் கூறவேண்டிய அவசியமில்லை. அவ னுடைய கூடா ஒழுக்கமும், வறுமையுமே காரணமாகும். நிற்க.

கோவலன் காமத்தில் ஆழ்ந்து மாதவியுடன் ஆடிய தால்தான் மதுரை வரநேர்ந்தது என்றுகண்டோம். அங்கு வந்தபின்னரும் வந்த காரியத்தில் கருத்துடையனாயிருக்க வில்லை.

அவன் கவுந்தியடிகளுடனும் கண்ணகியுடனும் மதுரைக்குப் புறத்தேயிருந்த பள்ளி ஒன்றில் தங்கினான். மறுநாள் காலையில் கவுந்தியடிகளைத் தொழுது

தொன்னகர் மருங்கில் மன்னர்பின் ஞோர்க்கு
என்னிலை உணர்த்தி யான்வருவன்

அதாவது மதுரைமா நகரத்திலுள்ள வணிகர்க்கு நான் வந்துள்ள நோக்கத்தைக் கூறிவர விரும்புகின்றேன் என்று கூறினான்.

அதற்குக் கவுந்தியடிகள் கோவலனிடம்

வருந்தா தேகி மன்னவன் கூடற்
பொருந்துழி அறிந்து போது

அதாவது நீ மனவருத்தமின்றி மதுரைநகர்க்குச் சென்று நீங்கள் இருவரும் தங்கி இல்லறம் நடத்துதற்கு வேண்டிய வீடு ஒன்று அமர்த்திக்கொண்டு வருவாய் என்று கூறினர்.

அவ்வாறே கோவலன் மதுரைக்குள் சென்ருன். அவன் சென்ற நோக்கம் தன் இனத்தவராகிய வணிகரைக் கண்டு பேசித் தான் தங்க வீடும் வாணிகம் செய்யக் கடையும் ஏற்பாடு செய்யவேண்டும் என்பது. ஆனல் அவன் அந்த நோக்கத்தின்படி நடக்கவில்லை என்பதுமட்டுமன்றி, அதை அறவே மறந்துவிடவும் செய்தான்.

அவன் போன காரியம் வேறு, செய்த காரியம் வேறு. அவன் அன்று காலைமுதல் மாலைவரை நகரத்தில் வீதி தெரு முடுக்கு எல்லாவற்றிலும் அலைந்து திரிந்தான்; ஆனல் அவன் அந்த நகரத்திலிருந்த அறங்கூறவையம், பள்ளிகள், கோயில்கள், பட்டிமன்றம் முதலிய எதையும் பார்க்கவில்லை. அவன் நின்று சுவையாகப் பார்த்த வீதிகள் ஏழே. அவற்றையே இளங்கோவடிகள் ஊர்காண் காதையில் வர்ணிக்கின்ருர். அந்த வீதிகளை அடியார்க்குநல்லார் இளங்கோவடிகள் கூறும் அடைமொழிகளுடன் தனியாக எடுத்து எழுதுகின்ருர். அவை 1. மகிழ்தரு வீதி, 2. இருபெரு வீதி, 3. அங்காடி வீதி, 4. பயங்கெழு வீதி, 5. நலங்கிளர் வீதி, 6. அறுவை வீதி, 7. கூல வீதி.

இவற்றுள் மூன்று வீதிகளே அடைமொழிகளுடன் காணப்படுகின்றன. மகிழ்தரு வீதி என்பது பரத்தையரில் தாழ்ந்த தரத்தராகவுள்ள கடைகழி மகளிர் வாழுமிடம். பயங்கெழு வீதி என்பது பலவகை இரத்தினங்கள் விற்கும் கடைத்தெரு. நலங்கிளர் வீதி என்பது நாலுவகைப் பொருள்கள் விற்கும் கடைத்தெரு. இவ்வாறு இளங்கோவடிகள் இந்த மூன்று வீதிகளுக்கே அடைமொழி கொடுத்ததிலிருந்து கோவலன் அந்த வீதிகளைப் பார்ப்பதிலேயே அதிகப் பிரியமுடையவன் என்று விளங்கும்.

இளங்கோவடிகள் கோவலன் பார்த்த ஏழு வீதிகளையும் ஏறக்குறைய நூற்றைம்பது வரிகளில் வர்ணிக்கின்ருர்

ஆனல் மகிழ்தரு வீதிக்கோ அதற்குமட்டும் 75 வரிகள் பயன்படுகின்றன. அதிலிருந்து கோவலன் அந்தக் காமுர் வீதியிலேயே அதிக நேரத்தைக் கழித்தான் என்பது தெரிய வரும்.

இளங்கோவடிகள் மகிழ்தரு வீதி என்று கடையாய பரத்தையர் வீதியைக் கூறுவதுபோலவே, மாங்குடி மருதனுர் மணங்கமழ்சேரி என்று கூறுகின்ருர் (மதுரைக் காஞ்சி 329). அக்காலத்து மண்தேய்த்த புகழுடைய மைந்தர்க்கு அந்த வீதிகளும் சேரிகளுமே மணம் கமழ்ந்தன; மகிழ்ச்சி தந்தன.

கோவலன் மாதவியை விட்டு வந்துவிட்டபோதிலும் இன்னும் அவள் மயக்கத்தினின்று விடுதலை பெறவில்லை. அதனுல்தானே, கவுந்தியடிகளுடன் காட்டுவழியாக வரும் போது மாதவி அனுப்பிய கடிதத்தைக் கையில் வாங்கியதும் கோவலனுக்கு

உடனுறை காலத்து உரைத்த நெய்வாசம்
குறுநெறிக் கூந்தன் மண்பொறி

உணர்த்தியதும் அவன் அதைப் பிரித்துப் பாராது மயங்கி நின்ருன்.

அந்தணன் கொண்டுவந்த ஓலையின்மீது மாதவி தன் கூந்தலால் இலச்சினை யிட்டிருந்தாள். அது கோவலனுக்கு அவளுடன் கூடிய காலத்து அவள் பூசியிருந்த புழுகுநெய் யின் மணத்தை நினைப்பூட்டியது. புழுகுநெய் காமத்தைக் கிளறும் என்று பண்டைக்காலத்துக் காமநூலாரும் இக் காலத்துக் காமநூலாரும் கூறுவர்.

இவ்வாறு இன்னும் காமவெறி நீங்காதவனுக இருந்த படியினுல்தான் கோவலன் பரத்தையர் வீதிகளில் பாதி நேரத்துக்கு அதிகமாகக் கழித்தான். அந்த மயக்கத்தில் பொன்வணிகர் வீதிசென்றபோதுகூட, தான்வந்த நோக்கம் அவனுடைய ஞாபகத்துக்கு வராது இருந்துவிட்டது.

கோவலன் மதுரை நகர்க்குள் நுழைந்தவுடனேயே மகிழ்தரு வீதியில் காலெடுத்து வைத்துவிட்டான். அவ்வளவுதான், அந்த நிமிஷம்முதல் வந்த காரியத்தை அறவே மறந்துவிட்டான். அந்த வீதி தரும் காட்சிகளுக்கே இதயத்தைக் கொடுத்தான். மகிழ்ச்சிதரும் மங்கையர்வீதி மனத்தில் இடம்பெற்றபின் வந்த காரியத்துக்கு அதில் இடமேது?

அவன் முற்றிலும் காமஇச்சையினின்று விடுதலே பெற்றிருந்தால் தன்னுடைய இனத்தவரைக்கண்டு பேசி வீடும் கடையும் அமர்த்தியிருப்பான். அவ்வாறு செய்திருந்தால் அவன் மறுநாள் கண்ணகியின் சிலம்பைத் தெருவில் வைத்து விலேபேச நேர்ந்திராது; அதன் காரணமாகக் கொலேயுண்டதற்குக் காரணம் அவனுடைய காமமேயன்றி ஊழ்வினேயன்று.

கோவலன் கொலேயுண்டதற்கு அவனுடைய காமமட்டுமன்று, அரசனுடைய காமமும் காரணமாகும். அரசனுடைய அவையிலேயுள்ள அரங்கத்தில் நாடக மகளிர் ஆடினர்; பாடினர். அப்போது அரசனுடன் வீற்றிருந்த கோப்பெருந்தேவி, அரசனுக்கு ஆடிப் பாடின பெண்களுள் ஒருத்திமீது உள்ளம் சென்றது என்று எண்ணி வருந்திஞள்.

அரசி அரசனுடன் நீண்டகாலமாக வாழ்ந்து வருபவளாதலால் அரசன் உள்ளம் காமவயத்ததாக ஆகாதபோது ஆனதாக எண்ணமாட்டாள். இவ்வாறு அவன் காமத்திடம் எளியனுய் இருந்ததைப் பலதடவை அறிபவளாதலால்தான் இப்போது அரசன் உள்ளம் தவருகச் செல்கின்றது என்று உணர்ந்தாள்.

உணர்ந்தவள் நோவு என்று கூறிக்கொண்டு அந்தப்புரம் சென்ருள். அரசன் காமபரவசனுய் அமைச்சர் முதலாயினேரை விட்டுவிட்டு அந்தப்புரம் நாடிச் சென்ருன்.

இந்தச்சமயத்தில் பொற்கொல்லன் வந்து இராணியின் சிலம்பைத் திருடிய கள்வனேப் பிடித்துவிட்டதாகக் கூறிஞன். அதைக் கேட்டதும்

வினைவிளை கால மாதலின் யாவதும்
சினையலர் வேம்பன் தேரா னாகிக்

கள்வனைக் கொன்று சிலம்பைக் கொணர்க என்று கட்டளையிட்டான்.

'வினைவிளை காலமாதலின்' என்று

கூறுவதினும் 'காமம் கைமிகு காலமாதலின்' என்று கூறுவதே பொருந்தும். அரசனுடைய உள்ளத்தில் காமமே நிரம்பியிருந்தது. அந்த நிலைமையில் அவனால் எவ்வாறு ஆராயமுடியும், ஆராய்ந்து கூறுமுடியும்?

அரசன் காமவயத்தனாகஇல்லாமல் எப்போதும்போல் இருந்திருப்பானாகில் பொற்கொல்லன் கூறியதும், 'சரி விசாரிப்போம். அவனைக் கொணர்க' என்றே கூறுவான். கோவலனைக் கொணர்ந்ததும் அவன் கள்வனா அல்லனா என்று தீர விசாரிப்பான்; அல்லது வழக்கை அறங்கூறவையத்துக்கு அனுப்பிவைப்பான். அப்போது கோவலன் கள்வன் அல்லன் என்று தெரிந்துகொள்வான்; கோவலன் கொலையுண்ணமாட்டான்.

ஆகவே கோவலன் கொலையுண்டதற்குக் காரணம் அரசன் பொற்கொல்லன் வந்து கூறிய நேரத்தில் காம வுணர்ச்சியில் ஆழ்ந்துபோயிருந்ததே. இது தெளிவாகத் தெரியும்போது எதற்காக ஊழ்வினையைக் காரணம் என்று கூறவேண்டும், அவசியமில்லை.

இதுவரை கூறியதிலிருந்து கோவலன் மரணத்துக்கு இளங்கோவடிகள் கூறும் ஊழ்வினைச்செயல் காரணமாகாது என்பதும், கோவலன் காமமும் கோமகன் காமமுமே காரணமாகும் என்பதும் நன்கு விளங்கும்.

அரசன் நெடுஞ்செழியன் அறநெறிவழுவாதவன், செங்கோலோச்சுவதில் சிந்தையுள்ளவன்;

நெல்லு முயிரன்றே நீரும் உயிரன்றே
மன்னன் உயிர்த்தே மலர்தலை யுலகம்

மன்னனே மக்களின் உயிர்நாடி. மன்னன் முறைதவறினல் மக்கள் நலம் அழியும் என்பதை நன்ருக அறிந்தவன். அதனுல்,

மறைநா வோசை யல்ல தியாவது
மணிநா வோசை கேட்பது மிலனே
அடிதொழுது இறைஞ்சா மன்ன ரல்லது
குடிபழி தூற்றுங் கோலனு மல்லன்

இவனுடைய குடிகளில் யாரும் இதுவரை முறை வேண்டி இவனுடைய ‘‘கொற்றக் கோயில் தூங்கிய மணியைத்’’ துளக்கியதில்லை.

அறிவறை போகிய பொறியறு நெஞ்சத்து
இறைமுறை பிழைத்தோன்

என்று இவனுடைய செங்கோன் முறையைப் பழித்துத் தூற்றியதுமில்லை.

சோழநாட்டிலுள்ள ஓர் அந்தணன் சேர மன்னனிடம் பலவிதமான பரிசில்கள் பெற்றுத் திரும்பிவரும்போது பாண்டிய நாட்டிலுள்ள திருத்தங்கால் என்னும் சிற்றூரின்கண் போதிமன்றத்தில் தங்கி இளைப்பாறினன். அருகே விளையாடிக் கொண்டிருந்த பிராமணச் சிறுவர்களை அழைத்துத் தன்னுடன் வேதம் ஓதுமாறு கூறினன். அச்சிறுவர்களில் ஒருவன் அவனுடன் ஒரு பிழையுமின்றி ஒழுங்காக ஓதினன். அந்தணன் மனம் மகிழ்ந்து அவனுக்குத் தன்னிடமிருந்த பொருள்களைக் கொடுத்து அனுப்பினன். வரும் வழியில் ஊர்க்காவலர்கள் இவனுக்கு ஏது இந்தப் பொருள்கள்; எங்கோ திருடியிருக்க வேண்டும் என்று எண்ணி அவனைப் பிடித்துச் சிறையில் அடைத்தனர்.

மறுநாட் காலையில் மதுரைமாநகரத்திலுள்ள கொற்றவையின் கோயில் கதவைத் திறக்கமுடியவில்லை. அதை அரசனுக்கு அறிவித்தார்கள். அரசன் தன்னுடைய அரசியலில் உண்டான பழுது யாது என்று ஆராய்ந்தான். அந்தணச் சிறுவனை அடைத்து வைத்திருப்பதை அறிந்

தான். அவனை உடனே விடுவித்து அவன் காலில் விழுந்து மன்னிக்குமாறு வேண்டிக்கொண்டான்.

கோவலன் இறந்ததற்காக வருந்திய கண்ணகி அரசனிடம் வந்து வழக்குரைத்தாள். தன் கணவன் கள்வன் அல்லன் என்று மெய்ப்பித்தாள். அது கண்டதும் அரசன்

மன்பதை காக்கும் தென்புலங் காவல்
என்முதற் பிழைத்தது, கெடுக என் ஆயுள்

என மடிந்து வீழ்ந்தான். அவனுடைய உயிர் வளைந்த கோலை நிமிர்த்திச் செங்கோல் ஆக்கிவிட்டுச் சென்றது.

இவ்வாறு அறநெறி திறம்பா மன்னன் எவ்வாறு காவலரிடம் கோவலனைப் பிடித்து வாருங்கள், விசாரிக்கிறேன் என்று கூறுவதற்குப்பதிலாகக் கோவலனைக் கொன்று சிலம்பைக் கொணர்க என்று கட்டளையிட்டான்?

காரணம் ஊழ்வினையே என்று இளங்கோவடிகள் கூறுகின்றார். அன்று கொலையுண்ண வேண்டுமென்பது கோவலனுடைய ஊழ்வினை. அன்று இறக்கவேண்டும் என்பது அரசனுடைய ஊழ்வினை. இருவருடைய ஊழ்வினையும் சேர்ந்து அரசனை ஆராயாது கூறுமாறு செய்து விட்டன என்று எண்ணுகின்றார்.

அரசன் ஆராயாது கூறியது உண்மைதான். ஆனால் ஆராயாது கூறியதற்குக்காரணம் ஊழ்வினையன்று. அரசன் அமைச்சர்களுடனிருந்து அரசாங்க அலுவல்களைக் கவனித்துக் கொண்டிருக்கும்போது, பொற்கொல்லன் வந்து கூறியிருந்தால் ஆராயாது கூறியிருக்கமாட்டான். அப்போது ஆராயாது கூறியிருந்தால் ஒருவேளை ஊழ் என்றுகூடச் சொல்லலாம்.

ஆனால் பொற்கொல்லன் கூறியபோது அரசன் தன் வயத்தனாயிருக்கவில்லை. காமவயத்தனாகவே இருந்தான். அதற்காக அரசியை நாடிச் செல்லும் ஆத்திரத்திலிருந்தான். அந்த நேரத்தில் ஆராய்வது எங்ஙனம்? ஆதலால்

கோவலனைக் கொலை செய்யுமாறு ஆணை தந்ததற்குக் காரணம் அவனுடைய காமமேயன்றி ஊழ்வினையன்று.

இந்த விஷயத்தைக் குமரகுருபர சுவாமிகள் ஓர் அழகான உவமை மூலம் தெளிவாக விளக்குகின்றார்.

ஊற்றம் இறுவிளக்கம் ஊழுண்மை காண்டுமென்று
ஏற்றார் எறிகால் முகத்து

ஒரு விளக்கில் திரியும் நெய்யுமிட்டு ஏற்றிக் காற்று பலமாக வீசுமிடத்தில் வைக்கின்றேன். அது அணைந்துவிடுகிறது. அருகிலுள்ள ஒருவரிடம் அணைந்தது ஏன் என்று கேட்கின்றேன். அவர் காற்றுவீசியதால் என்று கூறாமல், அதற்கு அணையவேண்டிய ஊழ் அமைந்திருந்ததால் என்று கூறுவாராயின் அதை ஐந்து வயதுக் குழந்தைகூட ஏற்றுக் கொள்ளாது.

அதுபோலவே இருக்கின்றது, இளங்கோவடிகள், அரசன் காமவயத்தனாய் இருந்தபடியால் அவ்வாறு பணித்தான் என்று கூறாமல், ஊழ்வினை உண்மையால் பணித்தான் என்று கூறுவது. கோவலன் இறந்ததற்குக் கோவலன், கொற்றவன் இருவருடைய காமமே காரணம்; ஊழ்வினையன்று.

ஆகவே பண்டைப் பிறவிகளில் செய்த ஊழ்வினை உருத்துவந்து ஊட்டவில்லை. இந்தப் பிறவியில் செய்த ஊழ்வினையே உருத்து வந்தூட்டிற்று.

கோவலன் காமத்தால் அழிந்தான். கொற்றவன் காமத்தால் குன்றிய அறவுணர்ச்சியை மீண்டும் பெற்று அதற்காகத் தன் உயிரைக் கொடுத்துத் தன் வாழ்வைப் புனிதமாக்கினான்.

இளங்கோவடிகள் சிலப்பதிகார காவியத்தை இயற்றியதற்கு மூன்று காரணங்கள் கூறுகின்றார் என்றும் அவற்றுள் 'ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும்' என்பதை விளக்கிக்

காட்ட முயல்கின்றார் என்றும் கண்டோம். ஊழுண்மையை விளக்கிக் காட்ட விரும்பியதன் காரணம் யாது? இதுதான் காரணம் என்று அவர் தனியாகக் கூறவில்லை. ஆயினும் அவர் கொலைக்களக்காதையின் இறுதியில்

நண்ணும் இருவினையும், நண்ணுமின்கள் நல்லறமே
கண்ணகி தன்கேள்வன் காரணத்தால் — மண்ணில்
வளையாத செங்கோல் வளைந்ததே, பண்டை
விளைவாகி வந்த வினை.

என்று கூறுவதிலிருந்து அவருடைய மனத்தில் இரண்டு காரணங்கள் இருந்தன என்று அறியக் கிடக்கின்றது. ஒன்று ஊழுண்மையைக் கூறி உலகத்தாரை ஒழுக்கத்தை மேற்கொள்ளச்செய்தல்; மற்றொன்று நல்லோர்க்குத் தீது ஏற்படுவதன் காரணம் ஊழுண்மையே என்று காட்டுதல். இவ்விரண்டையும் தனித்தனியே ஆராய விரும்புகின்றேன்.

நற்செயல்களையே செய்யவேண்டும், தீச்செயல்களைச் செய்யலாகாது என்று மக்களிடம் கூறினால் மட்டும் போதாது. அவர்கள் ஏன் என்று கேட்பார்கள். காரணத்தைக் கூறினால் மட்டுமே அவர்களுடைய கருத்து நல்லதை நாடவும் தீயதை விலக்கவும் செய்யும். அதனால் இளங்கோவடிகள்

நண்ணும் இருவினையும்,
நண்ணுமின்கள் நல்லறமே

அதாவது ஒரு பிறப்பிற் செய்த வினைகள் மறுபிறப்பில் வந்து பயன் தரும். நல்ல செயல் செய்தால் நல்ல பயன் கிடைக்கும். ஆதலால் நல்ல செயல்களே செய்யுங்கள் என்று கூறுகின்றார்.

அல்லித்தாள் அற்றபோழ்தும்
அறாதநூல், அதனைப்போலத்
தொல்லைத்தம் உடம்புநீங்கத்
தீவினை தொடர்ந்து நீங்கா. (சிந்தா. 2876)

நல்ல செயலோ தீய செயலோ எதைச் செய்தாலும் அதன் பயன் செய்தவனை அடுத்த பிறப்பில் வந்து சேரவே செய்யும்; அவன் ஒளிந்துகொள்ள முடியாது. உம்மை வினைவந்து உருத்தல் ஒழியாது. (மணி. 26:32).

பல்லாவுள் உய்த்து விடினும் குழக்கன்று
வல்லதாம் தாய்நாடிக் கோடலை — தொல்லைப்
பழவினையும் அன்ன தகைத்தே தான்செய்த
கிழவனை நாடிக் கொளற்கு (நாலடி 101)

ஆகவே இளங்கோவடிகள் நன்மை செய்தால் நன்மை கிடைக்கும் என்று ஆசை காட்டியும், தீமை செய்தால் தீமை கிடைக்கும் என்று அச்சங் காட்டியும் மக்களிடம் ஒழுக்கத்தை உண்டாக்க விரும்புகிறார். ஆனால் சன்மானத்தை விரும்பியோ தண்டனைக்குப்பயந்தோ மேற்கொள்ளும் ஒழுக்கம் உண்மையான ஒழுக்கமாகாது. இத்தகைய ஒழுக்கத்தை திருவள்ளுவர் கீழோருடைய ஒழுக்கம் என்பர்.

அச்சமே கீழ்களது ஆசாரம், எச்சம்
அவாவுண்டேல் உண்டாம் சிறிது. (1075)

அதாவது கீழோர் தண்டனைக்குப் பயந்தோ அல்லது நலம் பெறலாம் என்ற ஆசையாலோ ஒழுக்கத்தை மேற்கொள்வார். எவ்விதக்காரணமுமின்றி இயல்பாகவே ஒழுக்கத்தை மேற்கொள்ளமாட்டார்கள். ஒழுக்கமாக நடப்பதே மனிதனுடைய பண்பு என்று எண்ணி நடப்பவரே ஒழுக்கமுடையவர்.

பயன் கருதி ஒழுகுபவர் ஒழுக்கமுடையவராகார். மனிதன் செய்யவேண்டியது அறம் என்றும், செய்யாமல் விடவேண்டியது மறம் என்றும் உணர்ந்து நடப்பவரே ஒழுக்கமுடையவர்; அதையே வள்ளுவர்

செயற்பால தோரும் அறனே, ஒருவர்க்கு
உயற்பால தோரும் பழி. (40)

என்று கூறுகின்றார். அவ்வாறு செய்வதைப் பகவத்கீதை

"நிஷ்காம கருமம்" அதாவது பயன் விரும்பாத பணி என்று கூறும். அவ்வாறு செய்பவனை வள்ளுவர்

இன்பம் விழையான் வினைவிழைவான்

என்று அழகாகக் கூறுகிறார்.

பயன் பெறக் கருதி ஒழுகுவதை வாணிகமாகவே பண்புடையோர் கருதுவர். அதனால்தான் சங்கப்புலவர் முடமோசியார், ஆய் என்னும் அரசனுடைய வண்மையைக் கூறும்போது

இம்மைச் செய்தது மறுமைக்கு ஆமெனும்
அறவினை வணிகன் ஆஅய் அல்லன்,
பிறரும் சான்றோர் சென்ற நெறியென
ஆங்குப் பட்டன்று அவன்கை வண்மையே
(புறம் 134)

என்று கூறுகின்றார். ஆய் அறத்தை விற்றுப் பலன்பெறும் வாணிகன் அல்லன், சான்றோர் நெறி என்று அறம் செய்பவன். அதுவே உண்மையான ஒழுக்கம்.

அப்படியாயின் அறத்தின் பயன்தான் யாது? அறம் செய்தால் அதற்குப் பயன் கிடையாதோ என்று கேட்பின் அக்கேள்விகளுக்கும் வள்ளுவப் பெருந்தகை விடை கூறுகின்றார்.

அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது (45)

இல்வாழ்க்கை என்று கூறியதால் இது இல்லறத்தில் நிற்பவனுக்கே உரியது என்று எண்ணலாகாது. உலகத்தில் மக்களில் மிகச் சிலரே துறவிகள்; அவர்களுக்கும் இல்லறத்தார் ஒழுக்கம் விலக்கன்று.

இக்குறள் கூறுவது யாதெனில் மனிதனுடைய வாழ்க்கையின் பண்பு அன்பும் அறமுமுடைய ஒழுக்கமே. அதுவே அதன் பயனுமாகும். அறத்தின் பயன் அறமே என்று எமர்சன் என்னும் அமெரிக்க ஞானி கூறுவது உண்மையே.

மனிதன் மனிதனாக இருந்தால் போதும் என்று மார்க்டுவெயின் என்ற அறிஞர் கூறினார். மனிதனை மனிதனாக்குவது, மனிதனுக்கு மனிதன் என்று கூறத்தகும் விழுப்பத்தைத் தருவது ஒழுக்கமே.

ஆதலால் ஒழுக்கமாக நடத்தலே மனித இயல்பு என்று எண்ணி நடப்பவனே ஒழுக்கமுடையவன். இளங்கோவடிகள் கூறுவதுபோல் ஊழ்வினை உருத்துவந்து ஊட்டும் என்று எண்ணி நடப்பவன் ஒழுக்கமுடையவனாகமாட்டான். ஒருவனுடைய செயல் நற்செயலாக இருக்கலாம்; ஆனால் அவன் அதை ஊழ்வினையை எண்ணிச் செய்தால் அது நற்செயலாகமாட்டாது. நற்செயலை நற்செயலுக்காகவே செய்யும்போதே அது நற்செயல் என்று கூறத்தகும். நிற்க,

இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தில் கூறும் ஊழ்வினை உருத்துவந்து ஊட்டும் என்னும் வாக்கியத்தை ஒருவன் இப்பிறப்பில் படிக்கிறான். அதுமுதல் அவன் நல்வினையே செய்கின்றான்; தீவினை செய்வதில்லை; அதனால் அடுத்த பிறப்பில் அவனைத் தீவினை வந்து சூழ்வதில்லை.

ஆனால் சிலப்பதிகாரத்தைப் படிப்பதற்கு முன் அவன் தீவினை செய்திருந்தால், அது அடுத்த பிறப்பில் அவனைச் சூழும். அதுபோல் அவன் சென்ற பிறப்பில் செய்த தீவினை இந்தப் பிறப்பில் வந்து விளையும். இவ்வாறு வந்து சேரும் தீவினையைத் தடுக்கவோ அதன் வேகத்தைத் தணிக்கவோ ஏதேனும் வழியுண்டோ? அதுபற்றி இளங்கோவடிகள் யாதும் கூறவில்லை.

அவர் கூறுவதைப் பார்த்தால் தடுக்கவும் முடியாது; தணிக்கவும் முடியாது; அனுபவித்துத் தீர்க்கவே வேண்டும். 'சிறுகா, பெருகா, முறை பிறழ்ந்து வாரா' (நாலடி 110) என்று கருதுவதாகவே தெரிகின்றது.

ஆனால் ஊழ்வினைக் கொள்கையைக் கூறும் எந்த மதமும் ஊழ்வினையைத் தடுக்க முடியாது என்று கூறவில்லை. அதை இல்லாமற் செய்வதற்குக் கூறும் வழிதான் வேறு

படும். ஆனால் இல்லாமற் செய்துவிடலாம்; அதில் சந்தேக மில்லை.

இளங்கோவடிகளோ இனிமேல் ஊழ்வினை உண்டா காமல் இருப்பதற்கான வழிமட்டுமே கூறுகின்றார். இதற்கு முன் வந்த ஊழ்வினையை அழிப்பதற்கான வழியைக் கூற வில்லை.

இளங்கோவடிகள் சமண சமயத்தினர். சமண சமய மானது ஆன்மா என்னும் குளத்துள் வரும் மடையை அடைத்தால் புதுநீர் வராது என்றும், பழைய நீரைப் பாறும் வண்ணம் செய்தால் ஆன்மா தூய்மையுறும்; வீடுபெறும் என்றும் கூறும். மடையை அடைப்பதும் வற்றவைப்பதும் ஒழுக்கமே என்றும் கூறும். நீலகேசி என்னும் சமண நூலானது இந்த உண்மையைத் தெளிவாகக் கூறுகின்றது.

> பெரும்பாவம் அறத்துய்த்துப்
> பெறுதும்யாம் வீடென்னேம்,
> அரும்பாவ காரிநீ
> யாவர்வாய் அதுகேட்டாய் ?
> வரும்பாவம் எதிர்காத்து,
> மன்னும்தம் பழவினையும்
> ஒருங்காக உதிர்த்தக்கால்
> உயிர்த்தூய்மை வீடென்றான் (மொக்கல 313)

இதற்கு உரை எழுதிய சமயதிவாகர வாமன முனிவர் 'கரும பலமெல்லாம் நேராக அனுபவித்துப் பின்பு வீடு பெறுதும் என்று யாம் சொல்லோம் ... ... சன்மார்க்க அனுஷ்டா னத்தால் வரும் புண்ணியம், பாபங்களையும் கெடுத்துத் தானும் கெடும்; ஆத்மாவின்கண் மல நீக்கத்தால் பிறக்கின்ற தூய்மையே வீடாகும்' என்று விளக்குகின்றார்.

இளங்கோவடிகள் போற்றுகின்ற சமணப் பெரியாரான வள்ளுவரும்

> ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்
> தாழாது உஞற்று பவர் [620]

என்று உறுதி கூறுகின்றார்.

பின் காலத்திருந்த சமண முனிவரான திருத்தக்க தேவரும்

மெய்வகை தெரிதல் ஞானம்;
விளங்கிய பொருள்கள் தம்மைப்
பொய்வகை யின்றித் தேறல்
காட்சி; ஐம்பொறியும் வாட்டி
உய்வகை உயிரைத் தேயாது
ஒழுகுதல் ஒழுக்கம்; மூன்றும்
இவ்வகை நிறைந்த போழ்தே
இருவினை கழியு மன்றே [1436]

என்று கூறுகின்ருர். இருநூறு ஆண்டுகளுக்குமுன் வாழ்ந்த சைவசமயப் பெரியாரான குமரகுருபர சுவாமிகளும்

உலையா முயற்சி களைகண ணூழின்
வலிசிந்தும் வண்மையு முண்டே

என்று எல்லா மக்களுக்கும் ஊக்கமும் உற்சாகமும் ஊட்டு கின்ருர்.

ஆதலால் அடுத்த பிறப்பில் நன்மை வருமென்ருே தண்டனை கிடைக்குமென்ருே கூறுவதைவிட இப்பிறப்பில் ஒழுக்கமாயிருந்தால் எல்லா வினைகளையும் வென்றுவிடலாம் என்று கூறுவதாலேயே பயன் உண்டாகும். ஊழ்வினை என்று அச்சுறுத்துவதால் ஒழுக்கமுண்டாகாது; ஊழ் வினையை வெல்லலாம் என்று உரைத்தால்மட்டுமே ஒழுக்க முண்டாகும்.

இளங்கோவடிகள் ஊழுண்மையைக் கூறுவதற்கு மற் ருெரு காரணம் நல்லவர்களுக்குக் கேடு விளைவது அத ஞலேயே என்று காட்டுவதற்கே என்று கண்டோம். ஆம் உலகத்தில் நல்லவர்களாயிருப்பவர்கள் திடீரென்று வேறு எவ்விதக் காரணமும் காட்ட முடியாத விதத்தில் கேடு அடைகின்றனர். அவர்கள் ஏதேனும் தவறு செய் திருந்தால், அதுதான் காரணம் என்று கூறிவிடலாம். ஆனல் அவர்களோ நல்லவர்கள்; எவ்விதத் தீமையும் செய்

யாதவர்கள். அப்படிப்பட்டவர்களுக்குத் தீமை விளைந்தால் அதற்குக் காரணம் ஊழ்வினை என்றே இளங்கோவடிகள் கூறுகின்றார்.

அதற்குச் சான்றாக அரசனுடைய மரணத்தையும் கோவலன் கொலையுண்டதையும் கூறுகின்றார். அரசன் செங்கோல் மன்னனாகவிருந்தான்; அவனுடைய கோல் வளையாதிருந்தது. அங்ஙனமிருந்தும் அது வளையவும் அவன் மடியவும் நேர்ந்ததே. அதற்குக் காரணம் யாது? அவனுடைய ஊழ்வினையே என்று இளங்கோவடிகள் கூறுகிறார். ஆனால் அவனுக்கு உருத்துவந்து ஊட்டிய ஊழ்வினை இதுவென்று கூறவில்லை. அதுவுந்தவிர அவன் இறந்ததற்குக் காரணம் அவனுடைய காமவுணர்ச்சியேயன்றி அவனுடைய ஊழ்வினையன்று என்று முன்னமே கண்டோம். கண்ணுக்குத் தெரியும் காமத்தைக் கூறாமல், கண்ணுக்குத் தெரியாத ஊழ்வினையை இழுத்துக்கொண்டுவர வேண்டியதில்லை.

அரசன் நல்லவனாயிருந்தும் ஊழ்வினையால் மடிந்தது போலவே கோவலனும் நல்லவனாயிருந்தும் ஊழ்வினையாலேயே மடிந்தான் என்பது இளங்கோவடிகள் கருத்து.

கோவலன் மதுரை நகரத்தைப் பார்த்துவிட்டுத் திரும்பினபோது கவுந்தியடிகளுடன் காவிரிப்பட்டினத்து மறையவனான மாடலன் என்பவன் உட்கார்ந்திருக்கக் கண்டான். கண்டதும் அவனைப்போய் வணங்கினான். அப்போது மாடலன் அவனுடைய நிலைமையைப் பார்த்து அப்பா நீ

இம்மைச் செய்தன யானறி நல்வினை
உம்மைப் பயன்கொல் ஒருதனி உழந்தித்
திருத்தகு மாமணிக் கொழுந்துடன் போந்தது

என்று கூறி வருந்தினான்.

அதன்பின் தன்னுடைய கூற்றுக்குச் சான்றாகக் கோவலன் செய்த மூன்று நற்செயல்களைக் கூறுகின்றான்.

கோவலனுக்கு மாதவியிடம் மணிமேகலை என்ற மகவு பிறந்தபோது கோவலன் பலதானங்கள் செய்தான். அப்

போது தானம் பெறவந்த பார்ப்பான் ஒருவனை அங்கு நின்ற யானை தன் துதிக்கையால் பற்றியது. உடனே கோவலன் அவனை யானையினின்றும் விடுவித்தான்.

ஒருசமயம் ஏழைப் பார்ப்பான் ஒருவன் தன் மனைவிமீது கோபங்கொண்டு அவளை விட்டுப் பிரிந்து காட்டுக்குப் போனான். அவள் நிர்க்கதியாய் வருந்தினாள். அதையறிந்த கோவலன் அவளுக்குப் பொருள் கொடுத்தான். ஆள் அனுப்பிக் கணவனை வரவழைத்து இருவரையும் சேர்த்து வைத்தான்.

மற்றொரு சமயத்தில் பூதசதுக்கத்திலிருந்த பூதமானது பொய்ச் சான்று பகர்ந்தவன் ஒருவனைப்பற்றி இழுத்தது. அப்போது கோவலன் அப்பூதத்திடம் தன்னுடைய உயிரைப் பலியாகக்கொண்டு அந்தப் பொய்யனை விட்டுவிடுமாறு வேண்டினான். பூதம் இசையாதுபோகவே இறந்தவன் உறவினர்க்குப் பணம்கொடுத்து உதவினான்.

இந்தமூன்று செயல்களையும் வைத்து இளங்கோவடிகள் கோவலனை நல்லவன் என்று கூறுவது போலவே இக்காலத்து அறிஞர்களும் கூறுகிறார்கள். சிலர் அவனைக் கொடை வள்ளல் என்றும், கருணை மறவன் என்றும் கருதுகின்றனர். சிலர் உடல் பொருள் ஆவி மூன்றாலும் மன்னுயிர்க்கு நன்மையே நாடிச் செய்தவன் என்று கூறுகிறார்கள்.

இவர்கள் போற்றும் கோவலனுடைய செயல்கள் மூன்றும் நற்செயல்கள்தான்; அறநெறியின் பட்டவையே. ஆயினும்,

1. நற்செயல்களாயிருப்பவை சில வேளைகளில் கறையுற்று நற்செயல்களாக இல்லாமல் போவதுமுண்டு.

2. ஒருவன் செய்யும் இரண்டொரு நற்செயல்களை மட்டும் கொண்டு அவனை முற்றிலும் நல்லவன் ; எவ்விதத் துன்பமும் அடையத்தகாத அளவு சிறந்தவன் என்று கூற முடியாது.

கோவலன் செய்தனவாக மாடலன் கூறிய மூன்று செயல்களும் பொதுவாகப் பார்த்தால் நல்லனவே. பிறர் உயிரைக் காப்பாற்றினன். பிறர்க்குப் பொருள் கொடுத்தான். பிறர்க்காக உயிரைக்கொடுக்கத் தயாராயிருந்தான்.

ஆனல் இவ்வாறு பிறரிடம் காட்டிய கருணையில் ஆயிரத்தில் ஒரு பங்கு பதினயிரத்தில் ஒரு பங்கு - ஓரணுவளவு கருணை, தன்னைப் பெற்றெடுத்த தாய் தந்தையரிடமும் தன்னைக் கைப்பிடித்த மனைவியிடமும் காட்டியிருந்தால் அவனை, நல்லவன் என்று கூற எவ்விதத் தடையுமிருக்க மாட்டாது. ஆனல் அவனே அவர்களை உயிரோடுவைத்து வதைத்தான். பொய்ச்சான்று பகர்ந்தவனுக்காக உயிர் கொடுப்பான். ஆனல் பெற்றோர்க்காகவும் மனைவிக்காகவும் போற்ரு வொழுக்கத்தைக் கைவிட மாட்டான். என்னே! அறிஞர் போற்றும் இவன் கருணை!

இவன் கொடைவள்ளலாம். ஆம் பரத்தை மகள் விழாவில் பணத்தை வாரிக்கொடுக்கத்தான் செய்தான். ஆனல் அவன் கொடுத்த பணம் அவனுக்கு ஏது? அவன் தேடியதா? அன்று. முன்னேர் தம்மை ஒறுத்துத் தேடிவைத்த பொருள். தான் தேடிய பொருளைத் தருவதன்ரே தானம் எனப்படுவது. 'தாளாற்றித் தந்த பொருளைத் தக்கார்க்குத் தருவதே வேளாண்மை'.

முன்னேர் தேடிய பொருளை மட்டுமே செலவுசெய்தான் என்பதில்லை. கண்ணகிக்கு அவளுடைய பெற்ரேர் பூட்டிய நகைகளையும் கொஞ்சமும் நாணமின்றிக் கழற்றிக்கொண்டு போய்ப் பாழாக்கினன். இதை எல்லாம் கொடை என்றும் வண்மை என்றும் கூறுவது அந்தப் புனிதமான சொற்களைச் சேற்றில் ஆழ்த்துவதேயாகும்.

மனைவியைவிட்டுப் பிரிந்து காட்டுக்குச் சென்றவனைக் கூட்டிவந்து மனைவியுடன் சேர்த்து வைத்தவனுக்கு மாதவியிடம் தான் தங்கியிருப்பது தவறு என்று தோன்ருத காரணம் யாது? ஏழைப் பார்ப்பனியின் இல்லற தர்மம்

இனிதாக நடக்க வழி செய்தவன் தன்னுடைய மனைவியும் அவ்வாறு நலம்பெறவேண்டும் என்று எண்ணாத காரணம் யாது? மனைவியை விட்டு விட்டுக் காட்டுக்குப் போவது தான் தவறோ? காமக்கிழத்தி காலடியில் கிடப்பது தவறாகாதோ?

இவ்வாறு கோவலன் செய்ததாகக்கூறும் நற்செயல்கள் அனைத்தும் கறையுற்றனவே என்பதில் ஐயமில்லை. கறையுறவில்லை, சரியானவையே என்று வைத்துக் கொண்டாலும் இந்த மூன்று நற்செயல்களை வைத்துக் கோவலனை நல்லவன், தீங்குபெறத் தகாதவன் என்று கூற முடியாது.

அவன் அக்கினிசாட்சியாகக் கை நெகிழவிடாமலிருப்பதாகச் சொல்லி மணந்த மனைவியை வருந்தவிட்டு மாதவியிடம் போய்ச் சேர்ந்தான். கண்ணகியின் மென்தோளைத் துறந்து மாதவியின் மென்தோளை அணைந்தான். கண்ணகி மனைவி; அவளுடைய மென்தோள் தாமரைக் கண்ணான் உலகினும் இனியது (குறள் 1103). மாதவி பரத்தை, அவளுடைய மென்தோள் 'புரையிலாப் பூரியர்கள் ஆழும் அளறு' (குறள் 919). கண்ணகி தோள் தேவலோகம்; மாதவி தோள் நரகலோகம். ஆகவே கோவலன் காதல் இன்பத்தைவிட்டுக் காமவின்பத்தை நாடி அந்தச் சேற்றில் திளைத்தான். அதன் காரணமாக

1. அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம் என்பதை மறந்தான். அவர்களுடைய மனத்தைப் புண்ணாக்கினான்.

> இருநிதிக் கிழவனும் பெருமனைக் கிழத்தியும்
> அருமணி யிழந்த நாகம் போன்றனர்

2. கண்ணகியை வெறுத்து மாதவியிடம் சென்று மனைவிக்கு எல்லா வகையிலும் துன்பமிழைத்தான். துக்கத்தில் ஆழ்த்தினான். வாழ்வைப் பாழாக்கினான்.

3. மூதாதையர் தேடிவைத்த பொருளை எல்லாம் மாதவிக்கு ஒவ்வொரு நாளும் ஆயிரத்தெட்டுக் கழஞ்சு பொன் பரிசமாகப் பூவிலையாகக் கொடுத்து அழித்தான்.

4. காமக்கிழத்தியிடம் பிறந்த மகளுக்குக் கண்ணகி மகளுக்கு இடவேண்டிய குலதேவதையின்பெயரை இட்டுக் குலத்துக்கு மாசிழைத்தான்.

5. இவை எல்லாம் போதாவென்று வீட்டிலிருந்து பெற்றேரைப் பேணுதல், மனைவியை மகிழ்வித்தல், மக்களைப் பெற்றெடுத்தல், தொழில் செய்து பொருளீட்டுதல், அறவோர்க்களித்தல், அந்தணர் ஓம்பல், துறவோர்க்கெதிர்தல், விருந்தெதிர்கோடல் போன்ற இல்லற தர்மங்களைச் செய்யாமல் நாள் முழுவதும் புதுப்புதுப் பரத்தையரைத் தேடும் பரத்தரோடும், புதுப்புதுப் பரத்தையரிடம் கொண்டு சேர்க்கும் பாணரோடும் (கலி 96:35.6) அலைந்தான்.

இவ்வாறு காமத்தில் ஆழ்ந்தவனுகவும் அதன் காரணமாகத் தன்னைச் சேர்ந்தவர்கள் அனைவர்க்கும் கேடு சூழ்ந்தவனுகவுமுள்ள ஒருவனை எவ்வாறு நல்லவன் என்று கூற இயலும்? அவன் செய்த இரண்டொரு செயல்கள் நல்லன என்றே கொண்டாலும் தனிமரம் தோப்பாகாது. குடும்பத்தைப் பாழாக்கியவனைக் குறையற்றவன் என்று கூறுவது எப்படி? பயிரை அழித்த வேலியைப் பாராட்டுவது எங்ஙனம்?

நல்லவனுகவுள்ள ஒருவன் எவ்விதத் தவறும் செய்யாத போதிலும் இன்னல் அடைந்தான் என்றல் அப்போது வேண்டுமானல் அவனுடைய இன்னலுக்குக் காரணம் கூறுவதற்கு ஊழ்வினையிடம் சரண் புகலாம்.

ஆனல் அரசனைப்போல் நல்லவனுயிருந்தும் தவறு செய்தாலும், கோவலனைப்போல் ஆதிமுதலே தவறுசெய்து வந்தாலும் அப்போது அவர்கள் அடையும் கேட்டுக்கு அவர்களுடைய தவறே, காமமே காரணமாகும். அதை விட்டு ஊழ்வினையைக் கற்பிப்பது பொருந்தாது.

கோவலனும் கொற்றவனும் அழிந்தது காமத்தால் என்று கொள்ளினும் அவர்கள் காமத்தில் ஈடுபட்டதற்குக் காரணம் ஊழ்வினையேயன்றே என்று சில அறிஞர்கள் கேட்பர்.

அப்படியானல் ஒருவன் இப்பிறப்பிற் செய்த ஒவ்வொரு செயலுக்கும் காரணம் முற்பிறப்பிற் செய்த ஊழ்வினையே என்று கூறவேண்டியதாக ஆகும். அப்போது அவன் செய்யும் செயல் நற்செயலோ தீச்செயலோ அதற்கு அவன் பொறுப்பாளி ஆகான். அவன் ஊழ்வினை கையில் வைத்து ஆட்டும் பொம்மையே ஆவான்.

எவன் தான் செய்யும் செயலுக்குப் பொறுப்பாளி அல்லனே அவனை அந்தச்செயல் நல்லதாயிருந்தால் பாராட்டவும் தீயதாயிருந்தால் கண்டிக்கவும் முடியாது.

அத்துடன் அவன் ஊழ்வினை காட்டும் வழியிலேயே நடக்க வேண்டியவனுயிருப்பதால் அவன் ஊழ்வினையை ஒழிப்பதற்காக எதுவும் செய்ய முடியாது. அவன் ஊழ்வினையின் பிடிப்பிலிருந்து எந்த நாளும் விடுதலை பெற முடியாது.

அன்பர்களே! இதுகாறும் ஆராய்ந்ததன் பயனுக நாம் காணும் முடிவு யாதெனில்

1. முதலாவதாக இளங்கோவடிகள் ஊழ்வினையை நிலைநாட்ட மேற்கொண்ட முயற்சி வெற்றி பெறவில்லை என்பதும்,

2. இரண்டாவதாக ஊழ்வினையைக்காட்டி உண்டாக்கும் ஒழுக்கம் உண்மையான ஒழுக்கமாகாது என்பதும்,

3. மூன்ருவதாக, ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும் என்று கூறுவதினும், உருத்துவரும் ஊழையும் ஒழுக்கமுடையார் உப்பக்கம் கண்டுவிடுவர் என்று கூறுவதே சாலப் பொருந்தும் என்பதுமாகும்.